2015, May 16 - 31

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/125/News/2015



## மகிந்தவை மீண்டும் கொண்டு வருதல்

### ஒரு எதேச்சாதிகார அரசியல் திட்டம்

## வசதி படைத்தோருக்கு வசதியான நீதித்துறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA................IN₹ | 50.00 | CANADA........CAN$ | 10.00 | USA...........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 100.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK.............GB£ | 5.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS..............CHF | 10.00 | EUROPE..EU€ | 5.00 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீரகேசரி
ePaper



URL : http://epaper.virakesari.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்




நாம் வளர்க்கப்பட்ட சூழ்நிலைக்குள் இருந்து வெளியே வராவிட்டால் உலகம் எவ்வளவு பெரியது என்பதை எம்மால் விளங்கிக்கொள்ள முடியாமல் போகும்.

- அஞ்சலீனா ஜோலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமகாலம்

2015, மே 16 - 31

பக்கங்கள் - 68





**10** மகிந்தவை மீண்டும் கொண்டு வருதல் ஒரு எதேச்சாதிகார வேலைத்திட்டம்

**16** சுதந்திரக்கட்சி எதிர்நோக்கும் சிக்கல்

**20** அரசியலமைப்புக்கான 19வது திருத்தத்தின் அரசியல் அனுபவங்கள்

**25** தேர்தலுக்குப் பின்னரான தமிழர் அரசியல்

**29** ரணிலின் திட்டமும் சிறிசேனவின் குழப்பமும்

**34** வசதி படைத்தோருக்கு வசதியான நீதித்துறை

**37** 19வது திருத்தத்தால் மக்கள் பெற்ற நன்மைகள் யாவை?

**40** 19 வருடங்கள் கடந்தும் பரபரப்பு ஓயாத வழக்கு

**47** பிரதமர் மோடியின் சீன விஜயம்

**53** இந்தியாவுக்கு மட்டுமல்ல அண்டை நாடுகளுக்கும் மோடி ஒரு உந்துசக்தி

**56** ஐரோப்பாவிற்குள் நுழையும் ஆபிரிக்க, மத்தியகிழக்கு அகதிகள்

**59** பாலஸ்தீனம் எதிர்நோக்கும் கடுமையான சவால்















*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# மீண்டும் எதற்காக ராஜபக்ஷ

சுமார் ஒரு தசாப்தகாலமாக நாட்டை ஆட்சி செய்த பிறகு கடந்த ஜனவரியில் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்ட ஜனாதிபதியை பிரதமராக மீண்டும் பதவிக்குக்கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கையை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பிரசாரங்கள் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைவரத்தில் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கின்ற விசித்திரங்களில் ஒன்று. 'பிரகாசமான எதிர்காலத்துக்காக மகிந்த' என்று சமூக வலைத்தளங்களில் சுலோகம் வேறு.

முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவாக முன்னெடுக்கப்பட்டுவருகின்ற பிரசாரங்களில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற உத்வேகம் 'மகிந்த ராஜபக்ஷ மீண்டும்' வந்துவிடுவாரோ என்று பலருக்கும் மருட்சியை ஏற்படுத்துகின்றது என்பதிற் சந்தேகமில்லை. இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக முன்னர் பதவி வகித்தவர்களில் எவருமே தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு அரசியலில் இருந்து ஒதுங்கியதில்லை. இரு பதவிக்காலங்களுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக பதவிவகிக்க முடியாது என்ற முன்னைய அரசியலமைப்பு ஏற்பாட்டின் பிரகாரம் அவர்கள் பதவியிலிருந்து இறங்கினார்கள். அவர்களில் எவருமே மூன்றாவது பதவிக்காலத்துக்கு தேர்தலில் போட்டியிடுவது என்ற பேச்சுக்கு இடமிருக்கவில்லை. தொடர்ந்து நீண்ட காலத்துக்குப் பதவியில் இருக்க வேண்டுமென்ற பேராசையில் அரசியலமைப்புக்கான 18வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதிக்கு இருந்த இரு பதவிக்கால மட்டுப்பாட்டை நீக்கிய ராஜபக்ஷ மூன்றாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைக் கேட்பதற்காக (இரண்டாவது பதவிக்காலத்தில் இன்னமும் இருவருடங்கள் இருந்த நிலையில்) ஜனவரியில் தேர்தலை நடத்தி அதில் போட்டியிட்டார்.

அத்தேர்தலில் அடைந்த தோல்விக்குப்பிறகு அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவார் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வந்த போதிலும் அக்கட்சிக்குள் பெருமளவுக்குச் செல்வாக்குச் செலுத்தக்கூடியவராக ராஜபக்ஷ விளங்குகிறார் என்பதை அண்மைக்கால நிகழ்வுப் போக்குகள் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிறிய அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்தன மற்றும் விமல் வீரவன்ச போன்றவர்கள் ராஜபக்ஷவுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களுக்கான ஒரு அரசியல் எதிர்காலத்தை உறுதி செய்துகொள்ள முயற்சிக்கின்றார்கள் என்பது வேறுவிடயம். ஆனால் சுதந்திரக் கட்சியின் கணிசமான எண்ணிக்கையான பாராளுமன்ற உறுப்பினர்களும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக நியமிக்க வேண்டுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்திக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலைவரம் கட்சியை தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வருவதில் ஜனாதிபதி எதிர் நோக்குகின்ற சவால்களின் பாரதூரத்தன்மையை வெளிக் காட்டுகிறது. ராஜபக்ஷவுக்கு ஆதரவான பிரசார இயக்கத்தை ஆரம்பத்தில் 'ஓரமாக' நின்று அவதானித்த சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இப்போது வெளிப்படையாகவே அந்த இயக்கத்துடன் தங்களை அடையாளம் காட்டிக் கொள்வதற்கு தயங்குவதாக இல்லை.

சுதந்திரக்கட்சி முறைப்படியாக பிளவுபடவில்லையே என்பதைத் தவிர அது இப்போது இரு முகாம்களாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகும்போது சுதந்திரக்கட்சிக்கு நேரக்கூடிய கதியை உய்த்துணர்வது எவருக்கும் சிரமமான காரியமல்ல. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு உதவிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுதந்திரக்கட்சி அடுத்த பொதுத்தேர்தலில் இரு முகாம்களாக போட்டியிடக்கூடிய சூழ்நிலையைக் காண்பதற்கு ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார். ஜனாதிபதியைப் பொறுத்தவரை தனது தலைமையிலான கட்சி பிளவுபடுவதை விரும்புகின்ற ஒரு பிரதமருடன் சேர்ந்து ஆட்சி நிருவாகத்தை நடத்த வேண்டிய பரிதாபமான நிலை.

ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற அரசியல்வாதிகளுக்கு அடுத்த பொதுத்தேர்தலைப் பொறுத்தவரை நம்பிக்கையை பெருமளவுக்கு கொடுத்திருப்பது கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் பெற்ற 58 இலட்சம் வாக்குகளேயாகும். அந்த வாக்குகள் பாராளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷ தலைமையில் தங்களுக்கு பெருமளவு ஆசனங்களைக் கொண்டு வருமென்று இவர்கள்

*(15ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## நிமல்காவின் விமர்சனம்

மே மாதத்திற்கான சமகாலம் முன்னரைக்கால இதழ் படித்தேன். நிமல்கா பெர்னாண்டோவின் இழந்த இராச்சியத்தை மீட்பதற்கான போராட்டம் சற்றே உப்பு, புளி காரமெல்லாம் தூக்கலாக சேர்த்து எழுதப்பட்டிருந்தது. உண்மையில் இது போல ஓர் அரசியல் கட்டுரை எப்போதாவது ஓரிரு தடவைகள் தான் வாசிக்கக் கிடைக்கின்றது. திஸ்ஸரணிகுணசேகரவையும் இந்த வரிசைக்குள் சேர்க்க வேண்டும். இவ்விருவரும் இப்போது மட்டுமல்ல மகிந்தராஜபக்ஷ கோலோச்சிய காலத்திலும் இதுபோன்று காரசாரமான கட்டுரைகளைத் துணிச்சலுடன் எழுதியவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் இதழியல் வரலாற்றில் அரசியலுக்கென வெளிவரும் முதல் இதழ் என்ற வகையில் சமகாலத்தை எந்தளவு பாராட்டினாலும் தகும்.

மு.சுபாலிங்கம், குருநகர், யாழ்ப்பாணம்.

## ஜனநாயக வெளி

புதிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையில் மக்களால் அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்ற ஒப்பீட்டளவிலான ஆரோக்கியமான 'ஜனநாயக வெளி'யை நல்லாட்சிக்கு ஆதரவான சக்திகளை விடவும் முன்னைய எதேச்சாதிகார ஆட்சியாளர்களுக்கு ஆதரவான சக்திகளோ உச்சபட்சத்துக்கு பயன்படுத்துகின்றதைக் காண முடிகிறது.

மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்குத் துடிக்கின்ற பேரினவாத-பிற்போக்குச் சக்திகளின் பிரசார இயக்கங்களின் தீவிரத்தை அவதானிப்பவர்கள் இதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த ஆரோக்கியமற்ற போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கு நல்லாட்சிக்கு ஆதரவான அரசியல் சக்திகளும் சிவில் சமூக அமைப்புகளும் அவற்றின் செயற்பாடுகளையும் பிரசாரங்களையும் ஊக்கத்துடன் முன்னெடுக்க வேண்டும். அல்லாவிட்டால், மீண்டும் இருண்ட யுகத்திற்குள் நாடு போவதைத் தவிர்க்க முடியாமல் போகலாம்.

சர்வேஸ்வரன் பிரதீபன்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு.

## சென்னை மெயில்

கடந்த இதழில் வெளியான முத்தையா காசிநாதனின் சென்னை மெயிலில் ஜெயலலிதாவின் சொத்துக்குவிப்பு வழக்கில் ஏற்பட்டதிருப்பங்கள் குறித்து குறிப்பிடப்பட்டிருந்தது. ஜெயலலிதாவின் மேன்முறையீட்டு வழக்கில் கர்நாடக மாநில மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய மே 11 க்குப் பின்னர் தான் சமகாலம் சஞ்சிகை எமது கைகளுக்குக் கிடைத்ததால் அந்தச் சென்னை மெயிலில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் பழையனவாகிப் போயிருந்தன. உரிய காலத்தில் சஞ்சிகையை வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்வதில் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனம் கவனம் செலுத்தினால் பயனுடையதாக இருக்கும்.

குணாளன் ரகுபரன், பருத்தித்துறை.

## செய்தி ஆய்வு

ஆரம்ப முதலிருந்தே சமகாலம் இதழில் வெளியாகிவந்த செய்தி ஆய்வுகளை அண்மைக்காலமாகக் காணமுடியவில்லை. இது குறித்து ஏற்கனவே ஒருவாசகர் சுட்டிக்காட்டியிருந்தார். அந்தச் செய்தி ஆய்வை மீண்டும் வெளியிடுமாறு நானும் வேண்டுகோள் விடுக்கிறேன். ஆசிரியர் குழு அக்கறை காட்டுமா?

சேனாதிராஜா ரகுபதி, செங்கலடி.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி: 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

'திருத்தச் சட்டத்தால் திருப்தியடைந்தவர்கள் யார்?' என்ற மகுடத்தின் கீழ் கடந்த சமகாலம் இதழில் தீட்டப்பட்டிருந்த ஆசிரிய தலையங்கம் கடந்தமாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்டம் பற்றிய அரசியல் நாடகங்களை மிகவும் தீர்க்கமான பார்வையுடன் விளக்கியிருந்தது. ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டுமென்ற அல்லது ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டங்களை நடத்தியவர்களையல்ல, அந்த ஆட்சி முறையை ஒழிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களையே 19 ஆவது திருத்தம் திருப்திப்படுத்தியிருக்கிறது என்ற கடைசி வசனம் இரத்தினச் சுருக்கமாக உண்மை நிலையை உணர்த்தியது.

சிவசம்பு ராம்குமார், வெள்ளவத்தை.

## சர்வதேச அரசியல் கட்டுரைகள்

சமகாலம் சஞ்சிகையில் வெளியாகின்ற சர்வதேச அரசியல் விவகாரங்கள் தொடர்பான கட்டுரைகள் போன்று இலங்கையில் வேறு எந்த பத்திரிகையிலுமோ சஞ்சிகையிலுமோ வெளிவருவதில்லை. சர்வதேச அரசியல் தொடர்பில் பல்திறப்புலமையுடைய பத்திரிகையாளர்கள், அரசியல் அவதானிகளினால் எழுதப்படுகின்ற அந்தக் கட்டுரைகள் மூலமாக பெருவாரியான தகவல்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. அரசியல் விஞ்ஞானம் படிக்கும் மாணவர்களுக்கு இந்தக் கட்டுரைகள் பெரிதும் பயன்தருபவையாகும். அதனால், பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்குச் சமகாலம் சஞ்சிகை கிரமமாகக் கிடைப்பதை அதிபர்கள் உறுதி செய்ய வேண்டும்.

சிவசாமி மங்களம், நெல்லியடி.

## சமூகச் சீரழிவு குறித்து...

2012 டிசம்பரில் டில்லியில் மருத்துவ மாணவி பாலியல் வல்லுறவுக்குள்ளான சம்பவம் பற்றி சமகாலம் சஞ்சிகை அட்டைப்பட கட்டுரை வெளியிட்டிருந்தது எனக்கு நல்ல ஞாபகம். இந்தியாவில் நடைபெற்ற அந்த சம்பவம் பற்றி பெரிதாக பிரபலப்படுத்திய சஞ்சிகை இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய பாலியல் சம்பவங்கள், பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோக சம்பவங்கள் பற்றி கட்டுரைகளை வெளியிட்டதை நான் காணவில்லை. இலங்கையில் இடம்பெறுகின்ற சமூகச் சீரழிவுகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உதவக்கூடிய ஆய்வுத்தன்மையான ஆக்கங்களை வெளியிட வேண்டும் என்று ஆசிரியர் குழுவை கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் புங்குடு தீவில் மாணவி வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின் கொல்லப்பட்ட கொடூரச்சம்பவம் பற்றி அடுத்த இதழில் எதிர்பார்க்கிறோம்.

எம்.வேணி, குருணாகல்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 22
**2015, மே 16 - 31**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@ex-pressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)


**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெபரின் ராஜ்

அமெரிக்கா அதன் அரசியல்முறைபற்றி பெருமையாக பேசுகிறது. அதன் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஒன்றைப் பேசுகிறார். பதவியேற்கும் போது வேறொன்றை பேசுகிறார். பதவியின் இடைக்காலத்தில் இன்னொன்றை பேசுகிறார். பதவி விலகும் போது அதை விடவும் வேறொன்றை பேசுகிறார்.

\- டெங் சியாவோ பிங்



**வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
**ஆசிரியர்,**
**சமகாலம்**
**185, கிராண்ட்பாஸ் ரோட்,**
**கொழும்பு -14.**
**இலங்கை.**
**மின்னஞ்சல் :** samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்: 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பிறகு மகிந்த ராஜபக்‌ஷவை 2015 ஆம் ஆண்டில் வீட்டுக்கு அனுப்புவதற்கு மக்களினதும் சில அரசியல்வாதிகளினதும் ஆதரவுடன் எனது சக்திக்குட்பட்ட சகலதையும் செய்ய வேண்டுமென்று திடசங்கற்பம் பூண்டேன். அதைச் செய்து முடித்தேன்.



ஃபீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா

மைத்திரிபால சிறிசேன இன்று தனியான ஒரு குழுவினால் இயக்கப்படுகிறார். அவரிடம் போய் எனக்கு பிரதமர் பதவி தருமாறு நான் வேண்டுகோள் விடுத்ததாக அவர்கள் வதந்திகளைப் பரப்புகிறார்கள். நான் பிரதமர் பதவியைக் கேட்கவில்லை. நான் அத்தகைய வேண்டுகோள்களை ஒருபோதும் விடுக்க மாட்டேன். நான் தோற்கடிக்கப்பட்ட பிறகு மெடமுலானவில் தங்கியிருந்து எனது அலுவலைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நாட்டு மக்கள் பெருமளவில் என்னைத் தேடிவந்து அரசியலுக்குத் திரும்பி வருமாறு கேட்டார்கள். அதையடுத்து நான் ஒரு தீர்மானத்தை எடுத்து வணக்கத்தலங்களுக்கு விஜயம் செய்துகொண்டிருக்கிறேன்.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷ

எமது வாக்காளர்களில் பலர் தங்களைத் தாக்கி, தொந்தரவு செய்கின்ற தலைவர்களையே விரும்புகிறார்கள். இந்த வகையான தலைவர்கள் மீது விசேட பற்றுதலை வைத்திருக்கும் வாக்காளர்கள் அத்தலைவர்களை வீரபுருசர்கள் என்று அழைக்கிறார்கள். இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றையவர்களின் கருத்துக்களையும் கேட்டு அமைதியான முறையில் நாட்டை ஆட்சி செய்ய முயற்சிக்கிறார். ஆனால் அவரை இந்த வாக்காளர்கள் முதுகெலும்பில்லாதவர் என்று கூறுகிறார்கள். எமது வாக்காளர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களது அரசியல் தலைவர்களிடமிருந்து சண்டித்தனத்தையும் சட்டத்தை மதிக்காத போக்கையும் எதிர்பார்க்கிறார்கள். பண்பான முறையில் மற்றவர்களை மதித்து நடக்கிற தலைவர்களை பலவீனமானவர்களாக நோக்கும் ஒரு விசித்திரமான போக்கைக் காண முடிகிறது.



சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன

எனது சிறுநீரை ஒரு பிளாஸ்டிக் கொள்கலனில் சேகரிக்கிறேன். அதில் சுமார் 50 லீட்டர் சிறுநீர் சேகரிக்கப்பட்டதும் டில்லியில் உள்ள எனது பங்களாவைச் சுற்றியுள்ள தோட்டத்தில் உள்ள மரங்களுக்கு ஊற்றவைக்கிறேன். ஏனைய மரங்களை விடவும் இந்த மரங்கள் ஒன்றரை அடி கூடுதலாக வளர்ந்திருக்கின்றன.



இந்திய வீதிப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் எந்தவொரு உறுப்பினரும் கட்சியில் எந்தப் பதவிக்கும் போட்டியிடலாம். மகிந்த ராஜபக்‌ஷ சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறவில்லை. அதனால், அவர் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தத் தடையும் இல்லை.



முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சாந்தப்படுத்துவதற்காக வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை அரசாங்கம் அகற்றுமானால், நான் கேட்டுக் கொண்டாலும் மேல் மாகாணத்திலிருந்து இராணுவ முகாம்களை அரசாங்கம் அகற்றுமா என்று கேட்கவிரும்புகிறேன். அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் முடிவடைந்துவிட்டது. இப்போது அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான எமது 100 நாள் வேலைத்திட்டம் ஆரம்பமாகியிருக்கிறது.



மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசாங்கத்தின் 100 நாட்கள் முடிவடைந்துவிட்டன. இப்போது எமது 100 நாட்கள் வந்திருக்கின்றன. இனிமேல் அரசாங்கத்தின் இலஞ்சம், ஊழல் முறைகேடுகள் குறித்து இலஞ்ச ஆணைக்குழுவில் நாம் முறைப்பாடுகளைச் செய்வோம். ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எந்தளவுக்குப் பக்கச்சார்பற்றவை என்பதைத் தீர்மானிப்பதற்கு எமது முறைப்பாடுகள் ஒரு பரீட்சையாக அமையும்."



பிவிதுறு ஹெல உறுமய
பொதுச் செயலாளர் உதய கம்மன்பில

"கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி பிரபலமான ஒரு சமூக செயற்பாட்டாளர். ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு முழுமையான ஆதரவை வழங்கியவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடுமையாகத் தாக்கிப் பேசியவர், ராஜபக்ஷ ஆதரவாளர்களினால் கிருலப்பனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேதினக் கூட்டத்துக்கு செல்லும் போது அவர்களின் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய ஆபத்து இருக்கும் என்பதை அவர் தெரிந்திருக்க வேண்டும்."



ஜனநாயக இடதுசாரி முன்னணி
தலைவர் வாசுதேவ நாணயக்கார


"தற்போதைய அரசாங்கத்தைத் தூய்மையானது என்று நான் ஒரு போதும் கூறவில்லை. அதேவேளை, தற்போது விசாரணைக்குள்ளாக்கப்பட்டிருப்பவர்கள் முற்றிலும் அப்பாவிகள் என்றும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்துதான் ஊழல் மோசடிகள் ஆரம்பித்தன என்றும் நான் கூறவில்லை. எது எவ்வாறென்றாலும் ஊழல் முடிவுக்கு வர வேண்டும்."



பத்திரிகையாளர் விக்டர் ஐவன்

**செய்தி ஆய்வு**

# டேவிட் கமரூன் எதிர்நோக்கப் போகும் சவால்கள்



இம்மாத ஆரம்பத்தில் பிரிட்டனில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி பிரமிக்கத்தக்க வெற்றியைப் பெற்றிருக்கிறது. அக்கட்சி தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் பதவிக்கு வந்திருப்பது மாத்திரமல்ல, பிரதமர் டேவிட் கமரூன் மிகவும் பலம்வாய்ந்த ஆணையுடன் மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருக்கிறார். 650 ஆசனங்களைக் கொண்ட பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி 331 ஆசனங்களைக் கைப்பற்றியதன் மூலமாக சாதாரண பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்கிறது. 2010-2015 காலகட்டத்தில் லிபரல் ஜனநாயகக்கட்சியின் ஆதரவில் தங்கியிருந்த கூட்டரசாங்கம் ஒன்றுக்கு கமரூன் தலைமை தாங்கினார். இத்தடவை கன்சர்வேட்டிவ் கட்சியினர் தங்கள் சொந்தத்திலேயே அரசாங்கத்தை அமைக்கக் கூடியதாக இருக்கிறது.

1992ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர்கள் தனியாக அரசாங்கத்தை அமைப்பது இதுவே முதற்தடவை என்பது கவனிக்கத்தக்கது. தேர்தலுக்கு முன்னர் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்புகள் எல்லாம் பிரதான கட்சிகளுக்கிடையே நெருக்கமான போட்டி இருக்குமென் றும் எந்தக்கட்சிக்குமே ஆட்சியமைக்கக்கூடியதாக அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்காத வகையிலான பாராளுமன்றமே (Hung Parliament) அமையுமென்றும் கூறியிருந்தன. அவையெல்லாவற்றையும் தவறானவையென்று நிரூபித்து உறுதியான வெற்றியொன்றைக் கமரூன் பெற்றிருக்கிறார். தொழிற்கட்சி ஊக்கத்துடனான பிரசாரத்தை முன்னெடுத்திருந்தபோதிலும்,


(19ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசித்திரமான சூழ்நிலையின் கீழ் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான எல்லைக்கோடு தெளிவற்றதாக மாறியிருப்பதன் பின் புலத்திலேயே மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கான பிரசார இயக்கம் உத்வேகம் அடைந்திருக்கின்றது.

# மகிந்தவை மீண்டும் கொண்டு வருதல்

## ஒரு எதேச்சாதிகார வேலைத்திட்டம்



பேராசிரியர்
ஜெயதேவ உயன்கொட

உள்நாட்டு அரசியல்

இலங்கையின் மிகவும் அண்மைய அரசியல் நிகழ்வுப் போக்குகளையும் விவாதங்களையும் மூன்று சம்பவங்கள் ஆக்கிரமித்து நின்றன. கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி, கலாநிதி குமுது குசும் குமார ஆகியோர் மீது மேதினக் கூட்டத்தில் வைத்து குண்டர்கள் மேற்கொண்ட தாக்குதல் முதல் சம்பவம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்கு முன்னெடுக்கப்படுகின்ற பிரசாரங்கள் தீவிரமடைந்திருப்பது இரண்டாவது சம்பவம், தற்போதைய ஜனாதிபதிக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு மூன்றாவது சம்பவம். இந்த மூன்று சம்பவங்களும் இலங்கையின் தற்போதைய அரசியல் குழப்பநிலையின் இயக்கவிசையின் சில முக்கிய பரிமாணங்களை உருவகப்படுத்தி நிற்கின்றன.

### குண்டர்களின் தாக்குதல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக அல்லது பிரதமராக மீண்டும் கொண்டுவருவதற்கான பிரசார இயக்கத்துக்குத் தலைமை தாங்குவோரினால் கிருலப்பனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேதினக் கூட்டத்தில் நிர்மல் மீதும் குமுது மீதும் குண்டர்கள் நடத்திய தாக்குதல் தொடர்பில் மூன்றுவகையான பிரதிபலிப்புக்களை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். நிர்மலும் குமுதுவும் தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரின் மேதினக் கூட்டத்தில் குழப்பத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே அங்கு சென்றதாக ஒரு சிறிய எண்ணிக்கையானோரினால் தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டு முதலாவது பிரதிபலிப்பு. மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட அரசியல் பின்புலம் கொண்ட முயற்சியின் ஒரு அங்கமாகவே நிர்மலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுதுவும் அந்தக் கூட்டத்துக்கு வந்தார்கள் என்பதே இந்த சிறுபான்மையினரின் வாதம். இந்த வாதத்தின் தர்க்கத்தின் பிரகாரம் நோக்கும்போது, தாக்குதலுக்கு இலக்காகி விளம்பரம் வேண்டுமென்பதற்காகவே நிர்மல் அங்கு வந்தார், அவரின் நோக்கம் நிறைவேறி விட்டது என்றாகிறது. தினேஷுக்கும் வாசுதேவவுக்கும் விமலுக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்துவதே நிர்மலின் அரசியல் நோக்கம். அடிவாங்கியதன் மூலம் அவர் அதைச் சாதித்துவிட்டார் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

இவர்களின் வாதம் குறித்து எவருமே ஆச்சரியமடைய வேண்டியதில்லை. இவர்கள் பாதிக்கப்பட்டவர்களை குற்றஞ்சாட்டுகின்ற அதேவேளை, தாக்குதல் நடத்தியவர்களை நியாயப்படுத்துகிறார்கள்.

நிர்மல் மீதும் குமுது மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தவறானது. ஆனால், கிருலப்பனை மேதினக் கூட்டத்துக்குச் சென்றதன் மூலமாக தங்களுக்கு விரோதமான கும்பலினால் தாக்குதலுக்கு இலக்காகும் சூழ்நிலையை அவர்களே ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பது இரண்டாவது பிரதிபலிப்பு. இக்கருத்தைக் கூறியவர்கள் தாக்குதலைத் தவறானது என்று ஒத்துக் கொள்கின்ற அதேவேளை, தாக்குதல்களுக்கு இலக்கானவர்களையும் குற்றஞ்சாட்டுகிறார்கள். இக்கருத்தை இருவகைப்பட்டவர்கள் கொண்டிருக்கிறார்கள். மகிந்தவை மீண்டும் கொண்டுவருவதற்கான பிரசாரத்தை மேற்கொண்டிருப்பவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய இடதுசாரிகள் முதலாவது வகையினர். தினேஷ்-வாசுதேவ- விமலின் கூட்ட அரங்கில் நிர்மலும் குமுதுவும் காணப்பட்டமைக்கு வெளிக்காட்டப்பட்ட பாசிசத்தனமான பிரதிபலிப்புக் குறித்து அதிர்ச்சியடைந்திருப்பவர்கள் இரண்டாவது வகையினர், நிர்மலும் குமுதுவும் எதற்காக அந்தக் கூட்டத்துக்குச் செல்லவேண்டும் என்பது இந்த இரண்டாவது வகையினரின் கேள்வி.

> ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலை புதிரானதாக இருக்கிறது. மகிந்தவை மீண்டும் கொண்டு வருவதற்கான இயக்கம் சுதந்திரக்கட்சிக்கு எதிரான சுதந்திரக்கட்சியின் இயக்கமாக இருக்கிறது. வழமைக்கு மாறான இந்த அரசியல் நிலைவரத்தை தர்க்கரீதியாக நோக்கும் போது அந்தக்கட்சி பிளவுபடுவது தவிர்க்க முடியாததாகும்

### ஜனநாயக அரசியல் கலாசாரம்

தாக்குதல் தொடர்பான மூன்றாவது பிரதிபலிப்பு வருமாறு;

மேதின ஊர்வலங்கள், கூட்டங்கள் இலங்கையின் நீண்டகால ஜனநாயக மற்றும் இடதுசாரி அரசியல் பாரம்பரியத்தின் ஒரு அங்கமாகும். அரசியல் செயற்பாட்டாளர்களும் கல்விமான்களும் தங்களின் சொந்த அரசியல் நிலைப்பாடுகள் எத்தகையவையாக இருந்தாலும் இந்த ஊர்வலங்களையும் கூட்டங்களையும் பார்வையிடுவார்கள். இது அந்த அரசியல் பாரம்பரியத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமே. தங்களுக்கு இருக்கக்கூடிய அரசியல் சார்புகள் எத்தகையவையாக இருந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல் ஆட்கள் கட்சிகளின் அரசியல் கூட்டங்களுக்குச் சென்று உரைகளைக் கேட்பதுவும் அந்த ஜனநாயக மரபின் ஒரு அங்கமாகும். இத்தகைய கருத்தைக் கொண்டுள்ள நிர்மலுடனும் குமுதுவுடனும் நான் உடன்படுகின்றேன்.

குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளைக் கடுமையாக விமர்சிப்பவன் என்று பெயரெடுத்தவன் நான். அவ்வாறிருந்த போதிலும் கூட, அண்மைக்காலம்வரை, அரசியல் கூட்டங்களுக்குச் சென்று உரைகளைக் கேட்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தவன் நான். எனது முதியவயது காரணமாக இத்தடவை மேதினக் கூட்டங்களுக்கு என்னால் செல்ல முடியவில்லை. அவ்வாறு செல்லாமல்விட்டதனால் தாக்குதலுக்குள்ளாவதிலிருந்து தப்பிப் பிழைத்துவிட்டேன் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

எமது சமகால அரசியல் கலாசாரத்தில் உண்மையிலேயே அருவருக்கத்தக்க அம்சமொன்று இருக்கிறது என்பதையே நிர்மல், குமுது ஆகியோர் மீதான தாக்குதலும் அத்தாக்குதலை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நியாயப்படுத்தும் செயல்களும் உணர்த்துகின்றன. எமது சமூகத்தின் அரசியல் உணர்வுநிலையில் இருக்கின்ற ஆழமானதும் விரோதத்தனமானது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான துருவமயப்போக்கே எதிர்க்கருத்துக் கொண்டவரை துரோகியென்றும் போட்டியாளரை எதிரியென்றும் கண்டனம் செய்பவரைத் துரோகியென்றும் நடத்த வழிவகுக்கிறது. எமது பல்கலைக்கழக முறைக்குள்ளும் கூட இத்தகைய அனுபவம் எனக்குண்டு. மிகவும் அண்மையில் அதாவது ஜனவரி இரண்டாவது வாரம் வரை கருத்து வேற்றுமைகொண்டவர்களை பயங்கரவாதத்தின் சகோதரர்களாக கருதியதைக் காணக்கூடியதாக இருந்தது.

அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தம் இலங்கையில் ஜனநாயக மயமாக்கத்துக்கு போதுமானதல்ல என்பதையே இந்தச் சம்பவங்கள் எல்லாம் எமக்குக் கூறுகின்றன. அரசியலமைப்பு மற்றும் சட்டச் சீர்திருத்தங்களினால் மாற்றத்துக்கான நிறுவன ரீதியான அத்திபாரங்களை மாத்திரமே அமைக்க முடியும். எமது அரசியல் கலாசாரத்தில், பண்புகளில், நடைமுறைகளில் மற்றும் அரசியல் வாழ்வின் ஒழுங்குகளில் உருப்படியானதொரு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு எமது சமுதாயத்தின் அரசியல் உணர்வு நிலையில் ஜனநாயகப் புரட்சியொன்று ஏற்பட வேண்டும். ஆனால், அடையப்பட்டிருக்கக்கூடிய ஜனநாயக பயன்களையெல்லாம் மறுதலையாக்கக் கூடிய வலிமையைக்கொண்ட ஒருவகையான எதிர்ப்புரட்சிக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. எதிரெதிரான இரு சக்திகளுக்கிடையே தீவிரமடையக்கூடிய போராட்டம் எதிர்வரும் மாதங்களில் இலங்கையின் அரசியலை வரையறுக்கும் என்பது நிச்சயமானதாகும். மட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்றுக்குள் தொடருகின்ற ஜனநாயகமயமாக்கமும் பரந்தளவிலான அடிப்படையில் எதேச்சாதிகாரத்தை மீளக்கொண்டுவருவதற்கான முயற்சிகளுமே அந்த இரு சக்திகளுமாகும்.

### மீண்டும் மகிந்தவை கொண்டுவரும் பிரசாரம்

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவரும் நோக்கில் முன்னெடுக்கப்படுகின்ற பிரசாரம் உத்வேகமடைந்திருக்கிறது போலத் தெரிகிறது. மே 8 ஆம் திகதி குருநாகலையில் நடைபெற்ற கூட்டம் பற்றி தொலைக்காட்சி சேவைகளின் செய்திகளில் காணக்கூடியதாக இருந்த காட்சிகள் ஏற்பாட்டாளர்களினால் உற்சாகமிக்க பெருமளவு மக்களை அணிதிரட்டக்கூடியதாக இருந்திருக்கிறது என்பதை வெளிக்காட்டுகின்றன. ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட தலைவர் மீண்டும் அதிகாரத்துக்கு வரப்போகின்றார் என்ற உணர்வில் அந்தக் கூட்டத்தினர் ஆரவாரம் செய்தார்கள்.

மகிந்தவை மீண்டும் கொண்டுவருவதற்கான பிரசார இயக்கம் இலங்கையின் தற்போதைய அரசியல் பற்றி எத்தகைய செய்தியை எமக்குச் சொல்கிறது? அது உண்மையில் எமது அரசியலின் இன்றைய திசைமார்க்கத்தையும் நாளைய திசைமார்க்கத்தையும் உருவகப்படுத்தி நிற்கும் சுவாரஸ்யமான பல போக்குகளின் இடைவிளைவை அல்லது பிரதிபலிப்புக்களை எமக்குக் காட்டுகிறது. மிகவும் முக்கியமான அம்சம் என்னவென்றால், ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப்பிறகு ஜனநாயக அரசியலுக்கான வெளி அகலமாகிக் கொண்டுவருவதை இது வெளிக்காட்டுகிறது. அரசாங்கத்துக்கும் புதிதாகத் தோன்றியிருக்கும் எதிரணிக்கும் இடையிலான வெளிப்படையான போட்டியில் காணப்படக்கூடியதாக இருக்கும் தீவிர போக்கு ஒரு சிலமாதங்களுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்டிருக்கவோ அல்லது சகித்துக்கொள்ளப்பட்டிருக்கவோ மாட்டாது. இந்தப் போட்டிக்கு ஊடகங்களில் கொடுக்கப்படும் பரந்தளவிலான முக்கியத்துவம் காரணமாக மக்களின் கவனம் பெருமளவுக்கு அதில் ஈர்க்கப்படுவதுடன், அரசியல் விவாதங்களையும் மூளவைத்திருக்கிறது. அரசாங்கம் கூட ஒருவித தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஜனநாயகக் கோணத்தில் இருந்து பார்க்கும் போது அது ஒரு கெடுதியான விடயம் அல்ல. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குப் புதிதாகக் கிடைத்திருக்கும் கருத்துவெளிப்பாட்டுச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தை உச்சபட்சத்துக்கு பயன்படுத்துகிறார்கள். அனுபவிக்கிறார்கள். அண்மைக்காலச் சரித்திரத்தில் முதற்தடவையாக, அல்லது அவர்களின் வாழ்வில் முதற்தடவையாக என்றும் கூறலாம், அவர்கள் அரசாங்கத்தை, அதன் ஜனாதிபதியை, பிரதமரை, அமைச்சர்களை மற்றும் அவர்களின் கொள்கைகளைக் கண்டனம் செய்து விமர்சித்துக்கொண்டிருக்கிறார்கள். அரச அதிகாரத்தைத் தங்கள் கைகளில் வைத்திருப்போரை கட்டுப்படுத்துவதற்கான ஆற்றல் வாய்ந்த தடுப்புக்களையும் சமநிலைப்படுத்தல்களையும், (Checks and balances) கடந்த ஆட்சியின் கீழ் இலங்கை கொண்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தியோகபூர்வமானதும் உத்தியோகபூர்வமற்றதுமான தடுப்புக்களும் சம நிலைப்படுத்தல்களும் தற்போது நிறையவே காணப்

> அரச தலைவர் என்ற பதவியையும் அரசாங்கத்தையும் பண்பு ரீதியாகவும் செயல் பாணியிலும் தனிநபர்மய நீக்கம் செய்வதில் பற்றுறுதி கொண்டவராக மைத்திரிபால சிறிசேன விளங்குகிறார். ஜனாதிபதிக்கு இருக்கின்ற மட்டுமீறிய அதிகாரங்களை கைவிடுவதிலும் தன்னடக்கமான போக்கை கடைப்பிடிப்பதிலும் அவர் காட்டுகின்ற அக்கறை இலங்கை அரசியலில் புதியதொரு கட்டத்தை குறித்து நிற்கிறது

படுகின்றன. எனது மாமியார் (மனைவியின் தாயார்) இன்று உயிருடன் இருந்திருந்தால் தனது நீர்கொழும்பு ஆங்கிலத்தில் 'Democracy is now having a ball' என்று சொல்லியிருப்பார்.

### தெளிவற்ற வேறுபாடுகள்

விசித்திரமானதும் தனித்துவமான சூழ்நிலைகளின் கீழ் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான எல்லைக்கோடு மங்கலானதாக தெளிவற்றதாக மாறியிருப்பதன் பின்புலத்திலேயே மகிந்தவை மீண்டும் கொண்டுவருவதற்கான பிரசார இயக்கம் உத்வேக மடைந்து கொண்டிருக்கிறது. அன்றைய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் ஜனவரியில் தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதித் தேர்தலில் தான் எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதும் தலைவராக இப்போது இருக்கிறார். தற்போதைய நிலைவரத்தில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற நாடக பாணியிலான ஒரு அம்சம் என்னவென்றால், ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே கட்சியைச் (சுதந்திரக் கட்சியைச்) சேர்ந்தவர்களாக இருப்பதுதான். இதனால் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான வேறுபாடு விளக்கமற்றதாக- குழப்பமானதாக மாறியிருக்கிறது.

இந்தகையதொரு பின்புலத்தில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான பகைமைப் போக்கை (இது பாராளுமன்ற அரசியலில் ஒன்றும் வழமைக்கு மாறானதல்ல) சுதந்திரக்கட்சியின் சாதாரண ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மகிந்தவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்கான பிரசார இயக்கத்துக்கும் இடையிலானதாகப் பார்க்கிறார்கள். உண்மையில், மகிந்தவை மீண்டும் கொண்டு வரும் இயக்கம் தற்போது கண்டு வரும் வெற்றிக்கு- அதாவது கிராமப்புற மாவட்டங்களில் உள்ள சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களை பெருமளவுக்கு கவரக்கூடியதாக இருக்கின்றமைக்கு ஓரளவுக்குக் காரணமாக இருப்பது அந்த இயக்கம் சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான வழமையான பகைமை அரசியலை மேடையேற்றுவதற்கான அமைப்பு ரீதியான ஒரு மாற்று வெளியை சுதந்திரக்கட்சிக்காரர்களுக்கு வழங்குவதேயாகும். ஐக்கியதேசியக் கட்சியின் பிரதமர் ஒருவரினால் தலைமைதாங்கப்படுகின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் சிலர் அமைச்சரவைக்கு இருக்கவேண்டிய கூட்டுப்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை விடவும் தங்கள் கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையிலான பழைய பகைமையை மேலும் தீவிரப்படுத்தும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

சுதந்திரக்கட்சியின் இன்றைய நிலை புதிரான ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், மகிந்தவை மீண்டும் கொண்டுவருவதற்கான இயக்கமும் சுதந்திரக்கட்சிக்கு எதிரான சுதந்திரக்கட்சியின் இயக்கமாகவே இருக்கிறது. வழமைக்கு மாறான இந்த அரசியல் நிலைவரத்தைத் தர்க்கரீதியாக நோக்கும்போது சுதந்திரக்கட்சி ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் பிளவுபடுவது தவிர்க்க முடியாததாகும் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. அக்கட்சி ஏற்கனவே முரண்பட்ட இரு முகாம்களாகப் பிரிந்து கிடக்கிறது என்பது தெளிவானது. ஊடகங்களில் வெளியான செய்திகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது மைத்திரிபால சிறிசேனவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு தவிர்க்க முடியாத வகையில் நிகழப்போகும் கட்சியின் பிளவை நோக்கிய போக்கைத் துரிதப்படுத்தியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இரு முகாம்களுக்கும் இடையே அதிகரித்துவரும் பகைமையை சினேகபூர்வமான முறையில் தீர்த்து வைக்க முடியும் என்று எதிர்பார்ப்பது சற்று கஷ்டமானதாக இருக்கிறது. ஊடகங்களின் செய்திகளின் படி பார்த்தால், முன்னாள் ஜனாதிபதிக்கும் இன்னாள் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின் போது இரு தரப்பினருமே நல்லிணக்கத்துக்கான எண்ணமேதுமின்றி கடுமையான பேரம்பேசலில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ஒரு பரந்த கருத்துக்கோணத்தில் இருந்து நோக்கும் போது தற்போதைய தருணத்தில் சுதந்திரக்கட்சியில் ஏற்படக்கூடிய பிளவு ஒரு கெடுதியான விடயமாக இல்லாமல் போகக்கூடும். அது சுதந்திரக்கட்சிக்கும் இலங்கையின் ஜனநாயகத்துக்கும் நல்லதாக அமையலாம். ஏனென்றால் கட்சிக்குள் வன்முறையுடன் மூளக்கூடிய அதிகாரப் போட்டியை அதனால் தவிர்க்கக் கூடியதாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம். அத்தகைய தொரு அதிகாரப் போட்டி அரச கட்டமைப்புகளுக்குள்ளும் பரவக்கூடிய ஆபத்தைக் கூடக் கொண்டிருக்கலாம். சுதந்திரக் கட்சிக்குள் ஏற்படக்கூடிய அத்தகையதொரு பிளவு மகிந்தவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவரவேண்டுமானால், சகல இனங்களையும் மதங்களையும் சேர்ந்த பெரும்பான்மையான இலங்கை வாக்காளர்களின் நம்பிக்கையை அரசியல் ரீதியில் வென்றெடுக்க வேண்டியது அவசியம் என்ற விளக்கப்பாட்டை மகிந்தவுக்கு ஆதரவான இயக்கத்தை முன்னெடுப்போருக்கு ஏற்படுத்த உதவக்கூடும். அதற்கு அவர்களுக்கு எமது பிரஜைகளின் ஜனநாயக அரசியல் சிந்தனையையும் அனுபவ அறிவுடனான அரசியல் மதிப்பீட்டையும் கவரக்கூடியதான நல்லதொரு அரசியல் வேலைத்திட்டம் தேவை. அத்தகைய தொரு வேலைத் திட்டத்தை வெறுமனே உணர்ச்சிகளைக் கிளறிவிடும் பேச்சுக்களினாலும் ஆத்திரமூட்டும் அரசியல் சுலோகங்களினாலும் ஆக்ரோஷமான கூச்சல்களினாலும் பதிலீடு செய்ய முடியாது என்பதை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும்.





## அரசியல் வறுமை

மகிந்தவை மீண்டும் கொண்டுவருவதற்கான பிரசாரம் இன்று நாட்டில் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டதும் ஊக்கமிக்கதும் செல்வாக்குடையதுமான அரசியல் இயக்கமாக வெளிக்கிளம்பியிருக்கும் அதேவேளை, அதன் அரசியல் நிகழ்ச்சித் திட்டம் கருத்துள்ள எந்த அரசியலும் இல்லாததாக இருக்கிறது. 'மகிந்தவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருதல்' என்பது மாத்திரமே மக்களை அணிதிரட்டுவதற்கான ஒரேயொரு சுலோகமாக இருக்கிறது. இலங்கைப் பிரஜைகளின் அரசியல் வாழ்வின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஆக்கபூர்வமான ஒரு அரசியல் சிந்தனையைத் தானும் பக்கபலமாகக் கொண்டதாக அந்தச் சுலோகம் இல்லை. அது ஜனநாயக அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டுவரும் உறுதிமொழியெதையும் கொண்டதாக இல்லை. மக்கள் மத்தியில் வெறித்தனமான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு அப்பால், தலைமைத்துவத்தின் மீதான வழிபாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கப்படுத்துவதற்கு அப்பால், இராணுவமயப்பட்ட அரசின் மீது பக்தியை ஏற்படுத்துவதற்கு அப்பால் எந்த நோக்கமும் அந்த சுலோகத்திடம் இல்லை. அதன் காரணத்தினால்தான் 'மகிந்தவை மீண்டும் கொண்டுவருதல்' என்ற பிரசார இயக்கம் சாராம்சத்தில் தலைவரை முன்னிறுத்துகின்ற ஒரு எதேச்சாதிகாரச் செயற்திட்டமாக இருக்கிறது. எல்லோருக்குமான நல்லதொரு எதிர்காலத்தை, சீர்திருத்தத்துக்கான வேலைத்திட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அது இல்லை.

மகிந்தவை மீண்டும் கொண்டுவருவதற்கான இயக்கத்திற்குள் உறைந்து கிடக்கின்ற தீவிர தனிநபர் வழிபாட்டையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடைப்பிடிப்பதாகத் தோன்றுகின்ற தனிநபரை பிரதானப்படுத்தாத அரசியலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நல்ல படிப்பினையைப் பெறக்கூடியதாக இருக்கிறது. அரசதலைவர் என்ற பதவியையும் அரசாங்கத்தையும் பண்பு ரீதியாகவும் செயல்பாணியிலும் தனிநபர்மய நீக்கம் செய்வதில் பற்றுறுதிகொண்டவராக மைத்திரிபால சிறிசேன விளங்குகிறார் என்பது வெளிப்படையானது. ஜனாதிபதிக்கு இருக்கின்ற மட்டுமீறிய சகல அதிகாரங்களையும் கைவிடுவதிலும் தன்னடக்கமான போக்கைக் கடைப்பிடிப்பதிலும் அவர் காட்டுகின்ற அக்கறை இலங்கை அரசியலில் புதியதொரு கட்டத்தைக் குறித்து நிற்கிறது.

நல்லதுக்கோ கெட்டதுக்கோ ஜனாதிபதி சிறிசேன நடைமுறைக்கொவ்வாத ஒரு கருத்தியல் கோட்பாட்டைப் பின்பற்றுபவராக இல்லை. அதனால், அரசியலைத் தனிநபர் மயநீக்கம் செய்வதில் உள்ள ஒரு சிறப்பான ஜனநாயகப் பண்பை கோட்பாட்டு ரீதியில் மக்களுக்கு விளக்கவேண்டிய தன் முக்கியத்துவத்தை அவர் தெரிந்துகொண்டவராகத் தோன்றவில்லை. அவரது பேச்சாளர்களும் ஊடகப் பிரிவும் தங்களது தலைவரின் புத்தாக்கமானதும் கிளர்ச்சியூட்டுகின்றதுமான புதிய அரசியல் பாணியைப் பயனுறுதியுடையதாக மாற்றுவது எவ்வாறு என்பதை புரிந்து கொண்டவர்களாகத் தெரியவில்லை. இது தீர்க்கமானதொரு பிரதிகூலமாகும். இன்னும் சில மாதங்களுக்குக் கூட இத்தகையதொரு நிலையை நீடிக்க விடுவது ஜனாதிபதிக்குப் பாதகமாக அமையும் என்பதிற் சந்தேகமில்லை.

'என்ன இது, ஜனாதிபதியொருவர் இருப்பதாகவே உணர முடியவில்லை' என்று மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தவர்களும் அவருக்கு எதிராக வாக்களித்தவர்களும் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். பலதசாப்தங்களாக இலங்கையில் வளர்த்தெடுக்கப்பட்ட தனிநபர் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் உரிய முறையில் விளங்கிக் கொள்ளப்படாததன் கெடுதியான விளைவுகளில் ஒன்று இது. ■

---

*(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

எதிர்பார்க்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலின் போது ராஜபக்ஷாக்கள் வசம் ஆட்சியதிகாரம் இருந்தது. அரச இயந்திரத்தையும் அரச வளங்களையும் உச்ச பட்சத்துக்குப் துஷ்பிரயோகம் செய்துதான் அவர்களினால் அந்த 58 இலட்சம் வாக்குகளையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. இப்போது அவர்கள் கையில் அதிகாரமோ அரச வளங்களோ இல்லாத நிலையில் அதேயளவு வாக்குகளைத் திரட்டக்கூடியதாக இருக்குமா என்பது முக்கியமானதொரு கேள்வி. அத்துடன் ஜனாதிபதித் தேர்தலைப் போலன்றி பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் பாணியை பெருமளவுக்கு வேறுபட்ட காரணிகளே தீர்மானிக்கின்றன என்பதும் கவனத்திலெடுக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

ராஜபக்ஷவைப் பொறுத்தவரை தன்னை சிங்கள மக்கள் தோற்கடிக்கவில்லை. தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகளே தனது தோல்விக்குக் காரணமாகின என்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறார். தேர்தலுக்குப் பிறகு தனது சொந்த ஊருக்குச் சென்ற ராஜபக்ஷ மைத்திரிபால சிறிசேன 'ஈழம் வாக்குகளால்' தான் வெற்றி பெற்றார் என்று இனவாதத் தொனியில் மக்கள் முன்னிலையில் கூறத் தவறவுமில்லை. இன்று அவருக்காக வீதியில் இறங்கிப் பிரசாரம் செய்கின்ற அரசியல்வாதிகளும் சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக சிங்கள மக்களை மீண்டும் தூண்டி விடக்கூடிய வகையிலான கருத்துக்களையே முன்வைக்கிறார்கள். ராஜபக்ஷ பொதுத்தேர்தலில் களமிறங்குவாரானால் எந்தளவுக்கு இனவாதத் தன்மையானதாக அவரின் அணியின் பிரசாரங்கள் இருக்கும் என்பதை இப்போதே புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.


மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பதவிக்குக் கொண்டுவருவது என்பதைத்தவிர, வெளிநாட்டுச் சதியிலிருந்து தாய்நாட்டைக் காப்பாற்றுவது என்ற வெற்றுத்தனமான பிரசாரத்தைத்தவிர அவருக்காக அணிதிரண்டிருக்கும் அரசியல்வாதிகள் எந்தவொரு உருப்படியான அரசியல் திட்டத்தையும் மக்களுக்குக் கூறுவதாக இல்லை. அவர்களிடம் சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிரான அரசியலைத் தவிர வேறு எதுவுமே இல்லை..

பத்து வருடங்கள் ஏற்கெனவே நாட்டை ஆட்சி செய்த ராஜபக்ஷ சட்டத்தின் ஆட்சி சீர்குலைவுக்கும் இலங்கை வரலாறு இதுவரை கண்டிராத ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகங் கள் மற்றும் இனவாத அரசியல் ஆகியவற்றிற்கு காரண மாக இருந்தார். அத்தகைய ஒருவர் மீண்டும் பதவிக்கு வர வேண்டுமென்பது சிங்கள மக்களில் அதிகப் பெரும் பான்மையானோரின் அபிலாசையாக எவ்வாறிருக்க முடியும்? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசுதேவ, தினேஷ், விமல் ஆகியோர் ராஜபக்ஷவை உடனடியாக அரசியலுக்குள் இழுக்க விரும்பிய காரணம் நாட்டு நலன் பற்றிய அக்கறையல்ல. ராஜபக்ஷ மீதான அபிமானமுமல்ல. தங்களுடைய அரசியல் இருப்புக்கு அவரை விட்டால் வேறு கதியில்லை என்பதை அவர்கள் அறிவார்கள்.**

# சுதந்திரக்கட்சி எதிர்நோக்கும் சிக்கல்



பேராசிரியர்
சி.சிவசேகரம்

உள்நாட்டு அரசியல்

கட்சிகளுள் ஏற்படும் உடைவுகள் அரசியற் கொள்கை சம்பந்தப்பட்டவையாக இருந்த ஒரு காலம் இருந்தது. இப்போது அடிப்படையான விடயங்களில் எல்லாக்கட்சிகளும் ஒத்த நிலைப்பாட்டுடனேயே உள்ளன. எனவே கட்சிப் பிளவுகள் கொள்கை தொடர்பானவையாக இருக்க அவசியமில்லை. எவ்வாறாயினும் மக்களிடையே கட்சி விசுவாசம் என ஒன்றுள்ளது. கட்சிகளைப் பற்றிய சிலவாறான படிமங்கள் உள்ளன. அவை கடைகளில் பொருட்களை வாங்கும் போது நாம் சில வணிகக் குறிகளை விரும்புவதைப் போன்றது. அவற்றை வணிக நிறுவனங்களின் 'நற்பெயர்' போல என்றும் கூறலாம்.

இந்திய விடுதலையுடன் அடையாளப்பட்ட காங்கிரஸின் நற்பெயர் காங்கிரஸின் பல்வேறு சீரழிவுகட்குப் பிறகும் குறிப்பாக இந்திரா காந்தியின் அவசரகாலச் சட்டத்தின் பின்பும் கணிசமான பெறுமதியைக் கொண்டிருந்தது. மன்மோகன்சிங் அரசாங்கம் மிகவும் ஏமாற்றமளித்ததால் காங்கிரஸின் வாக்குகள் குறைந்து படுதோல்வி கண்டபோதும் காங்கிரஸ் ஆதரவுத்தளம் என்ற ஒன்று இன்னமும் உள்ளது. சில மாநிலங்களில், பிரதேச அரசியலின் எழுச்சியால், பிரதேசங்களுள் இருந்து, காங்கிரஸ் என்ற பெயருடன் வலுவான போட்டி அமைப்புக்கள் எழுந்துள்ளன. சில மாநிலங்களில் பிரதேச அரசியலால் காங்கிரஸ் ஏறத்தாழ இல்லாதும் போயுள்ளது. எனினும் கட்சிப் பெயரைத் தமதாக்குவது பற்றிப் போட்டித்தரப்புக்களின் கவனத்திற்கு முக்கிய காரணம் கட்சியின் நற்பெயரும் தேர்தல் சின்னமுமே.

இலங்கையின் அரசியலில் 1956ஆம் ஆண்டு ஏற்பட்ட மாற்றம் சில அடிப்படையான நிலைப்பாடுகள் சார்ந்தது. தமிழ்தலைவர்கள் அதைச் சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியுடன் உறவுபடுத்திப் பழகிவிட்டனர். ஆனால் அது சிங்கள மக்களின் நியாயமான மனக்கொதிப்புடன் தொடர்புடையது. எனவே தான் அதற்கு ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் பரிமாணமும் (தோற்றப்பாடாக வேனும்) ஒரு இடதுசார்பு அடையாளமும் இருந்தன. இந்தியாவில் இத்தகைய மாற்றம் நிகழவில்லை. பாரதிய ஜனதாவின் எழுச்சி எதிர்மாறான திசையில் நிகழ்ந்த ஒரு மாற்றமாகும்.

இன்றுவரை சிங்கள மக்களிடையே ஸ்ரீ.ல.சு.க.பற்றிய ஒரு படிமம் உள்ளது. அது மக்கள் சார்பான, அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான தேசியப் பொருளாதாரவிருத்தியை நாடுகிற, சமூக நீதிக்கான ஒரு கட்சி என்ற படிமம், அதற்கான நியாயங்களில் இறுதியானவையும் தீர்ந்து இரண்டு தசாப்தங்கட்கு மேலாகியும் நின்று பிடித்துள்ளது. அவ்வாறே, யூ.என்.பி.யுடனான நெருக்கத்தை நாட்டின் முப்பது சதவீத வாக்காளர்களாவது (சிங்கள மக்களில் முப்பத்தைந்து சதவீதத்திற்கும் குறையாதோர்) பலகாலமாகக் கைவிடவில்லை. எனினும் 1977-94 காலக் கொடுங்கோன்மையும் 1988 -89 கால அரச பயங்கரவாதமும் போர்பற்றிய அவநம்பிக்கையும் யூ.என்.பி.யின். ஆதரவுத் தளத்தைக் குலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. எனினும் அது இருபத்தைந்து சதவீதமாக அல்லது அதிலும் சற்றுக் குறைவாகப் போனதே ஒழிய முற்றாக அழியவில்லை. எனினும், 1947 முதல் 1989 வரை இயலுமாயிருந்தவாறு, யூ.என்.பி. தனித்து நின்று ஒரு பாராளுமன்றப் பெரும்பான்மையை வெல்வது இப்போது இயலாததாகியுள்ளது.

சென்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் மத்தியில் முதன்மைபட்ட அரசியற் பிரச்சினைகள் ஜனாதிபதி ராஜபக்ஷ குடும்பத்தின் ஆதிக்கம், ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் என்பனவே ஒழிய பொருளாதாரக் கொள்கையோ தேசிய இனப்பிரச்சினையோ அல்ல என்பது கவனிக்க உகந்தது.

ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியை எதிர்பார்க்க வில்லை. ஆனால் தோல்வியின் விளைவுகளை அவர் முன்கூட்டியே அறிந்திருந்தார். அவர் தோற்ற பின்பும் ஆட்சியைத் தொடர விரும்பினார் என்பதை நம்ப நியாயமுண்டு. தேர்தல் முடிவுகள் தொகுதி தொகுதியாக வெளிவரும் போதே தோல்வி வாய்ப்புக்கள் தெரியத் தொடங்கிவிட்டன. அவர் ஆட்சி அதிகாரத்தைக் கைவிடாமற் தவிர்க்க எதையெதையெல்லாம் முயன்றார் என ஊகிக்க இயலுமே ஒழிய, இப்போதைக்கு முழு உண்மையையோ அதன் முக்கியமான பகுதியையோ அறிவது இயலாதது.

எனினும் பொதுத் தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கமும் ஒரு எதிரணியைக் கட்டியெழுப்பும் நோக்கமும் அவருடைய சொந்த விருப்பை விட வெளி அழுத்தங்களாற் தோன்றியவை என்பதற்கு ஓரளவேனும் ஆதாரம் உண்டு.

ராஜபக்ஷவுடன் மிகையாக அடையாளப்பட்டுப் புதிய ஜனாதிபதியுடன் நெருங்க வாய்ப்பற்று அதன் பயனாகத் தமது பாராளுமன்றப் பதவிகளை இழக்கும் நிலையில் உள்ள ஐ.ம.சு.கூட்டணி பங்காளிகளான விமல்வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் ஹெல உறுமயவிலிருந்து கட்சி தாவிய உதய கம்மன்பிலவும் ராஜபக்ஷவின் மீட்சியின்றித் தமக்கு அரசியல் எதிர்காலமில்லை என உணர்ந்தனர். எனவே அவர்களும் ஸ்ரீ.ல.சு.க.வில் பலமிழந்து இருந்த ராஜபக்ஷ விசுவாசிகளும் ராஜபக்

மே 6 சந்திப்பின் போது ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு பயனுடைய எந்த விடயமும் ராஜபக்ஷ தரப்பினரால் முன்வைக்கப்பட வில்லை. அடுத்த ஒரு சில தினங்களில் குருணாகலில் ராஜபக்ஷ ஆதரவு கூட்டமொன்று பெரும் சனத்திரளுடன் நடத்தப்பட்டது. ராஜபக்ஷ ஆதரவாளர்களின் முயற்சிகள் சிறிசேனவுக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையேயான முரண்பாட்டை மோசமாக்கினவே தவிர நட்பை மீட்க உதவவில்லை.



ஷவைத் தலைவராகக் கொண்ட ஒரு அணியை உருவாக்குவதில் மும்முரமாயினர்.

அம்முயற்சி தவிர்க்க இயலாததென்றாலும், ராஜபக்ஷவின் நலன்களின் நோக்கில் அவர்கள் சற்றே அவசரப்பட்டு விட்டனர் என்பதே என் மதிப்பீடு. ராஜபக்ஷவை அவர்கள் உடனடியாக அரசியலுள் இழுக்க விரும்பிய காரணம், நாட்டு நலன்பற்றிய அக்கறையல்ல. ராஜபக்ஷ மீதான அபிமானமும் அல்ல. தங்களுடைய அரசியல் இருப்புக்கு ராஜபக்ஷவை விட்டால் வேறு கதியில்லை என அவர்கள் அறிவார்கள். அவர்களுடைய நுகேகொட கூட்டத்தின் வெற்றி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு எச்சரிக்கை மணியானது.

ராஜபக்ஷவோ சிறிசேனவோ கட்சியை உடைத்துப் பங்கிட விரும்பியோரல்லர். இருவரும் கட்சி மீது முழுக் கட்டுப்பாட்டைத் தாம் கொண்டிருக்க விரும்பியவர்களே. இருவரதும் சமரசம் ராஜபக்ஷ உடனடியாக அரசியலில் இறங்காதவரை இயலுமானதாயிருந்தது. ராஜபக்ஷ, சிறிசேனவின் இணக்கத்துடன் கட்சிக்குள் தனது ஆதரவுத் தளத்தை வலுப்படுத்தி அடுத்த வாய்ப்பின் போது தன்னைக் கட்சியின் முக்கிய தலைவராக்கிப் பாராளுமன்றத்தின் மூலம் அதிகாரத்துக்கு முயன்றிருக்கலாம். இப்போதைய அரசாங்கத்தின் கையாலாகாமை புலனாக அதிகங் காலம் எடாது என்பது என் கணிப்பு. ராஜபக்ஷவும் அதற்கு ஆயத்தமாக இருந்திருக்கலாம். எனினும் ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது அரசாங்கம் கைவைக்கும் சூழலைப் பல்வேறு நெருக்குவாரங்கள் துரிதப்படுத்தின. அவற்றுக்குத் துணையாகவே ராஜபக்ஷவை மீளக் கொண்டுவரும் அணி செயற்பட்டுள்ளது.

ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே தேர்தலுக்கு மறுநாள் விடியலில் இறுதி முடிவுகள் வந்து கொண்டிருந்த போது என்னென்ன உடன்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாயின என்று நமக்குத் தெரியாது. அந்தப் பேரப் பேச்சுக்களின் போதான உறுதிமொழிகள் காக்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லாவிடினும், ராஜபக்ஷ ஒரு சவாலாக எழக்கூடிய ஒரு சூழ்நிலை தோன்றினால், ராஜபக்ஷவின் எழுச்சியைத் தடுக்க எதைச் செய்யவும் யூ.என்.பி. தயங்காது என்பது ராஜபக்ஷவின் ஆதர வாளர்கள் அறியாததல்ல. ராஜபக்ஷ ஆதரவு அணி, தந்திரோபாயமாக சிறிசேனவுடன் தன்னை நெருக்க முயலவில்லை. ராஜபக்ஷ - சிறிசேன சமரசத்துக்கான வாய்ப்புக்கள் தேர்தல் முடிந்த சில வாரங்களின் பின் வலுவாக இருந்தது. எனினும் கட்சி இரண்டாகப் பிளவுறும் ஒருநிலை உருவான பின்பே ராஜபக்ஷ-சிறிசேன பேச்சுக்கள் நடந்தன.



ராஜபக்ஷ அந்தப் பேச்சுக்களை ஸ்ரீ.ல.சு.க. ஒற்று மையைப் பேணும் நோக்கில் பயன்படுத்தவில்லை. மாறாகப் பேச்சுக்கள் உள்ளூராட்சிகளின் கலைப்பு, பொதுத்தேர்தல் வேட்பாளர் நியமனங்கள், ராஜபக்ஷ வைப் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக அறிவிப் பது, தேர்தலில் ஐ.ம.சு.கூ. சின்னத்தில் போட்டியிடு வது (அதாவது யு.என்.பி.யுடன் கூட்டணியைத் தவிர்ப்பதும் ஐ.ம.சு.கூ. கட்சிகளை ஏற்படும்) ஊழல்

**தேர்தலுக்கு மறுநாள் விடியலில் ரணிலுக்கும் மகிந்தவுக்கும் இடையே என்ன விடயங்கள் உடன்பாடாகின என்று எமக்குத் தெரியாது. அந்த பேரப் பேச்சுக்களின் போதான உறுதி மொழிகள் காப்பாற்றப்படும் என்ற உத்தரவாதம் இல்லாவிட்டாலும் ராஜபக்ஷ ஒரு சவாலாக எழக்கூடிய சூழ்நிலை தோன்றினால் அவரின் எழுச்சியை தடுக்க எதைச்செய்யவும் ஐ.தே.க. தயங்காது என்பது ராஜபக்ஷ ஆதரவாளர்கள் அறியாததல்ல**

விசாரணைகளில் அரசியற் குறுக்கீட்டை நிறுத்துதல் ஆகிய விடயங்களைப் பற்றியனவாகவே இருந்தன. பேச்சுக்களின் நோக்கம் ராஜபக்ஷ ஆதரவாளர்களைப் பெருந்தொகையாகக் கொண்டு அடுத்த பாராளு மன்றம் அமைவதும் ராஜபக்ஷ குடும்பத்தையும் ஆத ரவாளர்களையும் ஊழல், மோசடி விசாரணைகளிலி ருந்து காப்பதும் மட்டுமேயாயிருந்தது. அதை விடவும் இப்பேச்சுக்கள் திட்டமிடப்பட்ட முதலாவது தருணத் தில், தனது சகோதரர் பஷில் ராஜபக்ஷ கைதானதைக் காரணமாக்கி, ராஜபக்ஷ பேச்சுக்களை முன்னெடுக்க மறுத்தார். பேச்சுக்கள் நடந்தபோது, ராஜபக்ஷ ஆத ரவு அணி எதிர்பார்த்தளவு சனத்திரளைத் தனது மேதி னக் கூட்டத்தில் திரட்டத் தவறிவிட்டது. அதி வெற்றிக ரமான பேரணிகளாகவும் கூட்டங்களாகவும் ஜே.வி.பி. யினதும் யூ.என்.பி.யினதும் மேதின நிகழ்வுகளே அமைந்தன. எனவே கட்சிப் பிளவு ராஜபக்ஷவுக்கும் சிறிசேனவுக்கும் பாதகமானது என்ற நிலையில் மே 6 புதனன்று நடந்த பேச்சுக்களில் சிறிசேனவுக்குப் பய னான எதுவும் ராஜபக்ஷவின் தரப்பால் முன்வைக்கப் படவில்லை. பேச்சுக்களின் நாளில், குருநாகலில் ராஜ பக்ஷ ஆதரவுக்கூட்டம் ஒன்று பெருஞ்சனத்திரளுடன் நடத்தப்பட்டது. அது மேதினக் கூட்டத்தின் தோல்வி யின் விளைவான ஒரு கூட்ட ஏற்பாடா என்பது நிச்சய மில்லை. எனினும் ராஜபக்ஷ ஆதரவாளர்களின் முயற் சிகள் ராஜபக்ஷ-சிறிசேன முரண்பாட்டை மோசமாக்கி னவே ஒழிய நட்பை மீட்க உதவவில்லை.

எவ்வாறாயினும் ஸ்ரீ.ல.சு.க. எதிர்நோக்கும் சிக்கல் பாரியது. கட்சிச்சின்னமோ ஐ.ம.சு.கூ. சின்னமோ இல் லாமல், ராஜபக்ஷ ஆதரவாளர்கள் அவர்களது ஆதர வுத் தளத்திற்கு விகிதாசாரமான வாக்குகளைப் பெறு வது கடினம். ஏனெனில் மக்கள் கட்சிகளைத் தேர்தல் சின்னங்களுடன் சேர்த்து நோக்கிப் பழகிவிட்டனர். தீவிரமான விளக்கத்துடன் புதிய தேர்தல் சின்னமொன் றையும் (அதாவது கூட்டணிக் கட்சிகளில் ஒன்றி னதை) மக்களுக்குப் பெரிதும் பரிச்சயமற்றுவிட்ட ஒரு கட்சிப் பெரையும் வைத்துப் போட்டியிடுவது கடினம். எனினும் நாட்டின் அதிகம் நேசிக்கப்படும் தலைவராக ராஜபக்ஷ உள்ளார் என்பதை நாம் மறுக்கவியலாது. ஆனால் அந்தச் செல்வாக்கு ராஜபக்ஷவை அண்டி நிற்பவர்கட்கு வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. ஒவ்வொரு தொகுதி யையும் குறிவைக்கும் ஸ்ரீ.ல.சு.க, யூ.என்.பி. வேட் பாளர்களின் மோதல்களைத் தவிர்ப்பது சிறிசேனவுக் கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எளிதல்ல. ஒரு வகையில் நடப்பிலுள்ள தேர்தல் முறை அதனைக் குறைக்கலாமே ஒழியத் தவிர்க்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் மினி நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


நாம் மறக்கக்கூடாத விடயம் ஏதெனில் இன்றைய தேர்தல்கள் அரசியலைப் பற்றியனவல்ல. அவை தனி மனித அதிகாரத்தையும் செல்வாக்கையும் பொருளீட்டலையும் பற்றியன. யூ.என்.பி.யோ. ஸ்ரீ.ல.சு.க.வோ கொள்கைகளால் வழிநடத்தப்படும் கட்சிகளல்ல. அவை சில குழுக்களையும் தனிமனிதர்களையும் அதிகாரத்திற் கொண்ட அரசியல் வணிக நிறுவனங்கள் மட்டுமே. அவற்றுக்கு மக்கள் நலனோ நாட்டின் பொருளாதாரமோ நாட்டின் இறைமையோ மனித உரிமைகளோ ஜனநாயகமோ ஒரு பொருட்டல்ல. இந்த நாடு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதன் கூட்டாளிகளதும் ஆதிக்கத்திலே உள்ளது என்பதும் அதன் முகவர் அமைப்புகளான உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமுமே நாட்டின் பொருளாதாரத்தையும் கல்வி, மருத்துவ, சமூக நலன் கொள்கைகளையும் நெறிப்படுத்துகின்றன. சீன ஆதிக்கம் பற்றிப் பேசப்பட்டாலும் அமெரிக்காவுடனான இராணுவ உடன்படிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய அரசாங்கம் ஆட்சியில் எந்த வடிவத்திற் தொடர்ந்தாலும் மக்கள் மீதான சுமைகள் ஏறுவதும் நாட்டின் வளங்கள் யாவும் அந்நிய மூலதனத்துக்கு அடகு வைக்கப்படுவதும் தவிர்க்கவியலாதது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைவதைப் பற்றிப் பேசப்படுகிறது. கட்சி வேறுபாடுகள் கடந்த அரசாங்கம் என்பது இன்று இயலுமானதே. ஏனெனில் இன்று முழுநாட்டிலும், தேசிய இனப்பிரச்சினையை விட்டால் எந்த வேறுபாடும் அற்ற கட்சிகளின் அரசியலே ஓங்கி நிற்கிறது. இது தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் உள்ளடக்கும்.

பாராளுமன்றம் என்பது கள்வர் குகை என்பது லெனினின் புகழ்பெற்ற கூற்று. அங்கே கள்வர் கூட்டங்கள் தம்முள் மோதுவதுண்டு. தேசிய அரசாங்கத்தில் கள்வர்கள் ஒன்றுபடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்துக்குச் சவாலாக அமையக் கூடியவர்களை அடக்கும் நோக்குடனேயே இப்போது ஊழல், மோசடி விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தல் வரும்போது அவர்களை இயங்க முடியாமற் செய்யும் நோக்கங்களையும் நான் ஏற்கிறேன். ஆனால் சில மோசடிக்காரர்களும் ஊழற்காரர்களும் கவனமாக வலையிலிருந்து தவிர்க்கப்படுவர் எனவும் நாம் எதிர்பார்க்கலாம். எனவே ஊழலுக்கு எதிரான அரசாங்க முனைப்பு ஊழலைப் பற்றியதல்ல என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். இனிவரவுள்ள ஆட்சியாளர்கள் யோக்கியர்களல்லர் என்பதிலும் நாம் தெளிவாயிருக்க வேண்டும். ஆயினும் தண்டனைக்குட்படுவோர் எவரும் அப்பாவிகளல்ல என்பதைப் பற்றியும் நாம் தெளிவாயிருக்க வேண்டும்.

பாரபட்சமான ஊழல் விசாரணைகள் அரசாங்கத்தின் நம்பகத்துக்குக் கேடானவை என அரசாங்கமும் அதில் முதலிட்டுள்ள முதலாளிய, ஊடக நிறுவனங்களும் அறியும். ஆனால், அதிகாரத்தைப் பிடித்த பின்பு நம்பகம் பற்றி எந்த ஆட்சியாளர்களும் கவலைப்படுவதில்லை. ■

---

*(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

முன்னைய தேர்தல்களைவிடவும் இத்தடவை பெரும் பின்னடைவையே சந்தித்திருக்கிறது. ஸ்கொட்லாந்து தான் இதுகாலவரையில் தொழிற்கட்சியின் பாரம்பரியமான செல்வாக்குக் கோட்டையாக விளங்கிவந்தது. இத்தடவை அக்கட்சி ஸ்கொட்லாந்து தேசியவாதக் கட்சியிடம் படுமோசமான தோல்வியைக் கண்டிருக்கிறது. தொழிற்கட்சி ஸ்கொட்லாந்தில் துடைத்தெறியப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

முன்னைய பாராளுமன்றத்தில் 57 ஆசனங்களைக் கொண்டிருந்த லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு இத்தடவை வெறுமனே 7 ஆசனங்களே கிடைத்திருக்கின்றன. கன்சர்வேட்டிவ் தலைமையிலான கூட்டரசாங்கத்தில் இணைவதற்கு லிபரல் ஜனநாயகக் கட்சி எடுத்த முன்னைய முடிவே இத்தகைய தோல்விக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. கூட்டரசாங்கத்தில் இணைந்திருந்ததை தங்களுக்குச் செய்யப்பட்ட துரோகமாகக் கருதிய அக்கட்சியின் ஆதரவாளர்கள் இத்தடவை அதற்கு வாக்களிக்காதிருக்கத் தீர்மானித்திருந்தார்கள்.

மிகவும் கவனத்தைத் தூண்டுகின்ற முடிவு வட அயர்லாந்தில் இருந்தே வந்திருக்கிறது. அந்த மாகாணத்தில் தேசியவாதிகள் தரப்பிலும் பிரிட்டனுடன் சேர்ந்திருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்ட யூனியனிஸ்டுகள் தரப்பிலும் மிதவாதப் போக்குடைய கட்சிகளே பெருமளவு ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கின்றன. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பலர் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது பிரிட்டிஷ் அரசியலில் இந்திய சமூகத்தின் செல்வாக்கின் அதிகரிப்பை வெளிக்காட்டுகிறது. ரணில் ஜெயவர்த்தன என்பவரும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியிருக்கிறார். இவரின் தந்தை இலங்கையர், தாயார் இந்தியப் பெண்மணி.

உறுதியான வெற்றியைப் பெற்றிருக்கின்றபோதிலும், கமரூனின் இரண்டாவது பதவிக்காலம் மிகவும் சுலபமானதாக இருக்கப்போவதில்லை என்பதே பெரும்பாலான அரசியல் அவதானிகளின் மதிப்பீடாக இருக்கிறது. பாராளுமன்றத்தில் கமரூனுக்கு மிகச் சிறிய பெரும்பான்மையே இருக்கிறது.

தனது கட்சி எம்.பி.க்களை அவர் ஒன்றுபடுத்தி வைத்திருக்க வேண்டியது அவசியமானதாகும். கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் பல கடும் போக்காளர்கள் இருக்கிறார்கள். குடிவரவு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான பிரிட்டனின் உறவுகள் போன்ற விவகாரங்களில் அந்தக் கடும் போக்காளர்களிடமிருந்து கமரூன் நெருக்குதல்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

*(52ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

**எதிர்க்குழுவின் சதி முயற்சியால் தோற்றுப்போய் விடாமல் 215 வாக்குகளை சாதகமாகப்பெற்று திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியமை உண்மையில் ஒரு சாதனையே. 1978க்குப் பின்னரான 37 வருட கால அரசியல் யாப்பு வரலாற்றின் பின்னணியில் வைத்துப் பார்த்தால்தான் புதிய திருத்தத்தின் நன்மைகளின் முக்கியத்துவம் புரியும்**

# அரசியலமைப்புக்கான 19வது திருத்தத்தின் அரசியல் அனுபவங்கள்



ராஜன் பிலிப்ஸ்

அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தால் நாம் பெற்ற நன்மைகள் என்ன என்று கேட்டால், இத்திருத்தத்தைக் கொண்டு வருவதற்குப் படாதபாடுபட்ட அனுபவம் இருக்கிறதே அதுதான் கிடைத்த நன்மை எனலாம். யாப்புத் திருத்தத்தை வரைதல், நீதிமன்றின் மீளாய்வு விவாதம், சட்டமாக்கி ஏற்றுக் கொள்ளல் என்ற இந்தச் செயல்முறை யாப்புத் திருத்தத்தின் உள்ளடக்கத்தை விட முக்கியமானவை.

முதலாவதாக திருத்தம் பொதுமக்கள் கவனத்தை ஈர்த்த விடயமாயிற்று. இதற்கு எதிர்ப்பும் விவாதமும் எழுந்தது. இலங்கையின் அரசியல் யாப்பு வரலாற்றில் இதனையொத்த முன்னுதாரணம் கிடையாது. இரண்டாவதாக உயர்நீதிமன்ற நீதிபதிகள் தலையீடு இன்றிச் சுதந்திரமாகத் தம் பங்களிப்பை நல்கினர். முன்னர் அடிமைத்தனமாக செயற்பட்டு மரபை மீறிக்கொண்டு உயர்நீதிமன்றம் செயற்பட்டது. உயர்நீதிமன்றத்தின் அடிமைத்தனம் 1972 அரசியல் யாப்புடன் தொடங்கியது. 1978 யாப்புடன் அது நிலைபேறுடைய ஒன்றாகி உயர்நீதிமன்றின் தாழ்நிலை உறுதிப்பட்டிருந்தது. மூன்றாவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்திற்கு வழங்கிய தலைமைத்துவம் யாவற்றிலும் முக்கியமான ஒன்றாக இருந்தது. சிறிசேனவிற்கு முன்பு இருந்த ஜனாதிபதி பாராளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரம் கொண்டு பணியச் செய்து காரியம் ஆற்றினார். அவரது செயற்பாட்டின் தனிமுத்திரை அதுவே ஆகும். ஜனாதிபதி சிறிசேன பாராளுமன்றச் செயல்முறையில் பங்கேற்று அவதானியாகச் செயற்பட்டார். இறுதியில் ஏறக்குறைய ஏகமனதான முடிவு ஒன்றிற்கு பாராளுமன்றம் வருவதற்கு அவர் உதவினார். அவர் தலைமைத்துவம், இணக்கச் செயல்முறை என்ற இரண்டும் ஒன்றிற்கு ஒன்று எதிரானவை அல்ல என்பதை நிரூபித்தார். நல்ல தலைமைத்துவம் மூலம் இணக்கத்தோடு கூடிய நீதியான முடிவு அடையப்பட முடியும் என்பதை நிரூபித்தார். நீண்ட நாள் சச்சரவும், பேரப்பேச்சுமாகக் கழிந்த பின் இறுதியில் ஒருமனதான முடிவு எட்டப்பட்டது. இது வெளித்தோற்றமாக இருந்தாலும் இந்த ஒற்றுமையான முடிவு முக்கியமான திருப்பம். மூன்று வெவ்வேறு திசைகளில் இழுக்கும் வண்டியின் நிலையில் எதிர்க்குழுவின் சதி முயற்சியால் தோற்றுப் போய்விடாமல் 215 வாக்குகளைச் சாதகமாக பெற்றுத் திருத்தத்தை நிறைவேற்றியமை ஒரு சாதனையே. மேலே நான் 19வது திருத்தத்தின் நான்கு நன்மைகளை விபரித்தேன். இலங்கையில் 1978 அரசியல் யாப்பின் பின்னரான 37 வருடகால அரசியல் யாப்பு வரலாற்றின் பின்னணியில் வைத்துப் பார்த்தால் தான் இந்த நன்மைகளின் முக்கியத்துவம் புரியும்.

## 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு

இலங்கையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட 'பாராளுமன்ற முறை அடித்தளம்' ஒன்று இருந்து வந்தது. இதன்மேல் 'ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை என்ற மேற்கட்டுமானத்தை' 1978 அரசியல் யாப்பு மூலம் ஜே.ஆர்.ஜயவர்த்தன புகுத்திவிட்டார். ஜே.ஆர். இலங்கையின் பாராளுமன்ற முறையில் நீண்டகாலம் ஊறித் திளைத்த ஒருவர்; அதன் பொற் காலத்தில் அந்த மரபுடன் இணைந்திருந்தவர். ஆத லால் பாராளுமன்ற மரபுரிமையை முற்றாக அழித்து விடும் உள்நோக்கம் அவருக்கு இருந்திருக்காது. இலங்கையின் முதலாவது 'நிறைவேற்று ஜனாதிபதி யாகப் பதவியேற்ற பின்னும் அவர் ஜனாதிபதியாக அல்லாது ஒரு பிரதமர் போன்றே செயற்பட்டார் என்ற விமர்சனத்தை ஏ.ஜே.வில்சன் கூறினார். 1978 அரசி யல் யாப்பில் அதிகாரவேறாக்கம் என்ற கருத்து புகுத் தப்பட்டதன் நோக்கமே 1972 அரசியல்யாப்பு 'பாரா ளுமன்றத்தின் சர்வாதிகாரத்தை' உருவாக்கியிருந்த மையாகும். பாராளுமன்ற சர்வாதிகாரத்திற்குப் பதி லாக 'ஜனாதிபதியின் சர்வாதிகாரத்தை' ஏற்படுத்துதல் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் நோக்கமாக இருந்திருக்க முடியாது. அவரிடம் வேறு பல உள்நோக்கங்கள் இருந்தன. அதனை விட முன்கூட்டியே கருதாத பின் விளைவுகள் பலவற்றையும் ஜனாதிபதி முறை உண் டாக்கிவிட்டது.

1970-77 காலத்து ஐக்கிய முன்னணி அரசாங்கம் அரசியல் பக்கச்சார்பான தீர்மானங்களைச் செய்தது. இத்தீர்மானங்கள் 1972 யாப்பின் பின்விளைவாக அமைந்தன. ஆட்சிக்காலத்தை அந்த அரசாங்கம் இரண்டு வருடங்களால் (1975-77) நீடித்தது. பெப் ரவரி 4 ஐ சுதந்திரதினம் என்பதற்குப் பதிலாக, இலங்கை குடியரசாக ஆக்கப்பட்ட மே 22 ஐ சுதந்திர தினமாகக் கொண்டாடியது. இவை ஆத்திரமூட்டும் செயல்களாக அமைந்தன. இதனால் தான் தனக்கே உரிய அதிகார பாணியில் ஜே.ஆர்.சர்வசன வாக்கெ டுப்பு நடத்தப்படாமல் இவைபோன்ற திருத்தங்களைச் செய்ய முடியாது என்ற ஏற்பாட்டைக் கொண்டுவந் தார். ஜனாதிபதியின் பதவிக்காலம், பாராளுமன்றத் தின் பதவிக்காலம் என்பவற்றை மாற்றுதல் தேசியத் தின் சின்னங்களான சுதந்திரதினம் (பெப். 4) தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியனவற்றை மாற்று தல் என்பனவற்றையும் சர்வசன வாக்கெடுப்பு என்ப தன் மூலம் கட்டுப்படுத்தினார். இன்று தேசிய கீதத் தைத் தமிழில் பாடலாமா என்பதை அரசியல் யாப்புப் பிரச்சினையாக்கிவிட்ட கோமாளித்தனத்தில் இது போய் முடிந்தது. தேசிய கீதத்தைத் தமிழில் பாடக் கூடாது எனத் தடுப்பதற்கு அரசியல் யாப்பில் இருந்து ஆதாரம் காட்டும் முட்டாள்களைப் பார்த்து ஜே.ஆர். எள்ளி நகையாடியிருப்பார். அரசாங்க எதிர்ப்பாளர் கள் இப்போது தேசியக் கொடிக்குப் பதிலாக கண்டிய அரசர் காலத்துச் சிங்களக் கொடியை பிடித்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ராஜபக்ஷ சகோதரர்கள் மீது சட்டத்தின் வலிமையான கரங்களின் பிடி இறுகும் போது நிகழ்ந்த எதிர்வினையாக இந்தச் சிங்களக் கொடி விவகாரம் அமைந்தது. இந்தச் செய்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் சேர்ந்து கொண் டமை அருவருக்கத்தக்க விடயமாகும். ஆயினும் இவர்கள் மீது அரசியல் யாப்புச் சட்டப்படி நடவ டிக்கை எடுக்கும் தேவை இல்லை. கைகொட்டிச் சிரிக்க வேண்டிய செய்கையாகவே இதை ஒதுக்கி விடலாம்.



கொந்தளிப்பான கடலில் ஒரு படகைச் செலு த்தி கரையேறுவதைப் போன்ற கடினமான வேலையை சிறிசேன திறமையாக செய்து முடித்தார். இலங்கையில் அரசியல் பேரம் பேசல் வரலாற்றில் இது ஒரு பெரும் சாதனை. அவரின் பொறுமை, தனிப்பட்ட அர்ப்பணிப்பு, அமைதியாக காரியங்களை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றல் என்பன இச்சாதனையை நிகழ்த்த உதவின

1978 யாப்பின் சிற்பியான ஜே.ஆர்.சில நோக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடு செயற்பட்டார். ஆனால் அவர் கருதாததும் எதிர்நோக்காததுமான பின்விளைவுகள் பலவும் அவரது அரசியல் யாப்பினால் ஏற்பட்டன. இவற்றில் சில அவரது பதவிக் காலத்திலேயே நிகழ்ந்தன. இன்னும் சில அவரின் பதவிக்காலத்தின் பின் நிகழ்ந்தன. 1978 இல் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை இருமடங்காகக் கூட்டுவதற்கு அவர் சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்தினார். பாராளுமன்றத்தில் தனக்கு இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்தை இழக்காமல் வைத்திருப்பதற்காகவே அவர் இச் செயலைச் செய்தார். இது மட்டுமல்லாமல் தனது ஆளும் கட்சிக்குக் குறுகிய கால நன்மைகளைத் தரும் திருத்தங்களையும் செய்தார். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையையும் பறித்தார். இவை யாவற்றையும் செய்தபோதும் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதிக்குக் கீழ்ப்பட்டதாகப் பாராளுமன்றத்தை ஆக்கும் செயல் எதனையும் செய்யவில்லை. அத்தோடு ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களை ஜே.ஆர்.ஜயவர்த்தன என்ற நபருக்குரிய அதிகாரங்களாக மாற்றவோ அல்லது அதிகாரங்கள் முழுவதையும் தன்னிடத்தில் குவிப்பதற்கும் ஜனாதிபதி அதிகாரங்களை அவ்வாறு பிரயோகிப்பதற்கும் அவர் முயற்சிக்கவில்லை. இந்தப் போக்கு உண்மையில் ஜே.ஆர் பதவியில் இருந்து நீங்கிச் சென்ற பின்தான் தொடங்கியது; மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இது உச்சம் பெற்றது. ஜே.ஆர். ஜயவர்த்தன இன்று உயிரோடு இருந்திருந்தால் 'தனது அரசியல் யாப்பை' மகிந்த ராஜபக்ஷ அங்கம் அங்கமாக சிதைத்து அழித்து முழுமையாக அதனை உருக்குலைத்திருப்பதையும் சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்தாமல் ஜனநாயகத்தை நிலைபெறச் செய்யப் போவதாகப் போலியான வாதத்தை முன்வைத்து ஆறு ஆண்டுகளாக தனது பதவிக் காலத்தை இருதடவைகளுக்குமாக நீடித்துக் கொண்டார் என்பதையும் கண்டு அவர் ஆச்சரியப்பட்டிருப்பார். இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் யாப்புச் சிக்கல் ஏற்பட்டிருக்க வேண்டிய ஒன்றுதானா, அது தவிர்க்க முடியாததா அல்லது மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் இரண்டாவது தடவைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒன்றா என்ற கேள்வி நீண்டகாலம் விவாதத்துக்குரியதொன்றாகவே இருக்கும். என்னுடைய வாதம் யாதெனில் இந்த அரசியல் யாப்புச் சிக்கல் தவிர்க்க முடியாத சிக்கல், மகிந்தவால் உருவாக்கப்பட்ட சிக்கல் என்ற இரு காரணங்களாலும் ஏற்படுத்தப்பட்டதென்பதாகும். இதனை விட மூன்றாவது காரணம் ஒன்றும் இச்சிக்கலுக்கு காரணமாயிற்று என்றும் நான் கூற விரும்புகிறேன். விடுதலைப் புலிகளின் தாக்கமும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் காரணமாக அரசியல் யாப்பின் செயற்பாட்டிலும், அரசின் செயற்பாட்டிலும் ஏற்பட்ட தாக்கங்களும் இம்மூன்றாவது காரணம் என்பதே என் வாதம். விடுதலைப் புலிகளுடனான அனுபவம் 1978 அரசியல் யாப்பின் நோக்கங்களிற்கும் அந்த யாப்பின் விளைவுகளுக்குமிடையில் ஒரு பொருந்தாமையை உருவாக்கியது.

1978 இன் அரசியல் யாப்பு ஜனாதிபதி முறையை அறிமுகம் செய்தது. அப்போது ஜனாதிபதி முறைக்குச் சார்பாக முன்வைக்கப்பட்ட வாதம் ஒன்றினை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஜனாதிபதித் தேர்தலில் நேரடிப் பங்கிருக்கும்; அவர்கள் அத்தெரிவில் தீர்மான சக்தியாக முடியும்; பாராளுமன்ற முறையுடன் ஒப்பிட்டால் பாராளுமன்ற முறையில் தமிழர்களும் முஸ்லிம்களும் அரசாங்கமொன்றைத் தெரிவதில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியற்றவர்களாக உள்ளனர் என்பதே இந்த வாதம். இந்த வாதத்தை அப்போது தமிழ் ஆய்வறிவாளர்களும் பிரமுகர்களும் பலர் ஆதரித்து எழுதினர்- பேசினர். இந்த வாதம் இப்போது அதன் தலைகீழ்வடிவத்தை எடுத்திருக்கிறது. நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் அதன் உச்ச அதிகாரங்களையும் இலங்கை அரசினுடைய இறைமையின் பாதுகாப்பாக உள்ளதெனவும், மகிந்த ராஜபக்ஷ ஒருவரே மேற்கு நாடுகளினதும், புலம்பெயர் தமிழர்களினதும் சதிகளுக்கு எதிராக இலங்கை அரசின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய சிங்களத் தலைவர் என்றும் இப்போது சிலர் கூறுகிறார்கள். விடுதலைப் புலிகளுடனான அனுபவம் ஜனாதிபதி முறைக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துகள் வெளிப்படக் காரணமாயிற்று. ஆயினும் விடுதலைப்புலிகள் பற்றிய அனுபவம் 2009 இல் அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பிந்திய காலத்திற்கும் தாக்கம் புரிவதாகக் கொள்வது தவறு. அதன் தாக்கமும் விளைவுகளும் இப்போது இல்லை. விடுதலைப் புலிகள் பற்றிய கற்பனையான அச்சுறுத்தல் ஒன்றை சிருஷ்டித்து ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தொடர்ந்திருப்பதற்கான நியாயப்பாட்டை உருவாக்குவது ஏற்கப்பட முடியாதது. மக்கள் 2015 ஜனவரி 8 ஆம் திகதியன்று அதனை நிராகரித்து விட்டார்கள். அதன் பின்னர் ராஜபக்ஷ விசுவாசிகள் தேர்தல் மூலம் கிடைத்த ஆணையைச் செயற்படுத்துவதை முட்டுக்கட்டைகளாகப் போட்டுத் தடுக்க எத்தனித்தனர். அதுவும் ஏப்பிரல் 28

**ராஜபக்ஷ ஆட்சிப் பாணியிலிருந்து மாறுபட்ட ஒரு போக்கு இப்போது வெளிப்பட்டிருக்கிறது. 19ஆவது திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பை வெளியிட்ட போது சிறிசேனவும் ரணிலும் ஒன்றிணைந்த குரலில் நீதிமன்றத்தின் முடிவை ஏற்று நடப்போம். மசோதாவில் ஒவ்வாதவை எனக்கூறப்பட்ட பிரிவுகளை திருத்திக்கொள்வோம் என்று கூறினர். நீதிமன்றை தூற்றிப் பேசும் உரைகள் பாராளுமன்றத்தில் இத்தடவை இல்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆம் திகதி முறியடிக்கப்பட்டது. ஜனாதிபதி சிறிசேன வின் பணிவடக்கமும் கடின உழைப்பும் இதனை முறியடிக்க உதவின. ஆகையால் 19வது திருத்தச் செயல்முறை மூலம் சிறிசேன தான் நிறைவேற்று ஜனாதிபதியாகவும், பாராளுமன்றத்திற்குத் தலைமை வகித்து நெறிப்படுத்தும் பாராளுமன்ற ஜனாதிபதியாகவும் இருக்கிறேன் என்பதை நிரூபித்துக் காட்டினார்.

### மாற்றம் பற்றிய அனுபவம்

நான் இக்கட்டுரையின் முற்பகுதியில் கூறியிருப்பதை மீண்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நீண்ட காலமாகவே 1978 அரசியல் யாப்புப்பற்றி ஒரு கருத்து நிலவி வந்தது. அந்த யாப்பு ஜனாதிபதியை முதன்மை நிலைக்கு உயர்த்தி விட்டுப் பாராளுமன்றத்தையும் நீதித்துறையையும் அவரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாய் கீழ்ப்படுத்திவிட்டது என்பதே இக்கருத்தாகும். இதில் உண்மையில்லை என்பதை 19வது திருத்தத்திற்கு உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு நிரூபித்து விட்டது. 'ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தின் ஒரே ஒரு மூலம்; உறைவிடம்' என்ற வாதம் பொய்யாக்கப்பட்டுவிட்டது. அது போன்றே ஜனாதிபதியிடம் உள்ள 'நிறைவேற்று அதிகாரம் எவ்வித தளைகளோ கட்டுப்பாடோ அற்றது; அரசாங்கத்தின் வேறு எந்த ஒரு அங்கத்தினாலும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது' என்ற வாதமும் பொருந்தாது என்பதும் நிரூபணமாகிவிட்டது. பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர் ஜனாதிபதி மட்டுமே அல்லர்; அவருட்பட முழு மந்திரி சபையுமே பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. இதை வேறு வார்த்தையில் கூறுவதானால், ராஜபக்ஷ தானே நிறைவேற்று அதிகாரம் முழுவதையும் கொண்டிருப்பவர் என்றும், தனது அதிகாரங்கள் வரம்பற்றவை, கட்டுப்பாடுகள் அற்றவை என்றும் கருதி, அமைச்சரவையையும் பாராளுமன்றத்தையும் புறந்தள்ளி நடந்துகொண்டதுமல்லாமல் நீதிமன்றையும் புறந்தள்ளினாரென்றால் அதற்கான பிரதான காரணம் அரசியல் யாப்பில் உள்ள குறைபாடு அன்று; அவருடைய பிழையான சிந்தனைதான் காரணம் எனலாம். 19வது திருத் தம் அரசியல் யாப்பு, அதன் உள்ளடக்கம், அதன் நோக்கங்கள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறுவதற்கு அரிய சந்தர்ப்பமொன்றை உயர்நீதிமன்றிற்கு வழங்கியது. இதன் மூலம் ராஜபக்ஷ செய்த திரிபுகளைச் சரி செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அரசியல் யாப்பின் சில ஏற்பாடுகளைத் திருத்துவதாயின் சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்களின் சம்மதத்தைப் பெற வேண்டும் என்றும் கூறி நீதிமன்றின் சுதந்திரத்தை நிலைநிறுத்தும் சந்தர்ப்பத்தையும் இது வழங்கியது. இவ்விதம் நீதித்துறையின் சுதந்திரம் நிலை நிறுத்தப்பட்டதைப் பலரும் பாராட்டினர்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சிப்பாணியில் இருந்து மாறுபட்ட ஒரு போக்கும் இச்சந்தர்ப்பத்தில் வெளிப்பட்டது. உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பை வெளியிட்டபோது, சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றிணைந்த குரலில் நீதிமன்றத்தின் முடிவை ஏற்று நடப்போம், மசோதாவில் ஒவ்வாதவையெனக் கூறப்பட்ட பிரிவுகளைத் திருத்திக் கொள்வோம் என்று கூறினர். பாராளுமன்றத்தில் நீதிமன்றத்தைத் தூற்றிப் பேசும் பேச்சுக்களும் இடம்பெறவில்லை. பிரதமநீதியரசர் மீது குற்றம் சாட்டிப் பதவி நீக்க வேண்டும் என்றும் எவரும் பேசவில்லை. ஆனால் 19வது திருத்தம் நிறைவேறாவிட்டால் பாராளுமன்றத்தைச் சிறிசேன கலைப்பதைத் தடுப்பதற்காக அவர் மீது குற்றச்சாட்டுப் பிரேரணையைச் சமர்ப்பிக்க வேண்டும்; பாராளுமன்றத்தைக் கலைப்பதைத் தடுக்க வேண்டும் எனச் சில எதிர்க்கட்சியின் முட்டாள்கள் கூறத் தொடங்கினர். இறுதியில் 19வது திருத்ததை முடக்குவதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு நின்றவர்களே அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். தமது பொறுப்பற்ற செய்கை மூலம் 19வது திருத்தத்தை தோற்கடித்தால் தாம் தனிமைப்பட்டுப் போவதோடு அல்லாமல் அவமானத்திற்கும் உள்ளாவோம் என்ற பயம் காரணமாகவே அவர்கள் திருத்தமசோதாவை வரவேற்றும் ஆதரித்தும் வாக்களித்தனர்.

எதிர்க்கட்சியினர் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்பது இப்போது தெளிவாகிறது. ராஜபக்ஷ ஆதரவாளர்கள் 19வது திருத்தத்தைத் தோற்கடிக்க வேண்டும் என விரும்பினர். அதன்மூலம் வீழ்ச்சியடைந்தாலும் தமது தலைவரும் அவரது சகோதரர்களும் தான் இலங்கையில் எதையாவது செய்யக்கூடிய ஆற்றல் உடையவர்கள் எனக் காட்ட முனைந்தனர். அவர்களால் குழப்பநிலை ஒன்றை உருவாக்க முடிந்ததே தவிர 19வது திருத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு தேவையான 75 வாக்குகளைத் திரட்ட அவர்களால் முடியவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பெரும்பான்மையான தலைவர்களுக்கு இக்கட்டான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை ஏற்பட்டது. 19வது திருத்த மசோதாவை ஆதரிக்கும் வேளையில் அதில் திருத்தம் தேவை என்றும் கூற வேண்டியதாயிற்று. முன்னாள் அமைச்சர்கள் உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை காலமும் வராத அக்கறையும் துடிப்பும் ஏற்படலாயிற்று. இதுவரை ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கும் அவரது பலம்மிக்க இரு சகோதரர்களுக்கும் பயந்து வாய் மூடிக்கொண்டிருந்தவர்கள் பாராளுமன்ற இறைமையக் காப்பாற்றிக்கொள்ளத் துடித்தார்கள். அரசியல் யாப்புச்சபை, சுதந்திரமான ஆணைக்குழுக்கள் என்பன பாராளுமன்ற இறைமையைக் காக்கும் எனக்கருதினர். இதனால் திருத்தத்தின் பயனாளிகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயனடைந்தார்கள்.

மேற்குறித்தவாறு சூழல் சிக்கல் மிகுந்ததாக மாறியிருந்தது. கொந்தளிப்பான கடலில் ஒரு படகைக் கரையை நோக்கிச் செலுத்திக் கரையேறுவது போன்ற ஒரு கடினமான வேலையைச் சிறிசேன திறமையாகச் செய்து முடித்தார். இலங்கையில் அரசியல் பேரம் பேசல் வரலாற்றில் இது ஓர் பெரும் சாதனை. ஜனாதிபதியின் பொறுமை, அவரது தனிப்பட்ட அர்ப்பணிப்பு, அமைதியாகக் காரியங்களை முன்னெடுத்துச் செல்லும் அவரது ஆற்றல் என்பன இச்சாதனையை நிகழ்த்த உதவின. அறிவார்ந்த விவாதங்கள் மூலம் யாவருக்கும் ஏற்புடைய பொது முடிவுகளை அடைவது எம்பண்பாட்டில் இல்லாத விடயம். எதிர்எதிராக நின்று வாதம் செய்து சண்டை பிடிப்பதில் நாம் பழக்கப்பட்டுவிட்டோம். முந்திய பாராளுமன்றங்களில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்படும்போது இருதரப்பினராகப் பிரிந்து நின்று கன்லக்கும் பேச்சுக்களை நிகழ்த்துவார்கள். நாவன்மையும் வாதத்திறமையும் உயர்தரத்தினதாக இருக்கும். ஆனால் 19வது திருத்தம் போன்று பயன்முறையான நன்மையைத் தந்த விவாதங்கள் எமது பாராளுமன்ற வரலாற்றில் நடந்ததாகச் சரித்திரம் இல்லை. இறுதியில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 215 பேர் திருத்தத்திற்குச் சாதகமாக வாக்களித்தனர். ஒருவர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தார். (ஒருவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை, எட்டுப்பேர் விடுகையில் இருந்தனர். இவர்களில் ஒரு முக்கியமான நபர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்) வாக்கெடுப்புக்கு முன் சபையில் எத்தகைய குழப்ப நிலை உருவாக்கப்பட்டிருந்தது! இந்தக் குழப்பங்களின் மத்தியில் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குள்ளேயே பிரசன்னமாக இருந்தார். ஜனாதிபதி மாளிகையில் இருந்தவாறே தூர நின்று இயக்கும் தந்திரத்தை அவர் கையாளவில்லை. இதுவும் ஒரு முக்கியமான மாற்றமாகும்.

> தமிழர்களின் பிரச்சினைகளை முன்னிலைப் படுத்துவதை ஒருபுறம் வைத்துவிட்டு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு 19ஆவது திருத்தத்திற்கு அதன் முழுமையான ஆதரவை வழங்கியது. இது புதியதொரு மாற்றம். தந்தை செல்வா ஞாபகார்த்த சொற்பொழிவை நிகழ்த்துவதற்கு சந்திரிகா குமாரதுங்கவை கூட்டமைப்பு அழைத்திருந்தமை தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்பும் பணிக்கு உதவக்கூடிய நல்லதொரு அனுபவமாகவும் அமைந்தது




19ஆவது திருத்தத்தை அங்கீகரிக்கும் செயல்முறையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இறுதிவரை பங்குகொண்டதும் இன்னோர் திருப்பமாகும். தமிழர்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைமை அரசியல் யாப்பு உருவாக்கச் செயல்முறையில் நீண்ட காலமாகப் பங்கு பற்றாமல் விலகியே இருந்துவந்தது. 1947, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் அரசியல் யாப்பு உருவாக்கத்தில் தமிழர் தலைமை பங்கு கொள்ளாமல் பகிஷ்கரிப்புச் செய்தது. தமது பகிஷ்கரிப்பின் மூலம் அவர்கள் தமது அரசியல் நியாயத்தை வலியுறுத்த முயன்றனர்.

13வது அரசியல் திருத்தம் கொண்டுவரப்பட்ட போது அவர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்திருந்தனர். 6வது திருத்தம் மூலம் அவர்கள் பாராளுமன்றத்தைவிட்டு அகற்றப்பட்டவர்களாய் வெளியே இருந்தனர்.

இன்று புதியதொரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. தமிழர் பிரச்சினைகளின் முன்னுரிமைப்படுத்தலை ஒரு புறம் வைத்துவிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19வது திருத்தத்திற்குத் தனது முழு ஆதரவை வழங்கியது. அவர்கள் ஆதரவு வாக்குகளை அளிப்பதோடு நின்றுவிடவில்லை. இப்போது மரியாதை இழந்து போன 18வது யாப்புத்திருத்தத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் திறமையாக வாதாடிய எம்.ஏ.சுமந்திரன் யாவரதும் பாராட்டைப்பெற்றார். 19வது திருத்தத்தை

(36ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19வது திருத்தத்திற்குள் அதிகாரப்பரவலாக்கலுடன் சம்பந்தப்பட்ட விவாதங்களை சேர்ப்பதற்கான வாய்ப்புக்கள் பூச்சியமே என்றாலும் சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகளை முக்கியத்துவப்படுத்துவதற்கான வாய்ப்பொன்றை அது வழங்கியது. அந்த வாய்ப்பை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தந்திரோபாய ரீதியாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.**

# தேர்தலுக்குப் பின்னரான தமிழர் அரசியல்



பேராசிரியர்
எஸ்.ஐ.கீதபொன்கலன்

அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்டம் குறித்து தமிழ்க் கருத்துக் கோணத்தில் எழுதப்பட்டிருந்த அண்மைய சில கட்டுரைகள் அந்த திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டபோது அதிகாரப் பரவலாக்கலுக்கான தமிழர்களின் கோரிக்கைகளுக்கும் இடங்கொடுக்கவில்லை என்பதற்காக கொழும்பை குற்றஞ்சாட்டியதைக் காணக் கூடியதாக இருந்தது. தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கத்துக்கு அக்கறை இருந்திருந்தால், 19ஆவது திருத்தத்தின் கட்டமைப்புக்குள்ளேயே அதைச் செய்திருக்க முடியும். ஏனென்றால், அரசியலமைப்புக்கு புதிய மாற்றங்களை வெற்றிகரமாகக் கொண்டுவருவதற்குப் போதுமான பெரும்பான்மைக்கும் அதிகமான பலம் அதற்கு பாராளுமன்றத்தில் இருக்கிறது என்ற வாதத்தை மையமாகக் கொண்டவையாகவே அக்கட்டுரைகள் அமைந்திருந்தன. இவற்றில் அவதானிக்கக்கூடிய - கருத்தைக் கவருகின்ற முனைப்பான ஒரு அம்சம் இருக்கிறது. அதாவது, 2015 ஏப்ரலில் செய்யப்பட்ட அரசியலமைப்பு மாற்றத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களை தமிழ்க்கட்சிகள் எவ்வாறு நோக்கி அணுகின என்பதை உட்புறமாகப் பார்க்க அவை தவறிவிட்டன.

### தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் 19ஆவது திருத்தமும்

19ஆவது திருத்தத்துக்கு தாங்கள் அளித்த ஆதரவுக்குக் கைம்மாறாக நிறைவேற்றப்படவேண்டியவை என்று ஏதாவது கோரிக்கைகளை தமிழ்க்கட்சிகள் முன்வைத்தனவா? அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் எதையுமே தமிழ்க்கட்சிகள் கேட்காத போது கொழும்பு ஏன் விட்டுக்கொடுக்கவேண்டும்? இவை மிகவும் பொருத்தமான கேள்விகளே.

அரசாங்கம் சுயமாகவே அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்யவேண்டுமென்று எதிர்பார்த்தவர்கள் அரைநூற்றாண்டுக்கும் அதிகமான கால நெருக்கடியிலிருந்து எதையுமே கற்றுக்கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதிகாரப் பரவலாக்கத்தை அரசாங்கம் ஒரு அறப்பணியாக நோக்கப்போவதில்லை என்பதைக் கடந்த கால அனுபவங்களில் இருந்து எம்மால் புரிந்துகொள்ள முடியும். அரசியல் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டுமென்று தமிழர்கள் விரும்பினால், அவர்கள் உண்மையில் கடுமையாகப் பாடுபடவேண்டியது அவசியமாகும். வன்முறை ஊடாக அல்ல, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகக் கோட்பாடுகளுக்குள் அரசியல் கருவிகளை அனுகூலமாகப் பயன்படுத்தியே இதைச் செய்யவேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட வன்முறை தமிழ்ச்சமூகத்தையும் நாட்டையும் அனேகமாக முற்றுமுழுதாக நிர்மூலம் செய்ததை நாமெல்லோரும் அனுபவ வாயிலாகக் கண்டிருக்கின்றோம்.

தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக்

உள்நாட்டு அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணக்கூடிய ஏற்பாடுகளையும் அரசியலமைப்புத் திருத்தங்களுக்குள் சேர்க்குமாறு ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சி (ஈ.பி.டி.பி) அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டதாக அறியக்கூடியதாக இருக்கிறது. இதை ஒரு அடையாளபூர்வமான கோரிக்கையாகவே கருத வேண்டியிருக்கிறது. ஏனென்றால், அந்தக் கட்சி அந்த இலக்கு நோக்கி வெளிப்படையாகவும் அக்கறையுடனும் செயற்படவில்லை. எவ்வாறெனினும் வாக்கு வங்கியையும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஈ.பி.டி.பி ஒரு சிறிய கட்சியே.

பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ்ச் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மிகப் பெரிய-முதன்மையான கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்னசெய்தது? அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்டத்தையும் அதிகாரப் பரவலாக்கல் விவகாரத்தையும் எந்தவகையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்புபடுத்தவில்லை. உண்மையில், இனநெருக்கடித் தீர்வுக்கான எந்தவொரு புதிய ஏற்பாடும் இல்லாமலேயே 19ஆவது திருத்தத்துக்கு கூட்டமைப்பு மௌனமான அங்கீகாரத்தை வழங்கியது என்று தான் கூறவேண்டும்.

19ஆவது திருத்தத்துக்கான மூலமுதல் யோசனை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அல்லது அத்திருத்தத்தை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லாமலேயே சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரைவுதான் உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்துக்காகவும் அனுப்பப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இப்போது விளங்கும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உச்ச நீதிமன்றத்தில் இந்த வரைவை மும்முரமாக ஆதரித்து வாதாடினார். 19ஆவது திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் சுமந்திரன் ஆற்றிய உரையில் 'தமிழ்' அல்லது 'அதிகாரப் பரவலாக்கம்' என்ற சொற்கள் உள்ளடங்கியிருக்கவில்லை. கூட்டமைப்பு திருத்தத்துக்கு ஆதரவாகவே வாக்களித்தது. எனவே, கூட்டமைப்பு அத்திருத்தத்தை அதன் மூலமுதல் வடிவத்திலேயே அங்கீகரித்து, ஆதரவளித்தது என்றுதான் கூறவேண்டும். அதனால், தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எந்த கோரிக்கையையும் முன்வைக்காத தமிழ்க்கட்சிகள் 19ஆவது திருத்தத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்கும்போது அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுவது வாதத்துக்கு ஒவ்வாததாகும்.

**ராஜபக்ஷ அரசாங்கம் போன கையோடு வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தை மாகாண சபையில் கொண்டு வந்து நிறைவேற்றினார். இது மிகவும் பிழையான தந்திரோபாயம். சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்காவும் இந்தியாவும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் கொண்டு வரும் என்று அவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது.**

தமிழ்க் கட்சிகள் அதிகாரப் பரவலாக்கல் பிரச்சினையைக் கிளப்பியிருக்க வேண்டுமா? அரசியலமைப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



சீர்திருத்தத்துடன் இனநெருக்கடிக்கான தீர்வு விவகாரத்தை இணைத்திருக்க வேண்டுமென்று சில தமிழ் அவதானிகள் கருதுகிறார்கள். மறுபுறத்திலே, பாராளுமன்றத்தில் வாக்களிப்புடன் அதை இணைத்திருக்கக் கூடாது என்று மிதவாதப் போக்குடைய ஒரு பிரிவினர் கருதுகிறார்கள். 19வது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்ற அதேவேளையில், சுமந்திரன் பாராளுமன்றத்தில் தனது உரையின் போது அதிகாரப் பரவலாக்கல் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்க வேண்டும் என்பது பொதுவான கருத்தாக இருக்கிறது. தமிழர் பிரச்சினைகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதற்கு அது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும்.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் இந்தப் பிரச்சினையை ஏன் கிளப்பியிருக்க வேண்டுமென்பதற்கு குறைந்தபட்சம் இரு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம் 19வது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட்டதல்ல. நாடு எதிர்நோக்குகின்ற முக்கியமான பிரச்சினைகளில் சிலவற்றைத் தீர்ப்பதற்கு அது முயற்சித்தது. தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதுவும் முக்கியமானதே, இரண்டாவது காரணம், 19வது திருத்தத்திற்குள் அதிகாரப் பரவலாக்கலுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களைச் சேர்ப்பதற்கான வாய்ப்புகள் பூச்சியமே என்றாலும், சிறுபான்மையினத்தவர்களின் பிரச்சினைகளை முக்கியத்துவப்படுத்துவதற்கான வாய்ப்பொன்றை அது வழங்கியது. அந்த வாய்ப்பை; தந்திரோபாய ரீதியாக பயன்படுத்தியிருக்க வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 19வது திருத்தம் தொடர்பிலான அதன் அணுகுமுறையின் ஊடாக இனப்பிரச்சினை இனிமேலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று அல்ல என்ற கருத்துக்கு இப்போது பங்களிப்பைச் செய்திருக்கிறது.

## தேர்தலுக்குப் பின்னரான அரசியல்

உண்மையில், நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவின் தெரிவு அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமான முறையில் செயல் ஈடுபாட்டைச் செய்வதற்கு புதியதொரு வாய்ப்பைத் வழங்கியிருக்கிறது. ஏனென்றால் அவரின் வெற்றியில் தமிழர்கள் முக்கியமான பங்கையாற்றியிருக்கிறார்கள். அந்த வாய்ப்பும் தமிழ்க் கட்சிகளினால் விவேகமான முறையில் பயன்படுத்தப் படவில்லை.

போர் முடிவுக்கு வந்த போது, வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு தேசிய ஒருங்கிணைப்பையும் இன நல்லிணக்கத்தையும் சாதிப்பதற்கான இரு பிரதான மார்க்கங்கள் இருந்தன. முதலாவது மார்க்கம், நியாயபூர்வமான கட்டமைப்பொன்றுக்குள் தமிழர்களின் மனக்குறைகளைத் தீர்த்து வைப்பதற்கான அரசியல் செயன் முறை, இரண்டாவது மார்க்கம் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மக்களின் உரிமைகளை அலட்சியம் செய்து தேசிய பாதுகாப்பில் மாத்திரம் கவனத்தைச் செலுத்துகின்ற இராணுவ ரீதியான செயற்பாடுகள்.

முன்னைய அரசாங்கம் இந்த இரண்டாவது மார்க்கத்தையே தேர்ந்தெடுத்தது. தமிழர்கள் மீதான இராணுவக் கட்டுப்பாடு மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. ஆளுநராக இருந்த முன்னாள் இராணுவத்தளபதி இராணுவப் பாணியிலான நிர்வாகமொன்றையே வடமாகாணத்தில் நடத்தினார். இதன் காரணத்தினால்தான் சிவிலியன் அதிகாரியொருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டுமென்று தமிழர்கள் இடையறாத கோரிக்கை விடுத்துவந்தார்கள்.

வடமாகாண சபைக்கான தேர்தலும் தாமதிக்கப்பட்டு வந்தது. இந்தத் தேர்தல் இறுதியில் இந்தியாவிடமிருந்து வந்த நெருக்குதல் காரணமாக நடத்தப்பட்டது. காலத்தை இழுத்தடிக்கும் ஒரு தந்திரோபாயமாகவே முன்னைய அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்தது. அத்தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்துவிட்டது. அதற்கு காரணம் இருந்தது. இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் அக்கறையிருக்கிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தக்கூடியதாக ராஜபக்ஷ அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை. இணக்கபூர்வமான சமிக்ஞைகளை அது காண்பிக்கவில்லை. தனது வாக்கு வங்கியை திருப்திப்படுத்துவதிலேயே ராஜபக்ஷ கவனத்தைச் செலுத்தினார்.

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதையடுத்து அரசியல் சூழ்நிலை மாற்றமடைந்தது. சாதகமான சமிக்ஞைகள் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டன. உதாரணத்துக்கு, வடமாகாண ஆளுநர் பதவியிலிருந்து மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி நீக்கப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பகைமையான போக்கைக் கடைப்பிடித்ததுடன் ராஜபக்ஷ அரசாங்கத்தின் நலன்களுக்கு சேவகம் செய்துகொண்டிருந்த வடமாகாணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இந்தியப் பிரதமர் மோடியினதும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியினதும் இலங்கை விஜயங்கள் சர்வதேச சமூகம் தங்களைப் பாதுகாக்கும் என்று நம்புகின்ற தமிழர்களுக்கு நிச்சயம் ஒரு பின்னடைவாகவே அமைந்திருக்கின்றன. சில தமிழர்கள் மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையை அமெரிக்கா தண்டிக்கும் என்று நம்பினார்கள். இது தவறான நம்பிக்கை**

தின் முன்னாள் பிரதம செயலாளர் விஜயலக்ஷ்மியும் மாற்றஞ் செய்யப்பட்டார். இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சர்ச்சைக்குரிய சில காணிகள் சட்ட ரீதியாக அவற்றுக்கு உரித்துடையவர்களுக்கு மீளக் கையளிக்கப்பட்டன. வடக்கில் சகஜ நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதி செய்தன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் கீழ் இனநெருக்கடிக்கு நியாயபூர்வமான தீர்வொன்று காணப்படுமென்பதை அவை உத்தரவாதம் செய்யவில்லை என்றாலும் கூட, குறைந்தபட்சம் சாதகமான சமிக்ஞைகள் காட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதையெல்லாம் அறியாததாக இருந்தது அல்லது குரோதமான சமிக்ஞைகளைக் காட்டிக் கொண்டிருந்தது என்று தான் சொல்ல வேண்டும். உதாரணத்துக்கு, சர்வதேச விசாரணையொன்றைக் கோரும் தீர்மானத்தை மார்ச் மாதம் வடமாகாண சபை நிறைவேற்றியது. இத் தீர்மானம் குரோதத்தனமானதாகவும் பிழையான தருணத்திலானதாகவும் இருந்தது. அதுகாலவரை அத்தகைய தீர்மானமொன்றைக் கொண்டு வருவதைத் தடுத்துக் கொண்டிருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ராஜபக்ஷ அரசாங்கம் போன கையோடு தானாகவே தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இது மிகவும் பிழையான ஒரு தந்திரோபாயம். இத்தகைய தீர்மானம் கடந்த வருடம் மாகாண சபை உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு கடந்த மார்ச் மாதம் சரியான தருணம் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஏன் நினைத்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

அத்தீர்மானமும் தன்னைச் சந்திக்க வந்த சர்வதேசத் தலைவர்களுடன் விக்னேஸ்வரன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் உள்ளடக்கமும் சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்காவும் இந்தியாவும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் கொண்டுவரும் என்று அவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்பதை வெளிக்காட்டுகின்றன. இதன் காரணத்தினால் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் புதிய அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமான முறையில் தொடர்பு கொள்வதை விடுத்து இலங்கைக்கு விஜயம் செய்கின்ற சர்வதேச பிரமுகர்களுடன் தங்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்வதில் கூடுதல் அக்கறை காட்டுகிறார்கள்.

ஆரம்பம் முதலிருந்தே, அமெரிக்கா கேந்திரமுக்கியத்துவ நோக்கங்களுக்காக (மனிதாபிமான அக்கறைகளும் ஒரு பங்கையாற்றிருந்தாலும் கூட) இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்களைக் கொண்டு வருவதில் முன்னின்று செயற்பட்டு வந்திருக்கிறது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர்களில் சிலர் உட்பட சில தமிழர்கள் மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையை அமெரிக்கா தண்டிக்கும் என்று நம்பினார்கள். இது தவறான நம்பிக்கை.

இந்தியாவுடனும் மேற்குலகத்துடனும் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கான விருப்பத்தை புதிய அரசாங்கம் வெளிக்காட்டியிருப்பதையடுத்து இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றப்போகின்றன. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியினதும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியினதும் இலங்கை விஜயங்கள் சர்வதேச சமூகம் தங்களைப் பாதுகாக்கும் என்று நம்புகின்ற தமிழர்களுக்கு நிச்சயம் ஒரு பின்னடைவாகவே அமைந்திருக்கின்றன. எனவே, சர்வதேச உதவியில் கூடுதல் அக்கறை காட்டுவதைவிடுத்து, உள்நாட்டுச் செயன்முறைகளில் தமிழ்க்கட்சிகள் அதிக அக்கறை காட்டவேண்டிய தருணம் இதுவாகும். ■

*(பேராசிரியர் கீதபொன்கலன் அமெரிக்காவின் மேரிலாண்ட் மாநிலத்தின் சலிஸ்பரி பல்கலைக்கழகத்தில் முரண்நிலைத் தீர்வுத் திணைக்களத்தின் தலைவராகப் பணியாற்றுகிறார்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அரசு செயற்படாத அரசு என்ற எண்ணம் பரவத்தொடங்கி விட்டது. பாராளுமன்றத்தேர்தலை நடத்தி புதிய அரசு ஒன்று நடத்தப்பட வேண்டும். உண்மையில் சொல்லப்போனால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு பாராளுமன்றத் தேர்தலும் அறிவிக்கப்பட்டிருந்தால் தற்போதைய பிரச்சினைகள் தோன்றியிராது

# ரணிலின் திட்டமும் சிறிசேனவின் குழப்பமும்



என்.சத்தியமூர்த்தி

மழை நின்றும், தூறல் நிற்கவில்லை என்ற கதையாக, ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து மாதங்கள் உருண்டோடிவிட்ட பின்னரும், அதன் அரசியல் தாக்கம் நின்றபாடில்லை. தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் சிலவே இதற்கான காரணம் எனலாம். இதன் காரணமாக, 'நல்லாட்சி தருவோம்' என்ற வாக்குறுதியுடன் அரசு கட்டில் ஏறிய நாட்டின் புதிய, 'கூட்டுத் தலைமை', இங்கு ஆட்சியும் இருக்கிறதா? என்ற கேள்வி எழும் நிலைமைக்குத் தள்ளி உள்ளதோ என்று அச்சப்படும் நிலைமையை உருவாக்கி வருகிறது.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தெரிவு செய்த வாக்காளர்கள் அந்த வாக்குறுதிகளை நம்பி அவரைப் பதவியில் அமர்த்தவில்லை. தத்தமது காரணங்களுக்காக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பதவியில் இருந்து இறக்க வேண்டும் என்ற ஒரு எண்ணமே அவர்களுக்கு இருந்தது. ஆனால், தங்களையும் குழப்பிக்கொண்டு, மக்களையும் குழப்பும் அரசியல் தலைமைகள், இல்லாத ஊருக்கு இன்னமும் வழி தேடி, இருப்பதையும் இல்லாததாகவே காட்டுகிறார்கள். அதனையே, தாங்களும் நம்புகிறார்கள்.

இன்றைய அரசு 'செயல்படாத அரசு' என்ற எண்ணம் பரவத் தொடங்கி உள்ளது. இது, நாட்டிற்கும், மக்களுக்கும் நன்மை அளிக்காது. மாறாக, உடனடியாகவே பாராளுமன்றத் தேர்தலை நடத்தி, புதிய அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு பாராளுமன்ற தேர்தலும் அறிவிக்கப்பட்டிருந்தால், தற்போதைய பிரச்சினைகள் தோன்றியிராது எனலாம்.

சிறிசேனவிற்கு வாக்களித்தவர்களில் பெரும்பாலரும் 'நிறைவேற்று ஜனாதிபதி' பதவி மாற்றப்பட வேண்டும் என்று கருதினார்கள் என்றே எண்ண வேண்டியுள்ளது. ஆனால், அந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே, அவருக்கு வாக்களித்தார்கள் என்று கருதுவது தவறான எண்ணம். சிறிசேனவின் வெற்றிக்கு அச்சாரம் அளித்த தமிழ் மற்றும் முஸ்லிம் இன வாக்காளர்கள் நிச்சயமாக 'நிறைவேற்று' ஜனாதிபதிப் பிரச்சினையை மனதில் கொண்டிருக்கவில்லை.

அது போன்றே, அவருக்கு வாக்களித்த சிங்களவர்களில் பெரும்பாலானோர். அவருக்கு ஆதரவு அளித்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள். அவர்களைப் பொறுத்தவரையில், அப்போதைய ஜனாதிபதி மகிந்தவை தேர்தலில் தோற்கடிக்க இதுவே ஒரு வாய்ப்பு. அவ்வளவு தான். அந்த வகையில், மலையகத்தில் சிறிசேன பெற்ற வாக்குகள், அங்குள்ள தலைமைகளுக்குள்ளே ஏற்பட்ட மோதல் மற்றும் அந்த மக்களின் ஆதங்கங்களின் வெளிப்பாடே.

ஆனால், 'நிறைவேற்று ஜனாதிபதி' பதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யின் பற்களைப் பிடுங்கிய பின்னரே பாராளுமன்றத் தேர்தலைச் சந்திப்போம் என்ற முடிவுடன் களமிறங் கிய சிறிசேனா ஆதரவு அரசியல் தலைமைகள், அதனை எவ்வாறு செயல்படுத்துவது என்று முதலில் இருந்தே கருதிச் செயல்படவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், ராஜபக்ஷவை ஜனநாயகத்திற்குட் பட்ட தேர்தல் முறை மூலம் பதவி இறக்க வேண்டும் என்பது மட்டுமே, 'ஒரு அம்ச' திட்டமாக இருந்தது. அவருக்கு மக்கள் வாக்களித்ததும் அதற்காக மட்டும் தான்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு மற்றொரு செயல் திட்டமும் இருந்தது என்றே கருத வேண்டும். அவர்க ளுக்கு எவ்வாறாயினும் மீண்டும் பதவியில் அமர வேண்டும் என்ற கவலை இருந்தது. இப்போது இல்லை

**தற்போதைய ஆட்சியாளர்கள் ஊழல் பிரச்சி னையை கையாளுகின்ற முறை குறித்து ஒரு கேள்வி எழுகிறது. மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசுத் தலைமையில் பங்கு வகிக்கக்கூடாது, ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் தலையெடுத்து விடக்கூடாது என்பதை உறுதி செய்யும் ஒரு தந்திரோபாயமாகவே ஊழல் குற்றச்சாட்டுக் கள் கையாளப்படுகின்றனவா?**

என்றால் எப்போதுமே தாங்கள் தேர்தலில் வெற்றி பெற்றுப்பதவியில் அமர முடியாது என்றும் அவர்கள் தாங்களாகவே முடிவு செய்து, பல வருடங்கள் ஆகி விட்டன.

அதனால் தானோ என்னவோ, ஜனாதிபதித் தேர்த லுக்கு முன்னர், முன்னெப்போதும் இல்லாத அளவிற் கு, அந்தக் கட்சிக்கே உரித்தான உட்கட்சிச் சண்டைகள் காணாமலே போய்விட்டது. அது எத்தனை நாட்கள் தாக்குப் பிடிக்கிறது என்பது, எதிர்வரும் பாராளுமன் றத் தேர்தலில் அந்தக் கட்சியின் வெற்றி-தோல்வியைப் பொறுத்ததே.

இந்தப் பின்னணியில், சிறிசேனா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் அமர்த்தப்படுவார் என்பது ஊரறிந்த இரகசியமாகவே இருந்தது. அந்த நேரத்திலும், சிறிசேனா ஜனாதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர் தலைமை யேற்கும் சுதந்திரக்கட்சிக்கே பாராளுமன்றத்தில் பெரும்பான்மை தொடரும் என்று ஏனோ யாருமே கவலைப்படவில்லை. அதற்கு அவர்கள் விரும்பவும் இல்லை.

அதன் வெளிப்பாடே தற்போதைய அரசியல் நிலைமை - நிலையற்ற அரசியல் நிலைமை.

### இன்னமும் ராஜபக்ஷ

ராஜபக்ஷவிற்கு எதிராக வாக்களிக்க தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களுக்கு, அவர்களுக்கான கார ணங்கள் இருந்தன. ஆனால், பெரும்பான்மை இனத்த வர்களான சிங்களவர்களிடையே, அவர் இன்னமும் 'போர்க்காலத்' தலைவராகவே தொடர்ந்து செயல் பட்டு வருகிறார் என்ற கருத்து நிலவியது.

அவர் அத்தகைய நிலைப்பாட்டைத் தொடர்ந்து எடுக்க வேண்டும் என்று கருதியவர்கள் அவருக்கு வாக்களித்தார்கள். ஏதாவது காரணத்திற்காக அவ்வாறு கருதாதவர்கள், சிறிசேனாவை தெரிவு செய்தார்கள். இந்தப் பின்னணியில், ராஜபக்ஷவிற்கு எதிராகச் செயல்பட்ட சிங்கள அரசியல் தலைமைகள், இப் போதும் அவரே தொடர்ந்து ஆட்சியில் இருந்து வரு வது போல் எண்ணிச் செயல்பட்டு வருகிறார்கள்.

அரசு தலைமையின் இந்தப் போக்கினால் மட்டுமே, மீண்டும், மீண்டும், ராஜபக்ஷ தொடர்ந்து, தேசிய அர சியல் எண்ணவோட்டத்தில் முக்கிய கதாபாத்திரமா கத் தொடர்ந்து வருகிறார். அவருக்கு எதிரான அரசிய லில், ஜனாதிபதி சிறிசேனா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமைப்பீடத்தில் இருக்கி றார்கள். போதாதற்கு, மற்றொரு முன்னாள் ஜனாதிபதி யான சந்திரிகா குமாரதுங்கவும் அவர்கள் இருவ ருக்கும் பின்பலமாக இருந்து வருகிறார்.

ஆனால், நடந்தது என்ன?

தேர்தல் முடிந்த கடந்த ஐந்து மாதங்களில், மீண்டும் சந்திரிகா அரசியலில் இருந்து காணாமல் போய்விட் டார். இதற்கு முந்தைய காலகட்டத்தில் இத்தகைய நிலைமை உருவாவதற்கு, அவரது ஆதரவாளர்கள் ராஜபக்ஷ அரசையும் அரசியல் தலைமையையும் குறை கூறினார்கள். ஆனால், அவர் ஆதரவு பெற்ற அரசியல் தலைமைகள் பதவியில் இருந்தும், அவ ருக்கு மட்டும் அரசியல் எதிர்காலம் இல்லை என்று சொல்லும் நிலைமை மீண்டும் ஏற்பட்டுள்ளது என்று கருதவே இடமிருக்கிறது.

சிறிசேனா-ரணில் 'இரட்டைத் தலைமை'யை பொறு த்தவரையில், அவர்களால் ராஜபக்ஷவை எதிர்த்து எவ்வாறு முன்செல்வது என்பதில் குழப்பமும் கோப மும் மட்டுமே மிஞ்சி உள்ளது. முந்தைய அரசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களுக்கு எதிரான ஊழல் புகார்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பது ஒரு விடயம். ஆனால், 'மூன்றாம் உலக' ஜனநாயக நாடுகளில் எல்லாம், இது ஒரு எழுதப்படாத நியதியாகவே மாறிவிட் டது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. அவ்வளவு தான்.

அல்லது, இத்தகைய எண்ணவோட்டத்திலேயே தற்போதைய ஆட்சியாளர்களும் ஊழல் பிரச்சினையை கையாளுகிறார்களோ என்ற கேள்வி எழுகிறது. அவர்களைப் பொறுத்தவரையில், ஊழல் குற்றச்சாட்டுகள் எல்லாம், மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசு தலைமையில் பங்கு வகிக்கக் கூடாது, ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் அரசியலில் தலையெடுத்து விடக்கூடாது என்ற அளவிற்கே இருக்கிறது. இதற்கு, அவர்களுக்கு எதிரான ஊழல் புகார்கள் உதவுமென்றால், உதவட்டும். இதுவே அவர்களது நிலைப்பாடு என்ற நிலைமையிலேயே அவர்களது செயல்பாடுகள் உள்ளன.

## செல்லாக் காசுகள்?

இன்னமும் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் அரசியல் மேடைகளில் முக்கியமாக இருப்பதற்கு மற்றொரு காரணம் உண்டு. அவர் பதவியில் இருந்த பத்து ஆண்டு காலமும், தனது கட்சியிலும், அந்தக் கட்சி தலைமை ஏற்றிருக்கும் கூட்டணியி லும் வேறு யாரும் தனியான அரசியல் செல்வாக்குப் பெற்றுவிடக்கூடாது என்று கருதி அவர் செயல்பட்டார்.

இதன் காரணமாக, இன்று அந்தக் கூட்டணியில் உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், தாங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, 'ராஜபக்ஷ வாக்குவங்கி'- தேவையாக உள்ளது. அவர்களில் பலரும் அரசியல் பிரபலங்களாக இருந்தாலும், தேர்தல் அரசியலில் இன்னமும் 'செல்லாக் காசுகள்' தான்.

அவர்களுக்குத் தேவை, ராஜபக்ஷவின் 'வாக்குகள்'. ஆனால், அதற்குத் தேவை, சிறிசேன தலைமையிலான கூட்டணி, அவர்களைக் கூட்டணி வேட்பாளர்களாகத் தெரிவு செய்வது,கூட்டணி வெற்றி பெற்றால், அமைச்சர் மற்றும் பிற பதவிகளைப் பெறுவதற்கும் அவர்களுக்கு ஜனாதிபதி சிறிசேனாவின் நம்பிக்கை தேவை. அப்போது மட்டுமே, சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் கூட்டணியின் மீதான ராஜபக்ஷவின் பிடி தளர முடியும்.

**ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் சந்திரிகா அம்மையாரின் உதவியுடன் சுதந்திரக்கட்சியின் தலைமையை மாத்திரமல்ல வாக்கு வங்கியையும் பிடித்துவிடலாம் என்று சிறிசேன கணக்கு போட்டிருக்க வேண்டும். கட்சியின் தலைமை கிட்டிய போதிலும் ராஜபக்ஷ வாக்கு வங்கி சிறிசேனவின் குடையின் கீழ் வந்து விடவில்லை**


இதனை உணர்ந்தே, அவரது தீவிர ஆதரவாளர்கள் ராஜபக்ஷ பிரதமராக வேண்டும் என்று முதல் நாள் தொடக்கம் கூறத் தொடங்கிவிட்டனர். அந்த வகையில், ஐக்கிய தேசியக் கட்சிகளின் அரசியல் புலிகளை விட, ராஜபக்ஷ ஆதரவுத் தலைவர்கள் தேர்தல் கணக்குகளில் அதிக அறிவு படைத்தவர்களாகவே தங்களை முன்னிறுத்தி உள்ளனர் என்பதே உண்மை.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்த ராஜபக்ஷ பெற்ற 48 சதவீத வாக்குகள் அவருடைய தற்கால அரசியல் முதலீடு எனலாம். தேர்தலுக்கு முன், அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று கருதிச் செயல்பட்டவர்களில் எவருமே, அவர் எத்தனை வாக்குகள் பெறுவார் என்று எண்ணிப் பார்க்கவில்லை. இதில், சிறிசேனவும், ரணிலும் முதன்மையில் இருந்தனர்.

ராஜபக்ஷ பெற்ற வாக்குகளில் பெரும்பான்மையானவை, சிங்களப் பகுதிகளில் இருந்து பெறப்பட்டன. ஆனால், சிறிசேன, தமிழர் மற்றும் முஸ்லிம் இனத்தவரிடையே அதீத வாக்குகள் பெற்றார். மக்களவைத் தேர்தல் முறையை முன்வைத்துப் பார்க்கும் போது, ஜனாதிபதித் தேர்தலின் வெற்றிக் கூட்டணி தொடர்ந்தாலும், அது வெற்றி பெறும் என்று கூறி விடமுடியாது.

## 'தேசிய அரசு', யாருக்கு?

ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனாவிற்கு ஆதரவு அளித்த போதே, ஐக்கிய தேசியக் கட்சி, பின்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அவரது தலைமையிலாகும் சுதந்திரக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுவதாகக்



கூறிவிட்டது. இந்தப் பின்னணியில் ஒரு 'தேசிய அரசு' அமைத்துள்ளதாக அவர்கள் கூறியது ஏற்க முடியாததாகி விட்டது. பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரும் இது போன்ற 'தேசிய அரசு' தொடரும் என்று அவர்கள் கூறி வருவது நகைப்பிற்கு இடமாகிவிட்டது.

பிரதமர் ரணில் தலைமையிலான தற்போதைய அரசில், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்களும் பின்னர் பங்குபெற்றனர். அவர்களில் பலரும் செல்லாக் காசுகளே. அதற்கு அப்பாலும் சென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


று, இன்று 'அரசு' என்று அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் கூறுவது, ஐக்கிய தேசியக் கட்சியை மட்டும் மனதில் நிறுத்தியே.

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தவரையில், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், ராஜபக்ஷ செல்லாக் காசு ஆகிவிடுவார் என்று கருதி இருப்பார்கள். ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே அவரை முடக்கி விடலாம் என்றும் அவர்கள் கருதினார்களோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. அது ஒரு வகையில் உண்மையாகவே இருந்தாலும், அவருக்கு வாக்களித்தவர்கள் யாருடைய மனதிலும், 'ஊழல்ப்பிரச்சினை' முக்கிய தேர்தல்ப் பிரச்சினையாக இருக்கவில்லை.

இந்தப் பின்னணியில், தேசிய அளவில் பலம் பொருந்திய தலைவர் என்று அறியப்படாத ஜனாதிபதி சிறிசேன தலைமை ஏற்கும் சுதந்திரக் கட்சி கூட்டணியைத் தங்களது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரலாம் என்று கருதியே ஐக்கிய தேசியக் கட்சி தலைமை செயல்பட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது. அவர்கள் கண் முன்னர் இருந்தது இரு வேறு கணக்குகளே.

ஒன்று, ராஜபக்ஷ காரணமாக சுதந்திரக் கட்சி கூட்டணி உடைந்தால், அதன் காரணமாக சிங்களவர் பகுதிகளில் பாராளுமன்றத் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்படும். அதில் ஐக்கிய தேசிய கட்சி முதலிடத்தில் வந்து விடலாம். அந்தக் கட்சிக்கு, முழுப் பெரும்பான்மை கிடைத்தால் சரி. இல்லை என்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட சமுதாய கட்சிகள், மற்றும் மலையக தமிழர் கட்சிகள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு கூட்டணி அமைப்பது. இத்துடன், வேண்டுமென்றால், ஜே.வி.பி-யையும் துணை சேர்த்துக்கொள்ளத் தங்களாலான முயற்சிகளைச் செய்வது. அத்துடன், சுதந்திரக் கட்சிக் கூட்டணி மற்றும் ராஜபக்ஷ ஆதரவு அணியினரை உடைத்து, அதனை 'தேசிய அரசு' என்று பிரகடனப்படுத்திக் கொள்வது என்பதே அவர்களது திட்டமாக இருந்திருக்க முடியும். இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி போன்ற கட்சிகள், தும்பை விட்டு, வால் பிடிக்கும் என்பதும் அவர்கள் அறியாதது அல்ல.

**பிரதமர் ரணில் தற்போதைய அரசில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாக இருந்தாலும் அவர்கள் செல்லாக் காசுகளே. அரசு என்று அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் இன்று கூறுவது ஐக்கிய தேசியக்கட்சியை மட்டும் மனதில் நிறுத்தியே. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ராஜபக்ஷ செல்லாக்காசாகி விடுவார் என்ற ஐ.தே.க.வின் நினைப்பு சரிப்பட்டு வரவில்லை.**



## காலத்தின் கட்டாயம்

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தத் திட்டம் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் இருக்கும் சிறிசேன எதிர்பார்த்திருக்காத விடயம் அல்ல. அவரைப் பொறுத்தவரையில், ஜனாதிபதியாகப் பதவியேற்று விட்டால், சந்திரிகா அம்மையாரின் உதவி மற்றும் ஆதரவுடன், சுதந்திரக் கட்சியின் தலைமையை மட்டுமல்ல, வாக்குவங்கியையும் பிடித்துவிடலாம் என்றே கணக்குப் போட்டிருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு, கட்சி மற்றும் கூட்டணித் தலைமை அவரிடம் வந்து சேர்ந்தது காலத்தின் கட்டாயம். அது போன்றே, ராஜபக்ஷ வாக்குவங்கி தன் குடையின்கீழ் வந்துவிடவில்லை என்ற உள்ளுணர்வும் கூட, காலத்தின் கட்டாயமே. அதேசமயம், தனது 'பதவி ஆசை' ஒன்றின் காரணமாகவே, கடந்த இருபது ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து வரும் சுதந்திரக் கட்சிக் கூட்டணியை, ஐக்கிய தேசியக் கட்சியினருக்குக் 'காட்டிக் கொடுத்து' அரசியல் செய்தவர் என்ற அவப்பெயரையும் சம்பாதித்துக் கொள்ள அவர் தயாரில்லை.

ரணில் தலைமையிலான 'அரசு', ராஜபக்ஷ குடும்பத்தினரை, ஊழல் புகார்களில் குடைந்தெடுப்பதை, தார்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் கூட ஜனாதிபதி சிறிசேன எதிர்க்க விரும்பமாட்டார் என்பது அரசியல் பாலபாடம். ஆனால், அதே ராஜபக்ஷவின் வாக்கு வங்கி இல்லாமல், தனது கட்சியும் கூட்டமைப்பும் இல்லாமல் போய்விடும் என்பதையும் அவர் தற்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்துள்ளார். அரசியல் ஆகட்டும், ஆட்சியில் ஆகட்டும், ஜனாதிபதி சிறிசேன, இரு தலைக்கொள்ளி எறும்பாகவே இருந்து வருகிறார். ஆனால், ரணில் மற்றும் ராஜபக்ஷவில் இருவரில் ஒருவர், யார் பிரதமராக வந்தாலும், தான் 'நிறைவேற்று ஜனாதிபதி' என்ற நிலையில் இருந்து மாறி, 'நிலையற்ற ஜனாதிபதியாக' மாறிவிடுவோமோ என்ற கவலை அவருக்கு இருக்கும்.

## அமைச்சரவைக்கு அதிகாரம்

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், ரணில், ராஜபக்ஷ அல்லது பிறிதொருவர் பிரதமர் பதவிக்கு வரலாம். அவர்களில் யாராக இருந்தாலும், சிறிசேனவின் ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளை அவருக்கே படித்துக் காட்டி, புதிய அரசியல் சட்டத்தை இரண்டு ஆண்டுகளில் எழுதி முடித்து செயல்படுத்துவதில் தீவிரம் காட்டுவார்கள்.

அவர்கள் அனைவரையும் பொறுத்தவரையில், 'நிறைவேற்று ஜனாதிபதி'ப் பதவியில் தற்போது உறைந்திருக்கும் அரசியல் அதிகாரத்தை, பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கு மாற்றுவது முக்கியமானதாகும். இந்த மாற்றம், மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தியே முடிவு செய்யப்பட வேண்டிய விடயம் என்று உச்ச நீதிமன்றம் அண்மையில் அறிவுறுத்தி உள்ளது.

தற்போதைய பிரதமர் ரணில், கடந்த 2001-04 கால கட்டத்தில், சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் பதவியில் இருந்தவர். பல் இல்லாத பாம்பாகச் செயல்பட்டவர். அவருக்குப் பின்னர், அதே ஜனாதிபதியின் கீழ், அவருடைய கட்சியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷவும் பிரதமராக இருந்து, 'அனுபவித்தவர்'. அவர்கள் இருவருமே, தாங்கள் பிரதமராக இருந்தால், அரசுக்குண்டான அதிகாரங்கள் தங்கள் பதவியிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று நினைத்துச் செயல்படுபவர்கள்.

இவர்கள் தவிர யாராவது பிரதமரானாலும், அவரும் கூட ஒரு கட்டத்திற்குப் பின்னர், தனக்குள்ளேயும் புதைந்து கிடந்த பதவி ஆசையை உணர்ந்து கொள்வார். அதன்படியே செயல்படவும் முனைவார். அதிலும் குறிப்பாக, ஜனாதிபதி சிறிசேனவின் தேர்தல் கால வாக்குறுதியை முன்னிறுத்தி, புதிய அரசியல் சட்டம் இயற்ற வேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் இருக்கும் போது, அதனைப் பயன்படுத்திக்கொள்ள இவர்களில் யாருமே தயக்கம் காட்டமாட்டார்கள்.

இவை அனைத்திலும், நாடு நோக்கவிருக்கும் பிரச்சினை இவை தான். ஒன்று, புதிய அரசியல் சட்டத்தின் பெயரில், பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரும், தேசிய அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லாமல் போய் விடும் வாய்ப்பு நிறையவே உள்ளது. ஆட்சியைப் பற்றி அப்போதைய ஆட்சியாளர்களும், அரசியல் தலைமைகளும் கவலைப்படுவதை விட்டுவிடுவார்கள். மாறாக, அவர்கள் தங்களது முழு நேரத்தையும், அரசியல் சட்ட மாற்றம் குறித்த விவாதங்களில் செலவிடுவார்கள். தற்போது, நிகழ்வதும் இது தான். என்னவென்றாலும், பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், புதிய அரசியல் சட்டம் புனையப்பட வேண்டும் என்று தெரிந்தும், அவர்கள் தங்களது முழு நேரத்தையும், பத்தொன்பது மற்றும் இருபதாம் சட்டத் திருத்தங்கள் குறித்த விவாதங்களிலேயே செலவிட்டு வருகிறார்கள்.

இவற்றின் பெயரால், தங்களில் தற்போது தேசிய அரசியலில் யார் பெரியவர்? என்ற பேசப்படாத போட்டியிலும் அவர்கள் இறங்கி உள்ளார்கள். பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரும் இந்த நிலைமையே தொடருமானால், மக்களின் நிலைமை பரிதாபகரமாகி விடும். காரணம், ஜனாதிபதி ஜயவர்தன காலம் போலவே, தற்போதும் பதவிக்காக தலைவர் என்பதை விடுத்து, தலைவருக்காக பதவி என்ற சித்தாந்தத்திலேயே அரசியல் சட்டத் திருத்த மாற்றங்கள் சிந்தித்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## நிகழ்கால நினைவலைகள்

இவை எதிர்காலம் குறித்த கவலைகள். நிகழ்காலத்தில் நினைவலைகளும், நிலைப்பாடுகளும் எதிர்பார்ப்பது என்ன? ஒன்று, ராஜபக்ஷவின் 48 சதவீத வாக்கு வங்கி, அவர் நினைத்தாலும், அவர் சுட்டிக்காட்டி ஆதரவு அளிக்கும் பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களுக்கு போய்ச்சேருமா? அதிலும் குறிப்பாக, சுதந்திரக் கட்சிக் கூட்டணி, அவரை பிரதமர் வேட்பாளராக அறிவித்தால், நிலைமை என்ன? இல்லை என்றால் முடிவு என்ன?

அண்மையில், குருநாகலில் நடந்த ராஜபக்ஷ் ஆதரவாளர்கள் கூட்டத்திலும் பெருந் திரளான மக்கள் கூடினார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக, மே தினக் கொண்டாட்டங்களுக்காக ஜனாதிபதி பங்குபற்றிய சுதந்திரக்கட்சிப் பொதுக் கூட்டத்தில் பெரும் திரளாக மக்கள் பங்கு பெறவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. மாறாக, பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசியக்கட்சியின் மே தின பொதுக் கூட்டமே பெரிய அளவில் பேசப்பட்டது.

இந்தப் பின்னணியில், ரணில் 'அரசு', ராஜபக்ஷ குடும்பத்தினரை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தத் துடிப்பதும், ஜனாதிபதி சிறிசேனா ராஜபக்ஷவுடன் மீண்டும் இணைவது குறித்து குழப்பம் அடைவதும் அரசியலில் மிக இயற்கையான விடயமே. ஆனால், 'அரசின்' அவசரம், அவர்களின் அரசியல் ஆத்திரமாக மக்களைச் சென்றடைந்து விட்டால், அதன் தேர்தல் கால வெளிப்பாடே வேறுவிதமாக அமைந்துவிடும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதி படைத்தோருக்கு




சட்டத்துக்குக் கீழ்ப்படிகின்ற ஒரு பிரஜை என்ற வகையில், எனக்கு இழைக்கப்படுகின்ற தவறை நீதிமன் றம் சீர்செய்ய வேண்டுமென்பதில் நான் நம்பிக்கை கொண்டவன். அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட வேளையைத் தவிர மற்றும்படி நான் ஒரு போதும் ஏமாற்றப்படவில்லை. எந்தக் காரண காரியமுமின்றி நான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டேன்.

எனது மனைவி தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு ஏற்றுக் கொண்டது. நான் விடுவிக்கப்பட்டேன். நான் எந்தவொரு அரசியல் கட்சியையும் சாராதவன். எனது பத்திரிகைத் தொழிலைப் பண்பான முறையில் செய்கின்றவன் என்பதனால் என்னைத் தடுத்து வைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்பதனாலேயே விடுதலை செய்யப்பட்டேன். ஆனால், என்னை விடுதலை செய்து உத்தரவிட்ட அந்த இரு நீதிபதிகளும் தண்டிக்கப்பட்டார்கள். சிரேஷ்ட நீதிபதி எஸ்.ரங்கராஜன் சிக்கிமுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டார். நீதிபதி ஆர்.என்.அகர்வால் பழையபடி செசன்ஸ் நீதிமன்றத்துக்கே திருப்பியனுப்பப்பட்டார். பத்திரிகைச் சுதந்திரத்தின் பலிபீடத்தில் அவ்விரு நீதிபதிகளும் நிவேதனம் செய்யப்பட்டார்கள்.

நீதியின் வழியில் குறுக்கே நெருக்குதலோ, செல்வாக்கோ, பணமோ வந்ததாக நான் ஒரு போதும் சந்தேகப்பட்டதில்லை. ஆனால், அண்மையில் வழங்கப்பட்ட இரு தீர்ப்புக்கள் நீதிமன்றங்கள் மீது நான் வைத்திருந்த நம்பிக்கையை அசைத்துவிட்டன. முதலாவது வழக்கில் ஒரு நிமிடத்தைக் கூட சிறையில் கழிக்காமல் நடிகர் சல்மான்கான் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இரண்டாவது வழக்கில் கடந்த செப்டெம்பரில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவியிலிருந்து இறங்க வேண்டியேற்பட்ட ஜெயலலிதா வருமானத்துக்கும் கூடுதலாக சொத்தைச் சேர்த்து வைத்திருந்த குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

அவர்கள் இருவரதும் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் சிறப்பாக வாதாடியிருக்கக் கூடும். சல்மான்கானும் ஜெயலலிதாவும் இந்தியாவின் சிறந்த சட்டவல்லுநர்களைத் தங்கள் சார்பில் அமர்த்தக்கூடிய வல்லமையைக் கொண்டவர்கள். ஆனால், வழக்குத் தொடுநர் தரப்பு எவ்வளவுதான் பலவீனமானதாக இருந்தாலும் அவர்கள் இருவரினதும் வழக்குகளை விசாரித்த நீதிபதிகளும்கூட நீதி வழங்கப்படுவதை உறுதி செய்திருக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறு நடக்கவில்லை என்பது எனக்குக் கவலை தருகிறது. நீதிபதிகளை விடவும் வழக்கறிஞர்கள் சிறப்பானவர்கள் என்பதனால் அல்ல, வேறு நோக்கங்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதனாலேயே இந்த நிலையேற்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் விசேட விசாரணைக்குழு (SIT) வொன்றினால் விசாரிக்கப்படத் தகுதியுடைய வழக்குகள் இவை. இவ்விரு வழக்குகளிலும் வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், வேறு ஏதும் செய்யப்படாவிட்டால் அது நீதியை கேலிக்குள்ளாக்குவதற்கு ஒப்பான தாகும்.



குல்திப் நாயர்

சல்மான்கானின் வழக்கை முதலில் பார்ப்



யோட்டிச் சென்று மோதியதில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் நிலையையும் நீதிபதி கருத்திலெடுத்திருக்க வேண்டும்.

சல்மான்கான் வைப்புச் செய்திருக்கின்ற 19 இலட்சம் ரூபாவுக்கும் கூடுதலான நஷ்டஈடு (பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு) வழங்கப்பட வேண்டுமென்று கூட நீதிபதி சிபாரிசு செய்யவில்லை. இந்த வழக்கு விசாரணை நீடித்த 13 வருட கால இடைவெளியில் அந்த 19 இலட்சம் ரூபா நஷ்ட ஈட்டை நீதிமன்றத்தினால் பகிர்ந்தளிக்கவும் முடியவில்லை.

வழக்கை சாத்தியமானளவு காலத்துக்கு இழுத்தடிப்பதற்கு சல்மான்கானின் செல்வாக்கும் பணபலமும் உதவியிருக்கிறது. பொலிஸாரும் இதில் மனமுவந்து பங்காளிகளாகியிருக்கிறார்கள். பாராளுமன்றம் இதைக் கவனத்திலெடுத்துச் சட்டத்துறை இயந்திரம் இந்தளவு மெதுவாக நகரா திருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதில் எந்த அரசியலும் இல்லை. பணம் மாத்திரமே முக்கியமானதாக இருக்கிறது. வசதி படைத்தவர்கள் ஒரு குற்றச்செயலைச் செய்துவிட்டு எளிதாகத் தப்பிச் செல்வதைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிமுறைகளை நிச்சயமாக வகுக்கமுடியும். தங்கள் கட்சியின் ஆணைப்படியில்லாமல் எம்.பி.க்கள் தங்கள் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வார்களேயானால், இதைச் செய்ய முடியும்.

ஒரேயொரு விதிவிலக்கான வழக்கு எனக்கு நினைவுக்கு வருகிறது. தொழிலதிபரான சுரேஷ் நந்தாவின் மகன் சஞ்சீவ் நந்தா 1999 ஆம் ஆண்டு டில்லிக்கு அண்மையாக இரவு விருந்தொன்றில் கலந்து கொண்டு விட்டுக் காரை ஓட்டிச் சென்று பொலிஸ்காரர்கள் உட்பட 6 பேரை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பான வழக்கே அது. இந்த வழக்கு விசாரணையும் அநாவசியமான தாமதங்களினால் பல ஆண்டுகள் நீடித்தது. இறுதியில் சஞ்சீவ் குற்றவாளியாகக் காணப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டார். சுரேஷ் நந்தா முன்னர் இந்தியக் கடற்படையில் ஒரு சிரேஷ்ட அதிகாரியாக பணியாற்றியவர் என்ற போதிலும் மகனைக் காப்பாற்ற முடியவில்லை.

மறுபுறத்திலே சல்மான்கானின் தண்டனை இடைநிறுத்தப்பட்டிருக்கிறது என்று வாதத்துக்கு எடுத்துக்

# வசதியான நீதித்துறை

போம். அவர் மதுபோதையில் காரை ஓட்டிச் சென்று வீதியோரம் நடைபாதையில் நித்திரை செய்து கொண்டிருந்த நபரொருவரைக் கொன்றிருக்கிறார் என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்திருந்தது ஐந்து வருடச் சிறை தண்டனையும் அறிவிக்கப்பட்டது. ஏனென்றால் சட்டத்தின் கீழ் நீதிபதியினால் வழங்கப்படக்கூடிய குறைந்தபட்சத் தண்டனை அதுவேயாகும். ஆனால், பம்பாய் மேல் நீதிமன்றத்தில் முறைப்படியான பிணைப் பரிசீலனைக்காக வழக்கு எடுக்கப்படும் முன்னதாகவே நடிகர் இடைக்காலப் பிணை அனுமதியைப் பெற்று விட்டார்.

அங்கு சல்மான்கானின் மேன்முறையீடு விசாரணை முடியும் வரை தண்டனையை நீதிபதி இடைநிறுத்தம் செய்திருக்கிறார். உண்மைதான், இவ்வாறு செய்வதற்கான தற்துணிவு அதிகாரம் நீதிபதிக்கு இருக்கிறது. ஆனால், இதுவே சாதாரண பிரஜை ஒருவரின் வழக்காக இருந்திருந்தால் அந்த நீதிபதி இவ்வாறு செய்திருப்பாரா? குற்றவாளியின் அதி முக்கிய பிரமுகர் அந்தஸ்துதான் குற்றச் செயலை இளக்காரமானதாக நோக்குவதற்கான பிரதான பிரமாணமாக இருந்திருக்கிறது போலத் தோன்றுகிறது. சல்மான்கான் காரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியுமென்றாலும் அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தியே சிறைக்குச் செல்வதிலிருந்து தப்பியிருக்கிறார். இன்னொரு நடிகரான சஞ்சய்தத்தின் வழக்கில் அவர் பல தடவைகள் சிறையிலிருந்து நன்னடத்தைப் பிணையில் வெளியில் வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சொத்துக்குவிப்பு வழக்கில் அளிக்கப்பட்ட தண்டனையில் இருந்து ஜெயலலிதா கர்நாடக மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட விடயத்துக்கு வருவோம். இதுவும் கூட வியப்பைத் தருகிறது. ஜெயலலிதா புரளுகின்ற ஆடம்பரம் ஒன்றும் கற்பனையானது அல்ல. அவருக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் கண்ணால் காணக்கூடியவற்றிலிருந்து இதை எவரினாலும் மதிப்பிட்டுக் கொள்ள முடியும். சந்தேகத்தின் பலாபலனை ஒரு குற்றவாளிக்குக் கொடுப்பதற்கு நீதிபதி தகுதியுடையவர்.

ஆனால், யதார்த்தத்துக்கு முன்னால் அவர் தனது கண்களை மூடுவதென்பது சலுகை காட்டுவதற்குச் சமனானதாகும். ஏன் இந்தச் சலுகை? கேள்வியை நேரடியாகவே கேட்கிறேன்.

ஜெயலலிதாவின் மொத்த வருமானம் 34.76 கோடி ரூபா என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தவறுதலாக கூட்டப்பட்ட 13.50 கோடி ரூபாவைக் கழித்தால் அவரது வருமானம் 21.26 கோடி ரூபாவாகும். ஆனால், நீதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 37.59 கோடியாகும். இதற்குப் பிறகும் கூட, சொத்துக்களுக்கும் உண்மையான வருமானத்துக்கும் இடையே 16.32 கோடி ரூபா வித்தியாசம் இருக்கிறது.

ஆனால், வித்தியாசம் 2.82 கோடி ரூபா மாத்திரமே (வருமானத்துக்கு மிஞ்சிய சொத்து 8.12 சதவீதமே) என்று நீதிபதி கூறியிருக்கிறார். ஆனால், வருமானத்துக்குப் பொருந்தாத சொத்தாக இருக்கும் 16.32கோடி வருமானத்தைவிட 76 சதவீதம் அதிகமாக இருப்பதாக விசேட அரசு தரப்பு வழக்கறிஞர் தெரிவித்திருகிறார். உண்மையில் எங்கோ ஒரு இடத்தில் கணக்கில் பிழை ஏற்பட்டிருக்கிறது. இது சரி செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

எது எவ்வாறிருந்தாலும், நீதி முறைமை வசதிபடைத்தவர்களுக்குச் சார்பாக சாய்கிறது என்ற உண்மையை எவரும் மறுதலிக்க முடியாது. இந்திய அரசியலமைப்பில் சர்வஜன வாக்கெடுப்புக்கான எந்த ஏற்பாடுமேயில்லை. அத்துடன் பாராளுமன்றம் தலையீடு செய்வதற்கு முன்வரப்போவதில்லை.

ஏனென்றால் பிரதான அரசியல் கட்சிகளான காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் தீவிரமான மாற்றங்களுக்கு ஒருபோதும் இணங்கப்போவதில்லை. அவர்களது உண்மையான தளம் எந்தவொரு அடிப்படை மாற்றத்துக்கும் சாதகமான மனச்சாய்வைக் காட்டாத மத்திய தர வர்க்கத்தினரேயாவர்.

சல்மான்கானின் வழக்கிலும் ஜெயலலிதாவின் வழக்கிலும் வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்புக்கள் நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன. நரேந்திரமோடி அரசாங்கத்தின் 5 வருடப் பதவிக்காலம் நிறைவடைவதற்கு இன்னமும் நான்கு வருடங்கள் இருக்கின்றன. புதிய தேர்தல்களுக்கு நாடு காத்திருக்க வேண்டியிருக்கிறது. அந்தத் தேர்தல்கள் முற்றிலும் வேறுபட்ட பிரச்சினைகளை மையமாகக்கொண்ட போட்டிகளாகவே அமையக்கூடும். என்றாலும்கூட, கீழ்மட்ட மக்கள் தங்களுக்குரித்தான பரிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். ■

---

*(24ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

நிறைவேற்றுவதிலும் முன்னணியில் நின்று தனது அறிவையும் திறன்களையும் வழங்கினார். ஜனாதிபதி இறுதி முடிவு எடுப்பதிலும் உதவினார். 19வது திருத்தத்தைக்கொண்டு வந்தமைக்காக முன்கூட்டியே பாராட்டைத் தெரிவிக்கும் வகையில் 38ஆவது செல்வநாயகம் ஞாபகார்த்தச் சொற்பொழிவுக்கு எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மகளான சந்திரிகாவை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அழைத்திருந்தது. தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப் பும் பணிக்கு உதவக்கூடிய நல்லதொரு அனுபவமாக இது அமைந்தது.

இவ்வருட மே தின உரையில் ஜனாதிபதி சிறிசேன சிறந்த எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதாயின் நாட்டின் எல்லாச் சமூகத்தினரிடையிலும் ஐக்கியத்தை வளர்ப்பதே ஒரே ஒரு வழியாகும் என்று குறிப்பிட்டார். 19ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து மூன்று நாள் கழித்துச் சிறிசேன இவ்வாறு பேசினார். அவர் கூறிய இக்கருத்தில் புதுமை எதுவும் இல்லையென்று தோன்றலாம். ஆனால் மே தினத்தின் போது அவர் இக்கருத்தை அழுத்திக்கூறியது முக்கியமானது.

1984 இல் (83 ஜூலை இனக்கலவரத்தின் பின்) மே தினம் நடைபெற்ற போது நியுடன் குணசிங்க இடதுசாரிகளின் மே தின பேச்சுக்களைப் பின்வருமாறு விமர்சித்தார். 'ஜூலை படுகொலைகளின் பின்னர், இனத்துவ பிரச்சினைகளை மூடிமறைத்துவிட்டு பொருளாதாரம் வர்க்கம் என்ற இலகுவான சுலோகங்களைக் கூச்சலிடுகிறார்கள்' என்று நியுடன் அப்போது கண்டனம் செய்தார்.

மைத்திரிபால சிறிசேனவும் 19வது திருத்தத்தின் பின்னர் இனப்பிரச்சினையை மூடிமறைத்துவிட்டு இலகுவான அரசியல் சுலோகங்களைத் தெரிந்து எடுத்துக் கொள்ளவில்லை என்பதையே அவரது மே தின உரை எடுத்துக்காட்டியது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19வது திருத்தம் கிராமிய சிங்கள வாக்காளர்களை இன்றைய அரசின் பக்கம் கவர்ந்திழுக்கப் போவதில்லை. அடுத்த தேர்தலில் இதைக் காரணமாகக் கொண்டு அவ்வாக்காளர்கள் ஐ.தே.கட்சிக்கும் சிறிசேன பிரிவு சுதந்திரக்கட்சிக்கும் வாக்களிக்கப் போவதில்லை. இவ்விரு தரப்பினரும் கிராமிய அரசியலின் உண்மை நிலை புரிந்து செயற்படவில்லை.**

# 19வது திருத்தத்தால் மக்கள் பெற்ற நன்மைகள் யாவை?



குசல் பெரேரா

உள்நாட்டு அரசியல்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்றும், சுதந்திர ஆணைக்குழுக்களை நிறுவுவோம் என்றும் உறுதி பூண்டவர்களாய் கொழும்பு நகர்ப்புறத்து மத்தியவர்க்கத்தினர் ஒரு வருடத்திற்கும் மேலாக கூடி விவாதித்தார்கள். இறுதியில் கடும் சச்சரவுகளுக்கு மத்தியில் அரசியல் கட்சித் தலைமைகளின் திருகுதாளங்களோடு 19ஆவது திருத்தம் நிறைவேறி விட்டது. முடிவாக நமக்கு கிடைத்தது என்ன? நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கமுடியவில்லை. ஜனநாயகத்திற்கு ஒரு களங்கம் போல் அமைந்துள்ள ஜனாதிபதியின் சிறப்புரிமைகளை நீக்க முடியவில்லை. நிர்வாக அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு மாற்றுவதும் நிறைவேறவில்லை. சுதந்திர ஆணைக்குழுக்களை அமைப்பதற்குப் பதிலாக அரசியல் யாப்புச் சபை என்பதனை திரிபுபடுத்தி அதனை பாராளுமன்றத்தின் உபகுழு என்ற நிலைக்கு மாற்றும் செயலே நிறைவேறியுள்ளது.

19ஆவது திருத்தம் நகர்ப்புற மக்களின் அபிலாஷைகளை எவ்வகையிலும் பூர்த்திசெய்யவில்லை.ராஜபக்ஷவைத் தோற்கடித்து சிறிசேனவைப் பதவியில் அமர்த்திய 6.2 மில்லியன் மக்களின் விருப்பங்கள் 19ஆவது திருத்தம் என்பதாக மட்டும் குறுக்கப்படக் கூடியனவல்ல. நல்லாட்சி அல்லது நல்லாளுகை என்ற பிரசாரம் மத்திய வகுப்பினரால் கொண்டுவரப்பட்ட ஒரு கிளர்ச்சியேயாகும். இந்தியாவில் நடப்பது போல் இங்கும் நவதாராளப் பொருளாதாரக் கொள்கைகள் மத்திய தர வகுப்பினர்களின் பொருளாதார நன்மைகளை அதிகரித்துள்ளன. பொருளாதார நன்மைகளைப் பெற்ற இந்த வகுப்பு அரசியலிலும் தன் அதிகாரத்தைக்காட்ட விரும்புகிறது. இந்த வகுப்பினரின் கருத்துக்கள் கொழும்பை மையமாகக் கொண்ட ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. நல்லாட்சி வேண்டும் என்ற கோரிக்கையோடு சிறிசேனவிற்கு ஆதரவு கொடுக்க முன்வந்தனர் இந்த நகர்ப்புற வர்க்கத்தினர். சிறிசேனவிற்கு இவர்களிடம் இருந்து கிடைத்த ஆதரவு ராஜபக்ஷவின் தோல்விக்கு ஒரு காரணமாகும். ஆயின் இதைவிட வேறுபல காரணங்களும் ராஜபக்ஷவின் தோல்வியை உறுதி செய்தன. ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் ராஜபக்ஷவிற்கு எதிராகவே வாக்களித்தனர். கடந்த சில வருடங்களாக ராஜபக்ஷ ஆட்சியில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்ற அச்ச உணர்வோடு முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர். தீவிர சிங்கள- பௌத்த காடையர்களுக்கு அரசின் பக்கபலம் இருந்தது. இதனால் முஸ்லிம் சமூகம் முழுமையாக ராஜபக்ஷவிற்கு எதிராகத் திரும்பியது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது முஸ்லிம்களைப் பொறுத்தவரை பிரதான பிரச்சினை அல்ல. தங்கள் உயிரையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதென்ற பாதுகாப்புப் பிரச்சினையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவர்களுக்கு முதன்மையானதாக இருந்தது. தேர்தலுக்கு முன்னர் ராஜபக்ஷ எதிர்ப்புப் பிரசாரம் முஸ்லிம்களிடையே உச்சம் பெற்றது. எல்லா முஸ்லிம் தலைவர்களும் தமது வாக்கு வங்கியை பாதுகாக்கும் நோக்கில் ராஜபக்ஷவைக் கைவிட்டு மறுபக்கம் சென்றுவிட்டனர்.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களும் சிங்கள அரசாங்கத்தின் இராணுவ அடக்குமுறைக்கு கீழ் தொடர்ந்து வாழ்வதற்குத் தயாரில்லை என்பதை வெளிப்படுத்தினர். அவர்களுக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதுதான் பிரதான பிரச்சினை அல்ல. ராஜபக்ஷ தமிழர்களின் வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் இராணுவக் கண்காணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் நடைபெற வேண்டுமென்பதை கொள்கையாகக் கொண்டிருந்தார். தமிழ் மக்களின் காணிகள், அவர்களது பொருளாதார நடவடிக்கைகள், அவர்களது சமூக வாழ்வியல் என்பன யாவும் இராணுவத்தின் கண்காணிப்பில் இருந்தன; யாவற்றையும் இராணுவமே ஒழுங்கமைத்தது. நாமே நமது பிரச்சினையைத் தீர்ப்போம் என்றும் உள்ளூரிலேயே ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவருவோம் என்றும் ராஜபக்ஷ கூறியது ஏமாற்று என்பது நிரூபணமாயிற்று. இதனால் தமிழர் மத்தியில் ஜனநாயக முறையிலான, திறந்த முறையிலான தமிழ்த்தேசியவாதம் புதிதாக உருவாகியது. வடக்கில் மாகாண சபைத் தேர்தல் அப்பகுதியில் ஜனநாயக அரசியல் மலர்ச்சிபெற உதவியது. தமிழ்ச் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மிக முக்கியமான அரசியல் அமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ராஜபக்ஷவைக் கடந்த தேர்தலில் எதிர்ப்பது என்ற அரசியல் முடிவை எடுத்தது. சிங்களக் கிராமங்களிலும் கணிசமான அளவு வாக்காளர்கள் ராஜபக்ஷவைக் கைவிட்டதனால் சிறிசேனவின் வெற்றி வாக்களிப்பு ஆரம்பிக்க முன்னரே உறுதியாகிவிட்டது.

கடந்த செப்டெம்பர் மாதம் ஊவா மாகாணசபைத் தேர்தல் நடைபெற்ற போது கிராமப்புற வாக்காளர்கள் ராஜபக்ஷவை கைவிட்டு மறுபக்கம் செல்லத் தொடங்கிவிட்டார்கள் என்பது தெளிவாகப் புலப்பட்டது. அத்தேர்தலில் எதிர்க்கட்சிகள் தனித்தனியே போட்டியிட்டன;நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குதல், சுதந்திர ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்ற விடயங்களும் தேர்தல்க் களத்தில் பிரச்சினைகளாக முன்வைக்கப்படவில்லை. ஜாதிக ஹெல உறுமய ராஜபக்ஷ அரசுடனேயே அப்போது இருந்தது. சிறிசேன ராஜபக்ஷ அமைச்சரவையில் கீழ்ப்படிவுள்ள சுகாதார அமைச்சராக இருந்தார். மொனராகலை மாவட்டம் 95வீதமானவர்கள் சிங்கள வாக்காளர்களைக் கொண்ட இடம். இவர்களில் 80 வீதமானவர்கள் கிராமியப்பகுதி வாக்காளர்கள். மொனராகலையில் ராஜபக்ஷவின் பக்கத்திலிருந்து 20% வாக்காளர்கள் எதிர்ப்பக்கம் சாய்ந்து அவருக்கு எதிராக வாக்களித்தார்கள்.

தேசிய செல்வத்தின் பெரும்பகுதியை கிராமப்புறங்களில் இருந்து பறித்தெடுத்து கொழும்பு, ஹம்பகா என்னும் இருமாவட்டங்களிலும் குவித்தனர். உள்ளூராட்சி நிறுவனங்களில் ஊழல்ப் பேர்வழிகளை நியமித்துக் கிராமப்புற அரசியலைத் தமது கையாட்கள் வசம் ஒப்படைத்தனர். அரசாங்க நிதியை அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் கொடுத்து அவற்றை தனிப்பட்ட சுகபோகங்களுக்காக அபகரிப்பதற்கு இடமளிக்கப்பட்டது. பாடசாலைகளும், வைத்தியசாலைகளும் வளங்களை இழந்து சீரழிந்தன. பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப்பணி வேலைகளுக்காக வெளியே சென்றனர். போதைப்பொருள் -

**சிறிசேன ஈழம் வாக்குகளைப் பெற்றே வெற்றி பெற்றதாகவும் ஆதலால் சிங்களவர்களின் ஜனாதிபதியாகத் தானே தொடர்ந்தும் இருந்து வருவதாக ராஜபக்ஷ கூறுகிறார். அவருக்காக வீதியில் இறங்கி பிரசாரம் செய்யும் சிங்களத் தலைவர்கள் அவரை ஒரு சிங்கள வீரனாக சித்திரிக்கிறார்கள். அவர்களின் இந்த நடவடிக்கை தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் உரிமைகளை நசுக்குவதையும் அவமதிப்பதையும் அடிப்படையாகக் கொண்ட சமூக உளவியல் உள்ளடக்கம் கொண்டதாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபம் உழைக்கும் வியாபாரமாகியது. அரசியல்வாதிகள் இந்த வியாபாரத்திற்குப் பாதுகாப்பை வழங்கினர். சிங்கள நாவல்களில் சித்திரிக்கப்பட்டது போல் கிராமங்கள் மனோரதியமான உல்லாச வாழ்விடங்களாக இருக்கவில்லை. ராஜபக்ஷ அரசு கிராம மக்களின் வாழ்வைச் சிதைத்து அழித்தது. மக்கள் துன்பத்திலும் விரக்தியிலும் மூழ்கியிருந்தனர்.

19ஆவது திருத்தம் கிராமிய சிங்கள வாக்காளர்களை இன்றைய அரசின் பக்கம் கவர்ந்திழுக்க உதவப் போவதில்லை. அடுத்த தேர்தலில் இதைக் காரணமாகக்கொண்டு அவ்வாக்காளர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சிறிசேன பிரிவு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் வாக்களிக்கப் போவதில்லை. ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கிராமிய அரசியலின் உண்மை நிலையைப் புரிந்துகொண்டு செயற்படவில்லை. சிங்கள மக்களின் பெரும்பான்மையினரான வறியவர்களின் சமூக பொருளாதாரத் தேவைகளை உணர்ந்து இக்கட்சிகள் செயற்படவில்லை. 19 ஐ வரைந்த பொழுது இச்செயல்முறையில் சிங்கள மக்கள் ஒதுக்கிவைக்கப்பட்டனர். சிங்கள அரசியல் தலைவர்களே இச்செயல்முறையை ஆக்கிரமித்தனர். சிறிசேனவைச் சம்பந்தன் புகழ்ந்துரைத்திருக்கலாம். ஆனால் 19வது திருத்தத்தினால் என்ன நன்மைகள் கிட்டின? ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரங்களைக் கூட்டிக் கொள்ள முனைந்தார். இறுதியில் உருமாற்றப்பட்ட 19வது திருத்தத்துடன் சமரசம் செய்துகொண்டார். மசோதாவின் வரைவு ஆங்கிலத்தில் மட்டும் கொடுக்கப்பட்டது. சிங்களத்திலும் தமிழிலும் வரைவு கொடுக்கப்படாததால் அதன் உள்ளடக்கம் பற்றி சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சரியாக விளங்கிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கவில்லை. அரசியல் யாப்புத் திருத்த விவகாரம் சிங்கள, தமிழ் மக்களுக்கு அந்நியமானதாக ஆயிற்று. பாராளுமன்றத்தில் கூட இது வெளிப்பட்டது. திருத்தம் பற்றிய தமிழ் மொழி பெயர்ப்புப்பிரதி இல்லாத காரணத்தால் பாராளுமன்ற விவாதத்தில் தன்னால் பங்குகொள்ள முடியாதிருப்பதாக ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் குறை கூறினார்.

**அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சியமைக்கப்போகிறவர்கள் யார் என்பதைச் சிங்கள வாக்காளர்களே தீர்மானிக்கப் போகிறார்கள். இத்தீர்மானத்தில் சிறுபான்மையின வாக்குகள் முக்கியத்துவம் பெறப்போவதில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்புத்தற்போது தேசிய நிறைவேற்றுக் குழுவில் அங்கத்துவம் வகித்துக் கொண்டு சிறிசேன-ரணிலின் நிச்சயமற்ற அரசியலில் பங்கு கொண்டுள்ள போதிலும் தேர்தல் வரும்போது தனக்கெனத் தனியான வழியைத் தேர்ந்து கொள்ள வேண்டி ஏற்படும்**

உடனே பிரதமர் விக்கிரமசிங்க அவரைப் பார்த்து ‘வாயை மூடிக்கொண்டிரும்’ என்று கூறினார். இது அவரது அநாகரிகமான நடத்தையாக அமைந்தது. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படையான உரிமை பற்றியே அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார். அச்சமயம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் வாய்மூடி மௌனமாக இருந்தது.

2009 இல் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்தவற்றை விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடயத்தில் இந்த அரசாங்கம் என்ன கூறுகின்றதோ, எதைச் செய்கிறதோ அவற்றிற்கும் ராஜபக்ஷ கூறியதற்கும் செய்ததற்கும் எந்த வேறுபாடும் கிடையாது. சிறிசேன-விக்கிரமசிங்க அரசிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் உள்ளக விசாரணைப் பொறிமுறை எத்தகையது என்ற கேள்வியைக் கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கமோ வாய்ச் சொல்லிற்கு அப்பால் எதையும் செய்யவில்லை. அரசாங்கத்திடம் உள்ளக விசாரணை பற்றிய திட்டம் எதுவும் இல்லை. அவர்கள் எதையும் செய்யப்போவதில்லை. ஏனென்றால் அப்படி ஏதும் செய்தால் சிங்கள வாக்குகள் தமக்குக் கிடைக்கப் போவதில்லை என்று கருதுகிறார்கள். தான் தோல்வியுற்ற மறுநாள் தொடக்கமே ராஜபக்ஷ சிங்கள மக்களின் உளவியலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார். சிறிசேன ஈழம் வாக்குகளைப் பெற்றே வெற்றி பெற்றார். ஆதலால் சிங்களவர்களின் ஜனாதிபதியாகத் தானே தொடர்ந்து இருந்து

**(46ஆம் பக்கம் பார்க்க...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 19 வருடங்கள் கடந்தும் பரபரப்பு ஓயாத வழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்கூட்டியே சட்டமன்றத் தேர்தல் வருமா? ஹவாலா மற்றும் போபர்ஸ் ஊழல்களை கேள்விப் படாதவர்கள் யாரும் இருக்க முடியுமா?

ஏன் முன்னாள் பிரதமரே எம்.பி.க்களுக்குப்பணம் கொடுத்த ஊழல் வழக்கில் மாட்டவில்லையா?

பல முதல்வர்களுக்கு எதிராக ஊழல் வழக்குகள் நடக்கவில்லையா?

-இப்படி கேள்விகள் எழுப்பி அரசியல்வாதிகளின் ஊழலுக்கு யார் பொறுப்பு என்று அசோக் தமிழியா எழுதிய கட்டுரையை மேற்கோள்காட்டி விட்டுத்தான் தன்னுடைய தீர்ப்பினை எழுதியிருக்கிறார் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி.

இந்தத் தீர்ப்பின் மூலம் பரபரப்பு மிகுந்த சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து ஜெயலலிதாவையும் அவருடன் சிறைத் தண்டனை பெற்ற மற்றவர்களையும் விடுதலை செய்திருக்கிறார். மே மாதம் 11ஆம் திகதி கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி வழங்கிய அந்தத் தீர்ப்பு சொத்துக் குவிப்பு வழக்கில் முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பதில், வேறு மாதிரியான கமாவை வைத்து விட்டுப் போய் விட்டது. தண்டனை பெற்றவர்களுக்கும், தண்டனை வாங்கிக் கொடுத்தவர்களுக்கும் இடையே உள்ள சர்ச்சையைத் தீர்ப்பு தீர்த்து வைக்கும் என்றால், இந்தத் தீர்ப்பால் நீதித்துறைக்குள்ளேயே சட்டச் சிக்கல்கள் தலை தூக்கியுள்ளன.

அந்த மெகா நூல்கண்டுச் சிக்கலுக்குள் நாம் போகும் முன்பு சொத்துக் குவிப்பு வழக்கில் விசாரணை நீதிமன்ற நீதிபதியாக இருந்த மைக்கேல் டி. குன்ஹா முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி ஆகிய நான்கு பேருக்கும் நான்கு வருட சிறைத் தண்டனையும், நூறு கோடி ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். அந்தத் தீர்ப்பை ரத்துச் செய்துள்ள மேல்முறையீட்டு நீதிமன்றமான கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி இந்த நால்வரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளார். அப்போது ஒரு முக்கியமான கருத்தைத் தனது தீர்ப்பில் குமாரசாமி பதிவு செய்திருக்கிறார். அதாவது, உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தவர்கள் கீழ் கோர்ட் தங்களுக்குத் தவறான தீர்ப்பைத் தந்துவிட்டது என்ற திருப்திகரமான வாதத்தை முன்வைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், வழக்கை தொடுத்தவர்கள் முறைப்படி வழக்கை நிரூபித்துள்ளார்களா, கீழ் கோர்ட் முறைப்படி தீர்ப்பு வழங்கியிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டியது உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு என்று கூறியிருக்கிறார். தனது 919 பக்கத் தீர்ப்பில் 915 பக்கத்தில் கூறப்பட்டுள்ள இந்தக்கருத்து, இந்தத் தீர்ப்பை எந்த கோணத்தில் நீதிபதி குமாரசாமி அணுகியிருக்கிறார் என்பதற்கு ஒரு அருமையான அடையாளம். இந்தக் கோணத்தில்தான் ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரும்



# சென்னை மெயில்



முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவினை குமாரசாமி விசாரித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

**வருமான வரிக்கணக்கு- ஓர் ஆதாரம்!**

அப்படி தீர்ப்பளிக்கும் முன்பு அவர் ஜெயலலிதாவும் அவருடையை கூட்டாளிகளும் வருமானத்திற்கு மீறி சொத்துக் குவிக்கவில்லை என்பதை நிரூபிக்க சில விஷயங்களை கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார். முதலில் சொத்துக் குவிப்பு வழக்கில் எப்.ஐ.ஆர். போடப்பட்டு, குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்த பிறகு தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி கணக்குகளை கீழ்நீதிமன்ற நீதிபதி குன்ஹா எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி அதை குறைந்தபட்ச ஆதாரமாக எடுத்துக் கொண்டார். அதை எடுத்துக்கொள்ளாவிட்டால் வருமானத்திற்கு மீறிய சொத்துக் குவிப்பை சரி செய்ய முடியாது என்பதுதான் ஜெயலலிதா தரப்பினர் ஆரம்ப காலகட்டத்திலிருந்து முன்வைத்து வந்த வாதம். அது உயர்நீதிமன்ற நீதிபதியால் ஏற்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் சென்னை பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில் ஜெயலலிதா உள்ளிட்டவர்கள் மீது வருமான வரி கணக்குத் தாக்கல் செய்யவில்லை என்று வருமான வரித்துறை போட்ட கிரிமினல் வழக்கில் அபராதம் கட்டி அந்த வழக்கை வாபஸ் பெற வைத்தார் ஜெயலலிதா என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. மத்தியில் பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பதவியேற்ற பிறகு ஜெயலலிதாவின் வருமான வரித்துறை வழக்கில் நடைபெற்ற இந்த அனுகூலமான முடிவு இப்போது சொத்துக் குவிப்பு வழக்கில் கை கொடுத்திருக்கிறது.



நீதிபதி குமாரசாமி

**வளர்ப்பு மகன் திருமணம் 28 இலட்சமே!**

வருமான வரித்துறை கணக்குகளை ஏற்றுக்கொண்டது முதல் வெற்றி என்பது ஒரு புறமிருக்க, அடுத்தடுத்து

**நீதிபதி குமாரசாமி பட்டியல்**

மொத்த சொத்து: ரூ. 37,59,02,466.
மொத்த வருமானம்: ரூ. 34,76,65,654
வருமானத்திற்கு மீறிய சொத்து: ரூ 2, 82,36,812
சொத்து சதவீதம்: 8.12

வெற்றிப் படிக்கட்டுகள் இந்த வழக்கில் ஜெயலலிதாவிற்கு சாதகமாகவே அமைக்கப்பட்டது. வளர்ப்பு மகன் திருமணத்தைப் பொறுத்தமட்டில் வழக்கை போட்ட இலஞ்ச ஊழல் தடுப்புத் துறை 6 கோடி ரூபா திருமண செலவு என்று வாதிட்டது. கீழ் நீதிமன்றத்தில் தீர்ப்பளித்த குன்ஹா அதை 3 கோடி ரூபாயாகக் குறைத்தார். இப்போது உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி இந்த மூன்று கோடியை 28.67 இலட்சம் ரூபாயாகக் குறைத்துவிட்டார். அதாவது விஜிலென்ஸ் டிபார்ட்மென்ட் சொன்ன தொகையிலிருந்து 4.6 சதவீதம் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்படி அதிரடியாகக் குறைப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட முக்கிய ஆதாரங்கள் பெரும்பாலான அ.தி.மு.க. பிரமுகர்கள் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராகி ஜெயலலிதா தரப்புக்கு ஆதரவாகச் சொன்ன சாட்சியங்கள்தான். இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற் போல் பெண்ணின் தந்தையான நாராயணசாமியை விஜிலென்ஸ் டிப்பார்ட்மென்ட் சாட்சியாகச் சேர்க்கவில்லை. அதனால் ஜெயலலிதா தரப்பு சொல்லும் திருமண செலவு தான் உண்மையானது என்று எடுத்துக் கொண்டார் நீதிபதி குமாரசாமி. அதை விட முக்கியமாக ஜெயலலிதா அந்த காலகட்டத்தில் முதலமைச்சராகவும் இருந்திருக்கிறார். கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்திருக்கிறார். ஆகவே அவருக்கு இரு பதவிகள் இருந்த காலத்தில் நடைபெற்ற அவருடைய வளர்ப்பு மகன் சுதாகரன் திருமணத்திற்கு கட்சிக்காரர்கள் செலவு செய்திருப்பார்கள் என்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தீர்ப்பில் இடம்பெற்ற பிரதமர் மோடி

பிரதமர் மோடி பிரதமரானதும் தனது அமைச்சர்கள் தங்களின் சொத்துக்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் சொத்துக்கள் பற்றி ஸ்டேட்மென்ட் கொடுக்க வேண்டும் என்று கூறியதைப்பாராட்டி அசோக் தமிஜியா என்பவர் எழுதியுள்ள கட்டுரையைத் தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார் நீதிபதி குமாரசாமி. இலஞ்சத்திற்கு யார் பொறுப்பு என்று சட்டபூர்வமான வருமானம் என்றால் என்ன என்று வெளிவந்துள்ள புத்தகத்தில் இடம்பெற்றுள்ள இக்கட்டுரையை மேற்கோள் காட்டிவிட்டு தீர்ப்பு எழுதியிருக்கிறார் நீதிபதி குமாரசாமி.

பது சரியாகத்தானே இருக்கும் என்ற எண்ணவோட்டத்தை தன் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார் உயர்நீதிமன்ற நீதிபதி. இது வழக்கின் அடுத்த வெற்றிப் படிக்கட்டு!

### சந்தேகம் இருந்தாலும்- வருமானம் ஓ.கே!

இன்னொரு முக்கியமான வருமானம் நமது எம்.ஜி.ஆர். பத்திரிகை தொடர்புடைய வருமானம். இதன்படி பல்வேறு வருமானவரித்துறை கணக்குகளின் அடிப்படையில் ஜெயலலிதா தரப்பு 14 கோடி ரூபாவை வருமானமாகக் காட்டியது. விசாரணை நீதிமன்ற நீதிபதி குண்ஹா அது முழுவதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. வருமானவரி கணக்கை தாமதமாக தாக்கல் செய்ததும், அந்தப் பத்திரிகைக்கு வந்த சந்தா தொடர்பான விண்ணப்பங்களை நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு தாக்கல் செய்வதில் முன்னுக்குப் பின் முரணான பதிலுமே அதை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணமாக தெரிவித்திருந்தார். மேல்முறையீட்டில் உயர்நீதிமன்ற நீதிபதி அதை சற்று வித்தியாசமாக பார்த்திருக்கிறார். நமது எம்.ஜி.ஆரின் சந்தா வருமானத்தைப் பொறுத்தவரை குன்ஹாவின் கருத்தை ஏறக்குறைய ஒப்புக் கொண்டுள்ளார். குறிப்பாக, வருமான வரிக் கணக்கு மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது அந்த கணக்குகளின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அந்த சந்தா விண்ணப்பங்களை கொடுப்பதில் தண்டனை பெற்றவர்களால் சொல்லப்பட்ட முரண்பட்ட தகவல்கள் சந்தா மூலம் வந்த வருமானத்தை சந்தேகமாகப் பார்க்க வைக்கிறது என்றெல்லாம் குண்ஹாவின் கருத்தை ஆமோதித்த நீதிபதி குமாரசாமி, இதனாலேயே அந்த வருமானம் அனைத்தையும் நிராகரித்து விட முடியாது. ஆகவே 14 கோடி ரூபாயில் நான் 4 கோடி ரூபாயை வருமானமாக எடுத்துக் கொள்கிறேன் என்று தீர்ப்பளித்தார். வழக்கு விடுதலையை நோக்கி நகர உதவிய அடுத்த படிக்கட்டு இது!

### அன்பளிப்புகளும் வருமானமே!

பிறகு ஆந்திராவில் உள்ள திராட்சைத் தோட்டம் மூலம் வந்த வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டார் உயர்நீதிமன்ற நீதிபதி. அதற்கு அவர் சொன்ன காரணம் வருமான வரித்துறை தீர்க்கமாக விசாரித்து அவர்கள் கணக்கை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார். அதேபோல் பரிசுப் பொருட்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார் குமாரசாமி. அதில் முக்கியமாகத் தண்டனை பெற்றவர்கள் தரப்பில் 2.15 கோடி ரூபாயை பரிசுப் பொருட்கள் என்ற அடிப்படையில் வருமானமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வாதிட்டார்கள். ஆனால் குன்ஹா ஒப்புக் கொள்ளவில்லை. இப்போது உயர்நீதிமன்ற நீதிபதி, ஜெயலலிதா வளர்ப்பு மகன் திருமணத்தை நடத்தியிருக்கிறார். தனது பிறந்த நாள் கொண்டாடியிருக்கிறார். அரசியல் கட்சித் தலைவர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்ப்பின் துளிகள்

- வருமான வரிக்கணக்குத் தாமதமாக தாக்கல் செய்யப்பட்டாலும் அதைக் குறைந்தபட்ச ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாம்.
- கடன் வழக்கின் காலகட்டத்திலேயே வாங்கி திருப்பி அடைக்கப்பட்டிருந்தாலும் அதை வருமானமாக எடுத்துக் கொள்ளலாம்.
- சார்பதிவாளர் ஒரு பொது ஊழியரின் வீட்டிற்குச் சென்று பத்திரப் பதிவு செய்தார் என்பதே கூட்டுச் சதிக்கு ஆதாரம் ஆகாது.
- ஜெயலலிதாவுடன் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் போயஸ் கார்டன் இல்லத்தில் வசித்தார்கள் என்பது மட்டுமே கூட்டுச் சதியை நிரூபிக்கப் போதாது.
- ஜெயலலிதா வருமானத்திற்கு மீறி சொத்துக் குவிக்கவில்லை. அவர் மற்றவர்களைக் குவிக்கத் தூண்டவும் இல்லை.
- பொது ஊழியர் அன்பளிப்பு பெற்று, அதை காலதாமதமாக வருமான வரிக் கணக்கில் காட்டி விட்டால் அதை வருமானமாக எடுத்துக் கொள்ளலாம்.
- நிலம் வாங்கல் - விற்பது தொடர்பான கூட்டுச் சதியை நிரூபிக்க நிலம் விற்க ஏற்பாடு செய்த இடைத்தரகர்களின் சாட்சியம், விற்பனைப் பத்திரம், அதை பதிவு செய்த சார்பதிவாளர் சாட்சியம் போன்றவை மட்டுமே போதாது.
- அன்பழகன் வழக்கு அரசியல் பழி வாங்கல் இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் இந்தத் தீர்ப்பில் அரசியல் இலாபத்திற்காக வழக்குப் போடுவோரை ஊக்கிவிக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார் நீதிபதி.
- தேசிய வங்கிகளில் இருந்து பெறும் கடனை வருமானமாக எடுத்துக் கொள்ளலாம்.
- இந்து திருமண சடங்குகளின் படி மணப் பெண் வீட்டார்தான் திருமணச் செலவுகள் அனைத்தையும் செய்வார்கள். அதை ஜெயலலிதா மீது சுமத்த முடியாது.
- சட்டவிரோதமாக ஜெயலலிதா சம்பாதித்தார் என்றோ அதன் மூலம் மற்றவர்கள் சொத்துக்களை வாங்கினார்கள் என்றோ நிரூபிக்கப்படவில்லை.
- விசாரணை நீதிமன்றத்தின் கணக்கீடுகள் தவறே சொல்ல முடியாத அளவிற்கு இல்லை.
- ஒரே சாட்சி பல்வேறு கட்டங்களில் வெவ்வேறு வாக்குமூலங்களைக் கொடுத்திருந்தால், அந்த சாட்சியின் வாக்குமூலத்தை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.
- இந்தத் தீர்ப்பின் பக்கங்கள் 919. ஆனால் 738 பக்கம் வரை வழக்கின் பழைய கதைகள் இடம்பெற்றுள்ளன.
- ஜெயலலிதா தரப்பில் 65 தீர்ப்புக்களை மேற்கோள் காட்டி வாதாடியிருக்கிறார்கள். மற்றவர்கள் சார்பில் 28 தீர்ப்புக்களை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்.

களின் பிறந்த நாளின் போது பரிசு, அன்பளிப்பு வழங்கும் நடைமுறை தமிழகத்தில் இருக்கிறது போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டி, 1.50 கோடி ரூபாயை வருமானக் கணக்கில் சேர்த்துக் கொண்டார். இத்துடன் சசி என்டர்பிரைஸஸ் நிறுவனத்தின் வருமானம் 25 இலட்சம், ஜெயா பப்ளிக்கேஷன்ஸ் வருமானம் 4.18 கோடி ரூபா, சூப்பர் டூப்பர் டி.வி. வருமானம் 4 கோடி, வாடகை 3.22 இலட்சம் என்று அனைத்தையும் வருமானக் கணக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி எடுத்துக் கொண்டார். அதே நேரத்தில் காலணிகள், புடவைகள் போன்றவை பற்றிக் கூறியிருக்கும் நீதிபதி குமாரசாமி, போயஸ் கார்டனில் மூன்று பெண்கள் குடியிருந்துள்ளார்கள். அவர்களில் யார் யார் இந்த சேலைகளைப் பயன்படுத்தியது என்பது பற்றியெல்லாம் வழக்கைத் தொடுத்தவர்கள் கூறவில்லை. அது மட்டுமின்றி ஜெயலலிதா தனது 18 வயதிலிருந்து சினிமா நடிகையாக இருக்கிறார். அவருக்கு படங்களில் நடித்த போது கொடுத்த புடவைகள் எல்லாம் அதில் இருந்திருக்கலாம் என்பன போன்ற காரணங்களை அடுக்கி அவற்றையெல்லாம் நிராகரித்தார் நீதிபதி. அதேநேரத்தில் கைக் கடிகாரங்கள், நகைகள், வைர நகைகள் போன்றவற்றை குன்ஹா ஏற்றுக்கொண்டது போல் இவரும் ஏற்றுக் கொண்டுள்ளார். வழக்கு கிட்டத்தட்ட வெற்றி படிக்கட்டைத் தொட்டு விட உதவிய வருமானங்கள் இவை!

### 24 கோடி வருமானமாக வந்த கதை

எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு இறுதியில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்ததைப் பயன்படுத்தி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சொத்து வாங்கிக் குவித்தார்களா என்ற வழக்கின் முக்கிய கேள்விக்கு வந்திருக்கிறார். இலஞ்ச ஊழல் தடுப்புத்துறையின் விசாரணை அதிகாரியாக இருந்த நல்லம்மா நாயுடு (259 அரசு சாட்சிகளில் இவர்தான் கடைசி சாட்சி) அளித்த சாட்சியத்தில் ஜெயலலிதாவும் அவருடன் இருப்பவர்களும் சேர்ந்து 24 கோடி ரூபா கடன் பெற்றுள்ளார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். நீதிபதி குன்ஹா இதில் 5 கோடி ரூபா மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டார். மீதிப் பணத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு அவர் வருமானத்திற்கு மீறிய சொத்துக் குவிப்பு வழக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட செக் பீரியடிற்குள் (அதாவது 1991-96க்குள்) கடனை வாங்கி அந்தக் கடனை அதற்குள்ளாகவே திருப்பிச் செலுத்தியிருப்பதால் அவற்றை எடுத்துக்கொள்ள முடியாது என்று நிராகரித்தார். இந்தக் கடன்களை வருமானமாக எடுத்துக்கொள்ளும் பிரச்சினை மேல்முறையீட்டு விசாரணையின் போதும் வந்தது. இந்த கணக்குகள் பற்றி தனது தீர்ப்பில் குறிப்பிடும் குமாரசாமி, ஜெயலலிதா தரப்பினர் தனியார் நிறுவனங்கள், தனியார் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 24 கோடி ரூபா கடன் பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிருக்கிறார்கள். அதனை கடன் மூலம் வந்த வருமான மாக கருத வேண்டும். ஆனால் நான் இவற்றில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கப்பட்ட கடனை மட் டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறேன் என்று கூறி 24 கோடியை கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார். இங்கு தான் இந்த வழக்கு விடுதலை என்ற வெற்றி முகட்டைத் தொட்டது.

24 கோடி ரூபாயை எடுத்துக் கொண்டதால் ஜெயல லிதா உள்ளிட்ட நால்வரின் வருமானத்திற்கு மீறிய சொத்து வெறும் 8.12 சதவீதம்தான் என்ற முடிவிற்கு வந்த நீதிபதி, இது போன்ற குறைவான சதவீதத்திற்குரிய சொத்துக்கள் பற்றிக் கணக்குக் காட்டமுடியவில்லை என் பதற்காக பொது ஊழியரை தண்டிக்கக்கூடாது என்று இந் திய உச்சநீதிமன்றம் அக்னிகோத்ரி வழக்கில் தீர்ப்பளித் துள்ளது. அதனைக் கடைப்பிடித்து இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான ஜெயலலிதாவை விடுதலை செய்கிறேன். அவரே விடுதலை செய்யப்பட்டு விட்ட தால் அவரை விடக் குறைவான ரோல் உள்ள மற்ற குற்ற வாளிகளையும் விடுதலை செய்கிறேன் என்று தீர்ப்பளித் தார். தீர்ப்பளிக்க உதவி செய்த அதே கடன் தொகை வெற்றி முகட்டைத் தொட ஏறி வந்த ஏணியையும் இந்த இடத்தில் தான் நழுவ வைத்துள்ளது.

## தீர்ப்பின் சிக்கல் உதயமான இடம்!

இந்தத் தீர்ப்புதான் தவறு என்று வழக்கில் வாதாடிய கர் நாடக அரசின் சிறப்பு வழக்கறிஞர் ஆச்சார்யா கூறியிருக் கிறார். அவரது வாதம் என்னவென்றால், நீதிபதி குமார சாமி அவர்கள் தேசிய வங்கிகளில் வாங்கிய கடனை மட்டும் வருமானமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார். அப்படி அவர் எடுத்துக் கொண்ட 24 கோடி ரூபா கடன்கள் என்னென்ன என்பதை தீர்ப்பின் பக் கம் 852இல் குறிப்பிட்டிருக்கிறார். அதன் கூட்டுத் தொகை 10.67 கோடி தான் வருகிறது. 14 கோடி ரூபா அதில் இல் லை. அப்படியிருக்கையில் ஜெயலலிதாவின் வருமானத் திற்கு மீறிய சொத்து 76 சதவீதத்திற்கு மேல் போய் விடுகி றது. இவருக்கு நீதிபதி குமாரசாமி சுட்டிக்காட்டியுள்ள அக்னிகோத்ரி வழக்கு பொருந்தாது என்று சரவெடியை வெடிக்க வைத்தார். இது தமிழகத்திலும் எதிரொலிக்கத் துவங்கியது. தி.மு.க. தலைவர் கருணாநிதி, பா.ம.க. தலை வர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் உள்ளிட்ட அனை வருமே தீர்ப்பு தப்பு. கர்நாடக அரசு உடனடியாக மேல்மு றையீடு செய்ய வேண்டும் என்று ஒரே குரலில் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

## தனக்குத் தானே நீதிபதியாக முடியுமா?

தவறான தீர்ப்பை நீதிபதி குமாரசாமியே மாற்ற முடியுமா என்ற கேள்வி எழுந்தது. குற்றவியல் விசா ரணை நடைமுறைச் சட்டம் 362ஆவது பிரிவின் படி தீர்ப்பு எழுதி வெளியிட்ட பிறகு அந்தத் தீர்ப்பில் கணிதப் பிழை அல்லது எழுத்துப் பிழை இருந்தால் நீதிபதி மாற்ற லாம். ஆனால் தீர்ப்பை மாற்ற முடியாது என்று கூறப்பட்



டிருக்கிறது. இதன்படி குமாரசாமி கடனாக வந்த வருமா னத்தில் திருத்தம் செய்யலாம். ஆனால் வழக்கில் உள்ள கடன்களின் அடிப்படையில் அதில் திருத்தம் செய்தால், வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள விடுதலை ரத்தாகி தண் டனை கொடுக்க வேண்டிய சூழல் உருவாகும். அதனால் தான் அவரும் தீர்ப்பை திருத்த முடியாமல் நிற்கிறார். அதற்கு ஏற்றாற்போல் கர்நாடக உயர்நீதிமன்ற தலைமைத் நீதிபதி வகேலாவும் தீர்ப்பைத் நீங்கள் திருத்தக்கூடாது என்று உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமிக்கும் அலுவலக உத்தரவு பிறப்பித்துவிட்டார்.

## அப்பீலுக்குப் போவது யார்?

இனி உச்சநீதிமன்றத்தில் அப்பீல் ஒன்றே இந்த வழக் கில் அடுத்த கட்டம் என்ன என்பதை முடிவு செய்யும். இந்த வழக்கு மேல்முறையீட்டுக்கு ஏற்ற வழக்கு என்று சிறப்பு வழக்கறிஞர் ஆச்சார்யா ஏற்கனவே கர்நாடக அரசுக்குப் பரிந்துரை செய்துவிட்டார். கர்நாடக அமைச்ச ரவை கூட அந்த முடிவை எடுக்கும் என்றே தெரிகிறது. இதுதவிர தி.மு.க. சார்பில் இந்த வழக்கில் விசாரணை நீதிமன்றத்திலும், மேல்முறையீட்டு நீதிமன்றத்திலும் வாதங்களைத் தாக்கல் செய்ய உச்சநீதிமன்றமே அனுமதி வழங்கியிருக்கிறது. அதனால் அவர்கள் தரப்பிலும் அப் பீல் செய்யலாம் என்று கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் ஆஜராகி வாதிட்ட மூத்த வழக்கறிஞர் சி.வி. நாகேஷ் கூறியிருக்கிறார். ஜூன் மாதத்திற்குள் கர் நாடக அரசு அப்பீல் செய்யவில்லை என்றால் நானே அப் பீல் தாக்கல் செய்வேன் என்று இந்த சொத்துக் குவிப்பு வழக்கின் புகார்தாரரான டாக்டர் சுப்ரமணியம் சுவாமி பேட்டியளித்துள்ளார். ஆகவே இவர்களில் யார் உச்சநீதி மன்றத்திற்கு முதலில் போகிறார்கள் என்பதை நாடே உன் னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது. அதேசமயம் உச் சநீதிமன்றத்தின் கோடைக்கால விடுமுறையும் துவங்கி விட்டது.

## முதலமைச்சராகிறார் ஜெயலலிதா?

இந்தச்சூழ்நிலையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் கூட்டம் மே 22ஆம் திகதி நடைபெறுகிறது. அன்றைய தினம் சட்டமன்றக் கட்சித் தலைவராக ஜெயலலிதா தேர்ந் தெடுக்கப்படுவார் என்றும் அன்றே முதலமைச்சராக பதவியேற்பார் என்றும் தகவல். ஏற்கனவே சட்டமன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் பதவியை இழந்திருந்தாலும், முதலமைச்சரா வதற்கு மெஜாரிட்டி உள்ள கட்சியின் சட்டமன்றத் தலைவராக தேர்வு செய்யப்பட்டால் போதும். முதலமைச்சர் பதவியேற்ற தினத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் ஏதாவது தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக வேண்டும் என்பதுதான் இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள சிறப்பம்சம்! அதன்படி முதலமைச்சரானவுடன் ஒரு இடைத் தேர்தலை சந்தித்துவிட்டு 2016இல் சட்டமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டிய சூழல் ஜெயலலிதாவிற்கு ஏற்பட்டிருக்கிறது. ஊழல் வழக்கிலிருந்து விடுதலை பெற்றவுடன் முதலில் ஜெயலலிதாவிற்கு வாழ்த்துச் சொன்னவர் பிரதமர் நரேந்திரமோடி. அவரைத் தொடர்ந்து பா.ஜ.க.வின் மத்திய அமைச்சர்கள் பலரும் வாழ்த்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழக பா.ஜ.க. தலைவர்களோ ஜெயலலிதா உடனே முதலமைச்சராக வேண்டும் என்றே கோரிக்கை வைத்துள்ளார்கள். தீர்ப்பிற்குப் பிறகு பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் நெருங்கி வருகிறது. ஆனால் எதிர்க்கட்சிகள் யாரும் தி.மு.க. பக்கம் இன்னும் நெருங்கிச் செல்வதாகத் தெரியவில்லை. தீர்ப்புப்பற்றி கருத்துச் சொல்வதில் கூட ஜி.கே.வாசனும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இன்னும் நடுநிலை வகிக்கின்றன. இந்தத் தீர்ப்பால் ஜெயலலிதா மற்றும் ஜெயலலிதாவிற்கு எதிரான அணி என்ற அளவில் தமிழகத்தில் ஒரு தேர்தல்க் கூட்டணி அமையும் வாய்ப்பு இருப்பதாகவே அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். ஆகவே முதல்வராக பொறுப்பேற்றுவிட்டு ஆறு மாதம் முடிவதற்கு முன்பே சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு முன்கூட்டியே சட்டமன்றத் தேர்தலுக்குப் போவாரா என்பது ஒரு சுவாரஸ்யமான கேள்வி. அதற்குக் கிடைக்கும் பதிலும் சுவாரஸ்யமாகவே இருக்கும் என்றே தோன்றுகிறது. எப்படியோ ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்குத் துவங்கி 19 வருடங்கள் ஆனாலும், அந்த வழக்கின் பரபரப்பு இன்னும் ஓயவில்லை! ■

---

*(39ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

வருவதாக ராஜபக்ஷ கூறுகிறார். வேறு சில சிங்களத் தலைவர்கள் ராஜபக்ஷவிற்காக வீதியில் இறங்கிப் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ராஜபக்ஷவை ஒரு சிங்கள வீரனாகச் சித்திரிக்கும் இந்த நடவடிக்கை, தமிழர்களதும் முஸ்லிம்களதும் உரிமைகளை நசுக்குதல், அவர்களை அவமதித்தல் என்பனவற்றால் உருவாக்கப்படும் சமூக உளவியல் உள்ளடக்கம் கொண்டதாகும்.

எதிர்காலத்தினை இந்த அரசியல் பின்னணியிலேயே நாம் மதிப்பிடவேண்டியவர்களாய் உள்ளோம். விரைவில் நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் விரக்தியுற்ற நிலையில் இருக்கும் சிங்கள வாக்காளர்களுக்கு முன்னால் இரு தெரிவுகள் மட்டுமே உள்ளன. சிங்கள உணர்வுகளைக்கிளர்ந்தெழச் செய்யும் பிரசாரம் ஒரு பக்கத்திலும் மறுபக்கத்தில் கொழும்பு மையச் சிங்களச் சிந்தனையும் உள்ளன. வாக்காளர் இவற்றில் ஒன்றைத் தேர்ந்துகொள்ள வேண்டும். நகர்ப்புறச் சிங்கள வாக்காளர்களுக்கு மூன்றாவது குடியரசு அரசியல் யாப்பு ஒன்றை வழங்கப்போவதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறுகிறது. புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டபின் இதைச் செய்யப்போவதாக அது கூறுகிறது. கொழும்புக்கு வெளியே உள்ள மாகாணங்களின் அரசியல்வாதிகள் எதனோல், போதைவஸ்து என்பனவற்றின் வியாபாரத்தால் கீர்த்தி பெற்றவர்களாய் உள்ளனர். இத்தகைய பழைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசியல்வாதிகளையே சிறிசேன தன்பக்கம் கவர்ந்திழுக்க முயற்சிக்கிறார். ராஜபக்ஷவின் கட்சி யந்திரத்தின் பிரிக்க முடியாத அங்கமாக இருந்தவர்களே இந்த அரசியல்வாதிகள். ஆகையினால் சிறிசேன- விக்கிரமசிங்க கூட்டுத் தேர்தல் நெருங்குவதால் ஊழல்ப் பிரச்சினையில் உண்மையான அக்கறை காட்டப் போவதில்லை. இத்தகைய அரசியல் பின்னணியில் கிராமப்புற வாக்குகள் அதிகாரம் உள்ள பக்கங்களை நோக்கியதாகப் பிளவுபடும். கிராமிய வாக்காளர்களை கவர்ந்திழுப்பதில் சிறிசேன, ராஜபக்ஷவிற்கு இணையாக இருக்கப்போவதில்லை. ஆகவே வாக்குகள் மூன்று பிரிவாகப் பிரியப் போகிறது. இதனால் எவரும் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெறப்போவதில்லை. ஐக்கிய தேசியக்கட்சி கூடிய ஆசனங்களைப் பெறக்கூடும். ஆனால் அதனால் தனித்து ஆட்சி அமைக்க முடியாதிருக்கும். மேற்குறிப்பிட்ட வகையில் சிங்கள வாக்குகள் பிளவுபடும் நிலையில் அடுத்து திரும்பவும் சிறிசேன- விக்கிரமசிங்க கூட்டின் மூலம் ஆட்சியமைக்கும் நிலை எழலாம். அப்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தன் கோரிக்கைகளை முன்வைத்து அரசு அமைப்பதற்கு உதவும் பலமுடையதாக இருக்கும் என்று கூறமுடியாது. சிறிசேனவுடன் இணைந்து அரசு அமைக்கும் திட்டத்துடனேயே விக்கிரமசிங்க செயற்படுகிறார். தேசிய அரசாங்கத்தை அமைக்கும் ரணிலின் திட்டம் இருபெரிய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து அரசு அமைத்தலாகும். இந்த இரு கட்சிகளும் சிங்களக் கட்சிகளாகும். இவற்றுள் ஒன்றாக ஐக்கிய தேசியக்கட்சி அமையும். அதனால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகலாம்.

பாராளுமன்றத் தேர்தல் ஒன்று வரும்பொழுது யார் ஆட்சி அமைப்பார்கள் என்பதை பெரும்பான்மைச் சிங்கள வாக்காளர்களே தீர்மானிக்கப்போகிறார்கள். இத்தீர்மானத்தில் சிறுபான்மையினர் வாக்குகள் முக்கியத்துவம் பெறப்போவதில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தற்போது தேசிய நிறைவேற்றுக் குழுவில் உறுப்பினராக இருந்துகொண்டு சிறிசேன, விக்கிரமசிங்கவின் நிச்சயமற்ற அரசியலில் பங்கு கொண்டுள்ள போதிலும் தேர்தல் வரும்போது தனக்கெனத் தனியான வழியைத் தேர்ந்துகொள்ள வேண்டி ஏற்படும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் மோடியின் சீன விஜயம்



## டில்லி டயரி



எம்.பி.வித்தியாதரன்

**இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு சுலபமான விவகாரம் அல்ல. உறவுகளில் பெரியதொரு நம்பிக்கைப் பற்றாக்குறை இருக்கிறது என்பது இரு தலைவர்களுக்கும் தெரியும்**

கடந்த சில தினங்களாக டில்லியிலும் பல நாடுகளின் தலைநகரங்களிலும் உள்ள கேந்திர முக்கியத்துவ விவகார ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்விமான்கள் மற்றும் அரசியல் அக்கறையுடைய மக்கள் பிரிவினரின் கவனமெல்லாம் சீனத்தலைநகர் பெய்ஜிங் மீதே திரும்பியிருந்தது. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட தனது சீன விஜயத்தை மேற்கொண்டிருந்ததே அதற்குக் காரணமாகும். மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு மோடி மே 14 ஆம் திகதி பெய்ஜிங் சென்றிருந்தார். அதேபோன்றே, கடந்த வருடம் செப்டெம்பரில் சீன ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில் உலகின் கவனம் புதுடில்லி மீது திரும்பியிருந்தது. மோடி பதவிக்கு வந்து மூன்று மாதங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீன ஜனாதிபதியின் அந்த விஜயம் இடம்பெற்றது.

பெய்ஜிங்கிற்கு விஜயம் செய்த ஐந்தாவது இந்தியப் பிரதமர் மோடி. முதலில் 1954 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு சீனாவுக்கு விஜயம் செய்து தலைவர் மா ஓசேதுங்குடனும் பிரதமர் சூ என் லாயுடனும் மகத்தான சந்திப்புக்களை நடத்தி சீனத் தலைமைத்துவத்தின் மனதைக் கவர்ந்தார். 'இந்தி சீனி பாய் பாய்' (இந்தியர்கள், சீனர்கள் சகோதரர்கள், சகோதரர்கள்) என்ற கோஷம் மிகவும் பிரபல்யமானது. ஆனால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் மூண்ட 1962 போர் நேருவை பெரும் வேதனைக்குள்ளாக்கிவிட்டது. அடுத்து 1988 ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தியும் 1993 ஆம் ஆண்டில் நரசிம்மராவும் 2003 ஆம் ஆண்டில் அடல் பிஹாரி வாஜ்பாயும் 2008, 2013 ஆம் ஆண்டுகளில் மன்மோகன் சிங்கும் சீன விஜயங்களை மேற்கொண்டிருந்தனர்.

எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே மோடியின் சீன விஜயம் பெரும் பரபரப்பானதாக அமைந்தது. சி ஜின் பிங்கிற்கும் மோடிக்கும் இடையிலான சந்திப்புகள் இருநாடுகளினதும் ஊடகங்களின் கவனத்தை மாத்திரமல்ல, உலகம் பூராகவுமுள்ள ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்தன. இரு தலைவர்களின் சந்திப்புகளுக்கும் மோடியின் ஏனைய நிகழ்வுகளுக்கும் பெருமுக்கியத்துவம் கொடுத்து அந்த ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இந்த விஜயம் டில்லியில் மோடியின் ஆட்சியின் மிகவும் தீர்க்கமான ஒரு தருணமாகப் போகின்றது என்பதில் சந்தேகமில்லை. குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் என்ற வகையில் ஏற்கனவே சீனாவுக்குச் சென்றிருந்த மோடி சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு எப்போதும் விருப்பம் கொண்டிருந்தார். சீனத் துருப்புகளின் ஊடுருவல்களினாலும் எல்லைத் தகராறினாலும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் அடிக்கடி நெருடல்கள் ஏற்படுகின்றபோதிலும் மோடி அத்தகைய விருப்பத்தை எப்போதும் வெளிக்காட்டியே வந்திருக்கிறார். கடந்த வருடம் பொதுத் தேர்தலுக்குப் பிறகு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக சீனப் பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, சீன ஜனாதிபதி டில்லிக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று அழைப்பு விடுக்க மோடி தவறவில்லை. இந்தியாவின் மிகப் பெரிய அயல்நாட்டுடன் பலம் வாய்ந்த உறவை ஆரம்பிக்க அவர் விரும்பினார். அதற்கு சாதகமான முறையில் பதிலளித்த சி ஜின் பிங் கடந்த செப்டெம்பரில் டில்லிக்கு விஜயம் செய்தார். ஆனால், காஷ்மீரின் லடாக் பிராந்தியத்திற்குள் இன்னொரு ஊடுருவலை சீனத்துருப்புகள் அச்சந்தர்ப்பத்தில் செய்ததால் அந்த விஜயம் எதிர்பார்த்த மாதிரி வெற்றிகரமானதாக அமையமுடியாமற் போயிற்று.

சி ஜின் பிங் இன் விஜயத்தை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு மைல் கல்லாக்குவதற்கான மோடியின் திட்டங்கள் சீர்குலைந்து போயின. இராஜதந்திர நடைமுறைகளை அலட்சியம் செய்து மோடி சீன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியை தனது சொந்த மாநிலத்தில் சபர்மதி ஆற்றங்கரையில் வரவேற்றார். அதற்குப் பிறகுதான் இருவரும் டில்லி வந்தார்கள். தங்களுக்கிடையில் தனிப்பட்ட முறையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள இருவரினாலும் இயலுமாக இருந்தபோதிலும், சீனத் துருப்புகளின் ஊடுருவல் சூழ்நிலையைப் பாழாக்கிவிட்டது.

தனக்கு மோடி இந்தியாவில் செய்ததை சீனாவில் மோடிக்கு சி ஜின் பிங் செய்தார். அவர் மோடியை தனது சொந்த மாகாணமான சியனில் வரவேற்று சரித்திரப் பிரசித்திமிக்க பௌத்த ஆலயத்துக்கும் கூட்டிச் சென்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைச் சீர்குலைக்கின்ற நம்பிக்கைப் பற்றாக்குறையைப் போக்குவ



மாவோவுடன் நேரு

தற்கு அவசியமான சகல விவகாரங்கள் குறித்தும் இருவரும் பேசினார்கள். எல்லைத்தகராறு, வர்த்தகம், போக்குவரத்துகளை அதிகரிப்பதற்கான தேவை, முதலீடுகளை அதிகரிப்பது, சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய பணிகள், பயங்கரவாதிகளின் ஊடுருவல்களுக்கு முகங்கொடுப்பதற்கு ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான தேவை என்று பெருவாரியான விவகாரங்கள் குறித்து அவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் சீர்திருத்தங்கள், அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் இந்தியாவின் உறுப்புரிமை ஆகியவை குறித்தும் கூட இரு தலைவர்களும் ஆராய்ந்தார்கள்.

உத்தியோகபூர்வ இரவுவிருந்துபசாரத்துக்குப் பிறகு மோடியும் சி ஜின் பிங்கும் தலைநகர் பெய்ஜிங்கிற்குச் சென்றார்கள். அங்கும் கூட இருதலைவர்களும் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளையும் இருதரப்பு கலந்துரையாடல்களையும் நடத்தினர். 12 உடன்படிக்கைகளில் அவர்கள் கைச்சாத்திட்டனர். 1000 கோடி டொலர்களை கூடுதலான முதலீடு செய்வதற்கு சீனா இணங்கியிருக்கிறது. சி ஜின் பிங்கின் டில்லி விஜயத்தின் போது 2000 கோடி டொலர்களை முதலீடு செய்வதற்கு சீனா உடன்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மிகவும் சௌகரியமான சூழ்நிலையின் கீழ் பேச்சுக்கள் இடம்பெற்றதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார். சௌகரியமான மனநிலையில் இருதலைவர்களும் காணப்பட்டனர் என்பது உண்மைதான் என்றாலும் கடந்தவருடம் அஹமதாபாத்தில் காணப்பட்டதைப் போன்ற மகிழ்ச்சி வாய்ந்த சூழ்நிலையைக் காணக்கூடியதாக இருக்கவில்லை. இருவரும் சற்று பதற்றத்துடன் காணப்பட்டனர்.


உண்மையிலேயே, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு சுலபமான ஒரு விவகாரம் அல்ல. உறவுகளில் பெரியதொரு நம்பிக்கைப் பற்றாக்குறை இருக்கிறது என்பது இரு தலைவர்களுக்கும் தெரியும். இருநாடுகளுமே பரஸ்பரம் அவற்றின் செயற்பாடுகளைச் சந்தேகத்துடனேயே நோக்குகின்றன. அடுத்த கட்டத்துக்கு உறவுகளை எடுத்துச்செல்ல வேண்டுமானால், சந்தேகத்துடன் நோக்குகின்ற போக்கில் மாற்றம் தேவை. அது நடைபெற வேண்டுமானால் எல்லைத் தகராறுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லைத் தகராறு காலனித்துவ ஆட்சிக் காலத்தின் ஒரு எச்சசொச்சமாகும்.

நம்பிக்கைப்பற்றாக்குறைப் பிரச்சினையைத் தங்களால் கையாள முடியுமேயானால், முன்னோக்கிச் செல்வதற்கு தங்களுக்குத் தெளிவான பாதையொன்று திறக்கும் என்பதை மோடியும் சி ஜின் பிங்கும் நன்கறிவார்கள். இருநாடுகளினதும் அபிவிருத்தியை நிலைநிறுத்துவதற்கும் பொருளாதாரங்களை உயர்நிலைக்கு கொண்டுசெல்வதற்கும் இது அவசியமானதாகும். இந்தியாவும் சீனாவும் பிரமாண்டமான சந்தைகளைக் கொண்டவை. இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பினால் இந்தப் பிராந்தியத்தையே மாற்றியமைக்க முடியும். ஏனைய பல சிறிய நாடுகளையும் மேம்படுத்த முடியும். இதன் மூலமாக அமைதியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தி பிராந்தியத்தில் போட்டாபோட்டிகளையும் முடிவுக்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்படக்கூடிய மேம்பாடு இலங்கை, நேபாளம், மாலைதீவு, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் நேரடியாக உதவி புரியும். பாகிஸ்தானைப் பொறுத்தவரை, அந்த நாடு அதன் முன்னைய நட்புநாடான அமெரிக்காவின் உதவியுடன் இன்னமும் கூட அரசியல் விளையாட்டில் ஈடுபட முடியுமா என்பதை நிச்சயப்படுத்திக் கூற முடியாதுள்ளது.

சீனாவுடனான உறவுகளை இந்தியா மேம்படுத்துவதென்பது அமெரிக்காவுக்கு அவ்வளவாக மகிழ்ச்சிதரக்கூடிய விடயமாக இருக்காது என்பதும் தெளிவானது. சீனாவும் அமெரிக்காவும் மிகப்பெரிய வர்த்தக மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு களில் ஏற்படக்கூடிய மேம்பாடு இலங்கை, நேபாளம், மாலைதீவு, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் நேரடியாக உதவி யாக அமையும். ஆனால் சீனாவுடனான உறவுகளை இந்தியா மேம்படுத்துவது என்பது அமெரிக்காவுக்கு அவ்வளவாக மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாக இருக்காது

பொருளாதார உறவுகளைக் கொண்டி ருக்கின்றன என்ற போதிலும், பல உலகப்பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பாக ஜப்பான், தென்கொரியா, ரஷ்யா ஆகியவற்றுடனான உறவுகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அவற்றுக்கிடையே கடுமையான வேறுபாடுகள் காணப் படுகின்றன. ரஷ்யாவுடனும் ஈரானு டனும் சீனாவின் உறவுகள் அதிகரி த்துவருவதை அமெரிக்கா சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. இப்போது சீனாவுடனான உறவுகளை மேம் படுத்துவதற்கு இந்தியா மேற்கொள் கின்ற முயற்சிகள் அமெரிக்காவில் அதிர்ச்சியை ஏற்படுத்தலாம். ஏனென் றால், ஈரானையும் சேர்த்துக்கொண்டு இந்தியாவும் ரஷ்யாவும் சீனாவும் ஒன்றுபடுமேயானால் அது அமெரிக் காவின் வியூகங்களுக்கு முட்டுக்கட் டையாக அமையக்கூடிய ஒரு பலம் பொருந்திய அணியாக அமையும். ரஷ்யாவுடனும் ஈரானுடனும் அமெ ரிக்காவுக்கு பிரச்சினைகள் இருக்கின் றன.

இத்தகையதொரு பின்புலத்தி லேயே, இரண்டாவது உலகமகாயுத் தத்தில் பாசிசத்துக்கு எதிராகக் காணப்பட்ட வெற்றியின் 70ஆவது வருட நிறைவைக் குறிக்கும் கொண் டாட்டங்களின் போது அண்மையில் மாஸ்கோவில் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடனும் சீன ஜனா திபதியுடனும் நட்புரிமையுடன் உற வாடிய நிகழ்வை நோக்க வேண்டும். வரலாற்றில் முதற்தடவையாக ரஷ் யப் படைவீரர்கள் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தினதும் இந் திய ஆயுதப் படைகளினதும் பிரிவுக ளுடன் ஒன்றாக அணிவகுப்பில் கலந்துகொண்டனர். மாஸ்கோ கொண்டாட்டங்களை மேற்குலக நாடுகள் பகிஷ்கரித்த சூழ்நிலையில் 'பிரிக்ஸ்' அமைப்பில் அங்கம் வகிக் கும் ரஷ்யாவும் சீனாவும் இந்தி யாவும் கொண்டிருக்கக்கூடிய கேந் திர முக்கியத்துவ முக்கோணத்தை இந்த அணிவகுப்பு பிரதிபலித்து நின் றது எனலாம்.


இந்தியாவின் வெளியுறவுக் கொள் கையைப் பொறுத்தவரை, அது மாற் றத்துக்குள்ளாகாமல் தொடர்ந்து ஒரே மாதிரியானதாகவே நீடித்து வந்திருக் கிறது. அதன் பெரும்பாலான வெளி யுறவுக் கொள்கை அணுகுமுறைகள் நேருவின் கொள்கைகளை அடி யொற்றியவையாகவே தொடர்ச்சி யாக அமைந்திருக்கின்றன. இராணு வக் கூட்டணிகளாக அமையாமல் பேச்சுவார்த்தைகள் ஊடாக அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கம் கொண்டவையே அந்த அணுகுமுறைகள்.

அந்தக் கொள்கையில் இருந்து பெரியளவில் மாறுபடுவதற்கே மோடி ஆரம்பத்தில் முயற்சித்தார். ஆனால், அவர் அடிக்கடி வெளி நாட்டு விஜயங்களை மேற்கொண்ட தைத் தவிர, வெளியுறவுக்கொள்கை யின் உள்ளடக்கத்தில் எந்தமாற்றமும் ஏற்பட்டதாக இல்லை.

சீனாவுடன் பயனுறுதியுடைய ஊடாட்டத்தை இந்தியா செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டையே தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் இந்தியாவின் அதிகார மேல்நிலை வர்க்கம் பெய்ஜிங்குடன் ஒரு பங்கா ளியாகவே செயற்பட விரும்புகிறது.



கடந்த வருடம் அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் நெருக்கமான நட்புறவை வளர்த்துக் கொள்ள மோடிக்கு இயலுமாக இருந் தது. இதன்விளைவாக ஜனவரியில் இந்திய குடியரசு தினக் கொண்டாட் டங்களில் ஒபாமாவை பங்கேற்கச் செய்யக்கூடியதாகவும் இருந்தது. இந்திய குடியரசு தினக்கொண்டாட் டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முதலாவது அமெ ரிக்க ஜனாதிபதி என்ற பெருமையை ஒபாமா பெற்றார். அவரும் மோடி யும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தென்சீனக் கடலில் கடைப்பிடிக்கின்ற ஆக்கிரமிப்புத் தன்மையான அணுகு முறைகளுக்காக பெயர் குறிப்பிடா மலே சீனாவைக் கண்டனம் செய்தி ருந்தனர்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதியு டன் கொண்டிருக்கும் அத்தகைய நெருக்கமான நட்புறவு, சீன ஜனாதிப தியுடனும் மோடி அதேபோன்ற நட்பு றவை ஏற்படுத்திக்கொள்வதற்கு மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு குறுக்கே நிற்கவில்லை. இந்தியாவின் பிரதமர் என்ற வகையில் மோடி இம் மாத இறுதியில் ஒருவருடத்தைப் பூர்த்தி செய்கிறார். இந்த ஒருவருடத் தில் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கனடா என்று அனேகமாக முக்கியமான நாடுகளின் தலைநகரங்களுக்கு மோடி பயணம் செய்திருக்கிறார். அவரின் விசேட கவனம் பொருளா தாரத்துறை மீதே குவிந்திருக்கிறது.

மோடியின் வெளியுறவுக்கொள்கை அனேகமாக முன்னைய மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை ஒத்ததா கவே தோன்றுகிறது. மோடி சீனா பக் கம் சாய்வார் என்றே ஆரம்பத்தில் நினைத்தார்கள். ஆனால், இதுவரை அவ்வாறு நடைபெறவில்லை. குஜ ராத்தின் முதலமைச்சராக இருந்த போது 2002 கலவரத்தைக் காரணம் காட்டி தனக்கு விசா வழங்க மறுத்த அமெரிக்காவுடனேயே நெருக்க மான உறவை அவர் பேணுவதற்கு நாட்டம் காட்டியதைக் காணக்கூடிய தாக இருந்தது. ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஷுடன் மன்மோகன் சிங் கொண்டி ருந்ததைப் போன்ற நெருக்கமான நட்புறவு மோடிக்கும் ஒபாமாவுக்கும் இடையே இருக்கிறது.

மோடியின் வெளியுறவுக் கொள் கையை ஆய்வுக்குட்படுத்துவதற்கு அவரது ஒரு வருட அணுகுமுறை களோ செயற்பாடுகளோ போதுமான வையல்ல. முக்கியமான சகல தலை நகரங்களுக்கும் சென்று மிகவும் முக்கியமான தலைவர்களையெல் லாம் சந்தித்துவிட்ட மோடி தீர்மா னங்களை உறுதியான முறையில் எடுப்பதற்கான தருணம் வந்துவிட் டது. உலகம் இப்போதும் இருது ருவமயப் பட்டதாகவே இருக்கிறது. ஒரேயொரு வித்தியாசம் பொருளா தார வல்லமையையும் ஆற்றலையும் பொறுத்தவரை ரஷ்யாவின் இடத்துக் குச் சீனா வந்திருப்பதுதான். இரண்டு முகாம்களிலும் கால்களை வைத்துக் கொண்டு சௌகரியமான முறையில் மோடியினால் நடந்து செல்ல முடியு மா? அவ்வாறு அவர் செய்ய வேண் டியிருக்குமானால், அங்கு தான் பிரச்சினை வரும். பலமடைந்துவரும் சீன-ரஷ்ய-ஈரான் உறவை மோடியி னால் சுலபமாக அலட்சியம் செய்ய முடியாது.

மோடிக்கு உடனடியாகத் தேவைப் படுவது பணமே. தேர்தல் பிரசாரங்க ளின் போது, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் பிரகாரம் அபிவி ருத்தியைத் துரிதப்படுத்துவதற்கும் தொழில்வாய்ப்புகளைப் பெருக்குவ தற்கும் அவருக்கு வெளிநாட்டு நேரடி முதலீடு அவசியமாகிறது. ஏற் கனவே உள்நாட்டில் நெருக்குதல் களை அவர் உணரத் தொடங்கிவிட் டார். மேலும் காத்திருக்க அவரால் முடியாது. தொழில்நுட்பமும் அவ ருக்குத் தேவைப்படுகிறது. இதற்காக அவருக்கு ஒவ்வொருவரதும் உதவி யும் ஆதரவும் தேவைப்படுகிறது. விசேடமாக முதலீட்டைச் செய்வ தற்கு பெருமளவு பணத்தைக் கொண் டிருக்கும் சீனாவின் உதவி தேவைப் படுகிறது.

உகந்த முறையில் கையாண்டால் வெளியுறவுக் கொள்கை இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத் துக்கு பாரிய அளவில் உதவியாக அமையும் என்பதை மோடி நன்கு அறிவார். ஆனால், பொருத்தமற்ற முறையில் கையாண்டால் அதே வெளியுறவுக் கொள்கை அபிவி ருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை தடம்பு ரளச் செய்துவிடும். தேசியபாதுகாப் புக் கோணத்தில் நோக்கும் போது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக் காக புவிசார் அரசியல் நலன்களை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசி யம் இந்தியாவுக்கு இல்லை. அமெ ரிக்காவுடன் நெருக்கமான உறவு களை மோடி வளர்த்துக் கொண்டிருக் கின்றபோதிலும், ஜனவரியில் மோடி யும் ஒபாமாவும் ஆசிய-பசுபிக் மற் றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக் கான கேந்திர முக்கியத்துவ நோக்கு ஒன்றை முன்வைத்தபோதிலும், புதிய அபிவிருத்தி வங்கியையும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியையும் ஆரம்பிப்பதில் பெய் ஜிங்குடன் ஒத்துழைத்துச் செயற்படு வதற்கு இந்தியா தயங்கவில்லை. காலநிலை மாற்றம் தொடக்கம் அணு வாயுதப் பரவல் தடுப்பு வரை ஏனைய உலகவிவகாரங்களில் சீனா வுடன் சேர்ந்து செயற்பட புதுடில்லி தவறவில்லை.

சீனாவும் கூட, பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான இந்தியா வின் புராதன கடல்மார்க்கப் பாதை களையும் தொடர்புகளையும் புதுப்பிப் பதற்கான மோடியின் முன்முயற்சி யான Spice route, cotton route and project mausan திட்டத்தையும் சி ஜின் பிங்கின் Belt and Road Initiative ஐயும் இணைப்பதற்கு நெகிழ்ச்சிப்போக்கை வெளிக்காட்டி யிருக்கிறது. கடற்கொள்ளைக்கு எதி ரான செயற்பாடுகளுக்கு மேலதிக மாக இந்து சமுத்திரத்தில் ஆழ்கடல் அகழ்வாராய்ச்சியில் இந்தியாவை பங்காளியாக்குவதற்கு சீனா முன்வந் திருக்கிறது. மேற்காசியாவிலும் ஆபி ரிக்காவிலும் உட்கட்டமைப்பு நிர்மா ணம் தொடர்பிலான கூட்டு முயற்சிக ளில் பிரவேசிப்பதற்கான சாத்தியம் குறித்தும் இரு நாடுகளும் ஆராயக் கூடும்.

வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் நீர்ப்பங்கீடு தொடக்கம் வருகையின் போது விசா வழங்கும் ஏற்பாடுகள் வரையான இருதரப்பு பிரச்சினைக ளைத் தீர்த்துக் கொள்வதிலும் பெய் ஜிங்கும் புதுடில்லியும் ஒத்துழைத்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தியாவின் தொழில்நுட்ப உதவி களை வழங்கி இந்தியாவின் தயாரிப் புத்துறைகளை புதுப்பிப்பதிலும் பங் களிப்பைச் செய்ய சீனா முன்வந்து ஆரம்பகட்டத்தில் 2000 கோடி டொலர்களை முதலிடுவதற்கு இணங்கியிருக்கிறது.

இந்தியா எந்தவொரு நாட்டுக்கும் எதிரானதல்ல என்பதையும் ஒரு குழு நாடுகளை இலக்குவைப்பதற்கு இன் னொரு குழு நாடுகளுடன் இந்தியா இணைந்து கொள்ளப்போவதில்லை என்பதையும் சி ஜின் பிங்கிற்கும் அவரது குழுவினருக்கும் உறுதியாக உணர்த்த மோடி விரும்புகிறார். சமா தானமும் உறுதிப்பாடும் அபிவி ருத்தியும் மாத்திரமே இந்தியாவுக்குத் தேவை. இந்தியா அதன் மக்களின் மேம்பாட்டுக்காகவும் பிராந்தியத்தில் உள்ள மக்களின் நலன்களுக்காகவும் எந்தவொரு நாட்டுடனும் ஒத்துழைத் துச் செயற்படத் தயாராயிருக்கிறது.

இன்னமும் தொடர்ந்து நிலைத்தி ருக்கிற நம்பிக்கைப்பற்றாக்குறை, எல்லைத்தகராறு, இருநாடுகளுக்கும் இடையிலான 1962 போர் ஆகியவற் றின் பின்புலத்தில், மோடியின் மேற் குறித்த நோக்கங்களையும் விருப் பங்களையும் சி ஜின் பிங் எவ்வாறு கணிப்பிடுவார் என்பதை பொறுத்தி ருந்தே பார்க்க வேண்டும். ஏனென் றால், போருக்கு 8 வருடங்கள் முன் னதாக நேருவும் மாஓவும் அவர்களுக்கிடையேயான மனந் திறந்த பேச்சுவார்த்தைகளின் போது இருநாடுகளுக்கும் இடையிலான அபிப்பிராய வேறுபாடுகளை காரண மாகக்கொண்டு சண்டைபிடிக்கப்போ வதில்லை என்று இணங்கிக் கொண் டார்கள். அத்தகையதொரு இணக்கத் திற்குப் பின்பும் கூட, சீனாவும் இந்தி யாவும் மோதிக்கொண்டன. ■

---

*(19ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்து அங் கம் வகிப்பதா இல்லையா என்புதைத் தீர்மானிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதாக கமரூன் வாக்குறுதியளித்திருக்கிறார். ஐரோப்பா தொடர்பில் ஐயுறவுகளைக் கொண்டிருப்பவர்க ளின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் அவர்க ளைத் தன் பக்கம் வென்றெடுப்பதென்பது கமரூனைப் பொறுத்தவரை சமாளிக்கக் கஷ்டமான சவாலாகவே யிருக்கப்போகிறது. ஏனென்றால், ஐரோப்பிய ஒன்றியத் தில் பிரிட்டன் தொடர்ந்தும் அங்கத்துவம் வகிப்பதற் கான எதிர்ப்பு அவரது கட்சிக்குள் இருந்தே பெருமளவு க்கு வருகிறது என்று கூறப்படுகிறது.

ஸ்கொட்லாந்தை பிரிட்டனின் ஒரு பகுதியாக தொடர்ந்தும் வைத்திருப்பதென்பதும் கமரூன் எதிர் நோக்கப் போகின்ற மிகப்பெரிய சவாலாகும். ஸ்கொட் லாந்தில் உள்ள 59 பாராளுமன்ற ஆசனங்களில் 56 ஆச னங்களைக்கைப்பற்றி மகத்தான வெற்றியைப் பெற்றிருக் கும் ஸ்கொட்லாந்து தேசியவாதக் கட்சி லண்டனுடனான ஸ்கொட்லாந்தின் உறவு தொடர்பான பிரச்சினையை மீண்டும் நிகழ்ச்சி நிரலில் முன்னுக்குக்கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்கொட்லாந்தின் சுதந்திரம் தொடர்பில் இன்னொரு சர்வஜனவாக்கெடுப்பு நிச்சயமாக நடத்தப்படவேண்டியி ருக்கும். ஸ்கொட்லாந்து பிரச்சினையே கமரூன் மரபை வரையறை செய்யக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அவ ரின் இரண்டாவது பதவிக்காலம் ஐக்கிய இராச்சியத்திலி ருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதைக் காண்பதில் முடியுமா? அல்லது ஐக்கிய இராச்சியத்தைத் தொடர்ந்து ஒன்றுபடுத்தி வைத்திருப்பதை உறுதிசெய்வதில் முடியுமா? என்பதே கமரூன் முன்னால் தோன்றப் போகும் பெரிய கேள்வி! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்

# இந்தியாவுக்கு மட்டுமல்ல அண்டை நாடுகளுக்கும் மோடி ஒரு உந்துசக்தி

சென்னையிலிருந்து
முத்தையா காசிநாதன்

சந்திரசேகர் குப்பேரி. இந்திய பொருளாதாரத்தின் சந்து பொந்துகள் பற்றி நன்கு அலசும் ஆற்றல் படைத்தவர். தொலைக்காட்சிப் பேட்டிகள் மற்றும் இந்துஸ்தான் சேம்பர் ஆப் காமர்ஸ், ஆந்திரா சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் மற்றும் சொசைட்டி ஆப் ஆடிட்டர்ஸ் போன்றவற்றில் பட்ஜெட் மற்றும் அரசின் பொருளாதார முடிவுகள் பற்றி கருத்துக்களையும், கருத்துரைகளையும் ஆற்றுபவர். பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான அரசு வருகின்ற 26ஆம் திகதி ஒரு வருடத்தை நிறைவு செய்யும் நேரத்தில், இந்தியப் பொருளாதாரம் எங்கே செல்கிறது? மோடி அரசின் கொள்கைகள் வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்கிறதா? அல்லது எதிர்க்கட்சிகள் குறை கூறுவது போல் இது ஒரு கார்ப்பரேட் அரசா என்று பல கேள்விகளை அவர் முன்பு வைத்தோம். சமகாலம் இதழுக்காக மனம் திறந்து பேசினார் சந்திரசேகர் குப்பேரி. இனி அவர்;



**தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமைந்து ஒரு வருடத்தை நிறைவு செய்யப் போகிறது. பொருளாதாரக் கொள்கையில் இந்த அரசுக்கும் முன்பு இருந்த ஐக்கிய முற்போக்கு அரசுக்கும் எந்த அளவிற்கு முன்னேற்றம் இருக்கிறது?**

இரு அரசுகளுக்கும் அணுகுமுறையில் மாற்றம் இருக்கிறது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி 5 சதவீதத்திற்குக் கீழ் என்ற அடிப்படையில் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கியது. ஆனால் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு முதல் வருடத்தில் நாட்டின் வளர்ச்சி 5 சதவீதத்திற்கு மேல் என்று அறிவித்தது. அடுத்த வருடத்திற்கு 7 சதவீதம் என்று அறிவித்துள்ளது. உலக நாடுகள் இப்படித்தான் தங்கள் இலக்கை நம்பிக்கையுடன் நிர்ணயித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி கண்டார்கள். அந்தப் பாதையில் இந்தியா செல்கிறது. வளர்ச்சிப் பாதையை இந்த அரசு நிர்ணயித்த விதமே உலக நாடுகள் மத்தியில் இந்தியாவிற்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. பொருளாதார ஆய்வு மேற்கொள்ளும் உலக அளவிலான நிறுவனங்கள் எல்லாம் இப்போது இந்தியாவைத் திரும்பிப் பார்க்கின்றன. இதுவே மகிழ்ச்சிக்குரிய மாற்றம்தானே!

**பொருளாதாரத்தில் உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய மாற்றங்கள் நடந்திருக்கிறது என்று கூற முடியுமா?**

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் பணவீக்கம் குறிப்பாக சில்லரைப் பணவீக்கம் (Retail inflation) தொடர்ந்து பத்து சதவீதத்திற்கு மேல்தான் இருந்தது. ஆனால் இந்த அரசில் இப்போது ஆறு சதவீதமாகக் குறைந்து விட்டது. கச்சா எண்ணெய் விலை குறைந்தது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு ஒரு ஜாக்பாட் என்று அதற்கு காரணம் கூறுகிறார்கள். அது மட்டும் காரணமல்ல. சென்ற அரசில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பணியை இந்திய ரிசர்வ் வங்கி மட்டும் கவனித்துக் கொண்டது. ஆனால் இப்போது அரசும், ரிசர்வ் வங்கியும் இணைந்து கைகோர்த்து நின்று கவனிக்கிறது. அதுதான் மிக முக்கிய காரணம். பணவீக்கத்தைக் கடன் வழங்கும் கொள்கை தான் முடிவு செய்கிறது- குறிப்பாக வட்டி விகிதங்கள்! ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன் இரு முறை வட்டி விகிதத்தைக் குறைத்துள்ளார். ஆனால் அதற்கு மேல் குறைக்கவில்லை. ஏன்? பொருளாதாரத்தை அரசும், ரிசர்வ் வங்கியும் இணைந்து உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் காரணம். என்னைப் பொறுத்தமட்டில் இந்த அரசின் முயற்சிகள் மிகவும் எளிமையாக இருக்கிறது. அதனால் இந்த வருடத்திற்குள் பணவீக்கம் 6 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்படும் என்று திடமாக நம்பலாம்.

**ஆனால் இன்சூரன்ஸ், இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் அந்நிய முதலீட்டை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளதை எதிர்க்கட்சிகள் குறை கூறுகின்றனவே?**

அந்நிய முதலீடுகளைப் பெறுவது சவால் நிறைந்த பணிதான். ஒப்புக்கொள்கிறேன். எதிர்க்கட்சிகள் குறை கூறத்தான் செய்யும். ஆனால் இந்த அரசு தைரியமாக இன்சூரன்ஸ் துறையில் 26 சதவீத அந்நிய முதலீட்டை 49 சதவீதமாக உயர்த்தியது பாராட்டுக்குரியது. ஏனென்றால் இந்தியாவில் எல்.ஐ.சி. மட்டும்தான் இன்சூரன்ஸில் ஏகபோகமாக இருக்கிறது. அந்நிய முதலீடு மூலம் போட்டி வந்தால்தான் புதிய இன்சூரன்ஸ் திட்டங்கள் வரும். மக்களுக்கு எளிய முறையில் அதே சமயம் புதுப் புது சேவைகள் கிடைக்கும். உதாரணத்திற்கு நாமெல்லாம் சென்னையில் மாருதிக் காரை வைத்திருந்தோம். இன்று சென்னை டெட்ராய்டு என்று அழைக்கப்படுவதால், புதுப் புதுக் கார்களை நாம் வாங்க முடிகிறது. அதே போல் இராணுவத்தில் 49 சதவீத அந்நிய முதலீட்டிற்கு வழி வகுத்தாலும் கூடவே மேக் இன் இந்தியா என்ற கொள்கையை பிரதமர் மோடி கொண்டு வந்து விட்டார். அதனால் இந்தியாவில் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் (Manufacturing Industries) பெருகும். ரயில்வே கட்டுமானங்களில் நூறு சதவீதம் அந்நிய முதலீட்டுக்கு அனுமதி வழங்கும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். இப்படித் தொடர்ச்சியாக உற்பத்தித் துறையில் கவனம் செலுத்துவதால் 'வேலைவாய்ப்பு', 'திறமை', 'நாட்டிற்கு வளர்ச்சி' மூன்றும் கிடைக்கிறது. அதனால் இந்தியாவிற்குள் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது தவறில்லை.


**முன்பு இருந்த நிதியமைச்சர் ப.சிதம்பரத்திற்கும், இப்போதுள்ள நிதி அமைச்சர் அருண் ஜேட்லிக்கும் என்ன வித்தியாசம் காண்கிறீர்கள்?**

பொருளாதாரக் கொள்கைகளை மக்களுக்கு சிம்பிளாக விளக்குகிறார். இன்சூரன்ஸின் பயன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்றால் அதில் அந்நிய முதலீடு தேவை என்கிறார். எல்.ஐ.சிக்கு போட்டி வேண்டும். போட்டி இருந்தால்தான் தொழில் முனைய வருவோர் ஆர்வம் காட்டுவார்கள் என்பதை ரத்தினச் சுருக்கமாகச் சொல்கிறார். வெளிப்படையான வரி விதிப்பு முறைக்கு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் தேவை என்பதை பாமரனுக்கும் புரியும் அளவிற்குச் சொல்கிறார். வரி அதிகமாக இருக்குமே என்கிறார்கள். ஆனால் ஒரேயொரு வரி தான் இருக்கும். பன்முக வரி இருக்காது என்பதை இச்சட்டத்தை குறை கூறுவோர் புரிந்து கொள்ள வேண்டும். வரி சம்பந்தப்பட்ட வழக்குகள் குறையும். இன்றைக்கு அமெரிக்கா தவிர மற்ற நாடுகளில் எல்லாமே சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் அமுலில் இருக்கிறது. இங்கிலாந்தில் வரி எவ்வளவு தெரியுமா? 20 சதவீதம்! சிங்கிள் விண்டோவ் க்ளியரன்ஸ் தொழிற்சாலைகள் அமைப்பதில் உள்ளபடியே இப்போது முக்கிய பங்காற்றுகிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால் நமக்கு அறிவு இருக்கிறது. ஆனால் புத்தருக்கு அந்த அறிவை எளிமையாக மக்களுக்கு விளக்கும் திறமை (Wisdom) இருந்தது. நமது நிதியமைச்சர் அருண் ஜெட்லியை நான் அப்படித்தான் பார்க்கிறேன்.

**கறுப்புப்பணம் மீட்புப் பணிகள் எப்படியிருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?**

நிதி நிலை அறிக்கையில் இது தொடர்பாகக் கடுமையான சட்டம் கொண்டு வரப்படும் என்று கூறி அப்படியே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் சாமான்ய மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவர். மேக் இன் இந்தியா என்பதை எந்த நாட்டிற்குப் போனாலும் ஸ்டிராங்காக வெளிப்படையாகப் பேசுகிறார். அண்டை நாடுகளுடனான உறவு வலுவாக இருக்க வேண்டும் என்று ஆர்வம் காட்டுகிறார். இந்தியா வல்லரசு நாடாக மாற வேண்டும் என்ற நேர்மையான சிந்தனை அவருக்கு இருக்கிறது. அந்த நேர்மையும், தைரியமும் கறுப்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணத்தை மீட்பதிலும் தெரிகிறது. ஏனென்றால் அரசியல் வாதிகளும், தொழிலதிபர்களும் அதிகம் விரும்பாத இந்த நடவடிக்கையைத் தைரியமாக எடுக்கிறாரே அதற்காகவே பிரதமரை நாம் பாராட்ட வேண்டும்.

**பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்ற பிறகு வர்த்தக ரீதியாக அண்டை நாடுகளுடனான உறவு எப்படியிருக்கிறது?**

அடுத்த ஐந்து வருடத்தில் மூன்று டிரில்லியன் டொலர் முதலீட்டை ஜப்பான் இந்தியாவில் செய்யப் போகிறது. அதற்கான ஒப்பந்தத்தை பிரதமர் அந்த நாட்டுக்குச் சென்ற போது போட்டிருக்கிறார். வாடா ராஜா என்று இந்தியாவிற்குள் வந்ததும் விசா வழங்கும் திட்டம் ஏக வரவேற்பை வெளிநாட்டவர் மத்தியில் பெற்றிருக்கிறது. சீனாவில் உள்ள ஜியோனி கம்பெனி நாங்கள் இந்தியாவில் முதலீடு செய்யத் தயார் என்று முன்வருகிறது. அமெரிக்காவுக்கு பிரதமர் மோடி சென்ற போது அங்குள்ள பத்திரிகைகளில் மோடியின் விஜயம் பற்றிய செய்தியை முதல் பக்கத்தில் வெளியிட்டன. அடுத்து அமெரிக்க அதிபர் ஒபாமா இந்தியா வந்தார். அவர் அணுசக்தி ஒப்பந்தம் போட வந்தார் என்றாலும், உலக நாடுகளில் உற்பத்தித் துறையின் அடுத்த மையம் வருங்காலத்தில் சீனா அல்ல. இந்தியாதான் என்பதை அவர் உணர்ந்தது தான் காரணம். உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் பிரதமர் மோடி மிகச்சிறந்த மார்கெட்டிங் ஜெனரல் என்றே நான் சொல்வேன்.

**இந்தியாவிற்கும், இலங்கைக்குமான உறவு பற்றி உங்கள் கருத்து என்ன?**

இலங்கை மட்டுமல்ல இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்துமே பிரதமர் மோடியின் மீது அன்பு காட்டுகின்றன. உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். மேற்கு இந்தியத் தீவு கிரிக்கெட் அணி இந்தியாவில் விளையாட முடியாது என்று கூறிவிட்டுப் பாதியில் திரும்பிப் போய் விட்டார்கள். அப்போது அந்த இடத்தை நிரப்ப இலங்கை கிரிக்கெட் அணி முன்வந்தது. இந்தியாவிற்கு வந்து விளையாடியது. கிரிக்கெட் என்று இதைப் பார்க்காமல் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் பிரதமர் மோடி பதவியேற்ற பிறகு அப்படியொரு நட்புணர்வு மலர்ந்திருக்கிறது என்றுதான் நாம் பார்க்க வேண்டும். இந்தியாவிற்கு மட்டுமல்ல, அண்டை நாடுகளுக்கும் மோடி இன்றைக்கு ஒரு உந்து சக்தி!


**ஆனால் கார்ப்பரேட்டுகளுக்காக பிரதமர் மோடி அரசு நடத்துகிறார் என்ற குற்றச்சாட்டு கடுமையாக உள்ளதே?**

இன்றைக்குப் படித்துவிட்டு வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்கள் 10 சதவீதம் இந்தியாவில் இருக்கிறார்கள். உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள் அந்நிய முதலீட்டாலோ அரசின் கொள்கையாலோ இந்தியாவில் உருவானால் நாட்டிற்கு வளர்ச்சி கிடைக்கும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். 'டிஜிட்டல் இந்தியா', 'மேக் இன் இந் தியா', 'ஸ்கில்டு இந்தியா' என்று பல்வேறு புதிய கொள்கைகளை வகுத்து இந்த அரசு செயல்படுகிறது என்றால் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை அதிகரிப்பதற்குத்தானே தவிர வேறு ஒன்றும் நோக்கமில்லை. ஆகவே கார்ப்பரேட்டுகளுக்கு உதவுவது என்பது அவர்கள் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போக அல்ல. இந்த நாட்டிற்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டும். வளர்ச்சி பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன்தான் என்பதை இப்படிக் குறை கூறும் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். இதனால், ஒரு நாட்டில் கல்வி, திறமை, வளர்ச்சி எல்லாம் இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கப் போவது மக்கள்தானே தவிர கார்ப்பரேட்டுகள் அல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். ஆகவே வளர்ச்சியை இரசிக்கும் குணமுடையவர்கள் யாராக இருந்தாலும் இந்த அரசின் பொருளாதார நடவடிக்கைகள் மீது மனப்பூர்வமாக நம்பிக்கை வைப்பார்கள் என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# ஐரோப்பாவிற்குள் நுழையும் ஆபிரிக்க, மத்தியகிழக்கு அகதிகள்



எஸ்.நிஹால் சிங்

நாம் இன்று ஒன்றிணைந்த உலகில் வாழ்கிறோம். ஒன்றே உலகம் என்றும் நாடுகள் யாவும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுவதுண்டு. இந்தக் கூற்று ஐரோப்பியர்களுக்கு ஆச்சரியம் தரும் வகையில் அன்றாட வாழ்வில் உணர்த்தப்படுகிறது. ஆபிரிக்காவில் இருந்தும் அரபு நாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான அகதிகள் ஐரோப்பிய நாடுகளின் எல்லைக்குள் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் குவியும்போது ஐரோப்பியர்கள் 'ஒன்றே உலகம்' என்ற இந்த நிதர்சனத்தினைக் கண்முன்னே காண்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளின் குறிப்பாக வடக்கு ஐரோப்பாவின் நல்வாழ்க்கையை நாடிவரும் மக்களுக்கு அடைக்கலம் தரும் புகலிடமாக அக்கண்டம் உள்ளது. இந்தியர்கள் பலர் இந்த அதிர்ஷ்டத்தால் நன்மை பெற்றனர்.

ஆனால், இன்று ஐரோப்பா எதிர்நோக்கும் பிரச்சினை பொருளாதார வாய்ப்புக்களை நாடிவரும் அகதிகளால் ஏற்பட்டதன்று. தங்கள் நாடுகளைச் சின்னாபின்னப்படுத்தும் போர்களில் இருந்து தப்பிக்கொள்ளவே இந்த அகதிகள் இங்கு வருகிறார்கள். ஒரு அர்த்தத்தில் செய்த வினைக்குப் பயன் இப்போது கிடைக்கிறது போலும். ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் மேற்கு ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் இன்று ஏற்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யுத்தங்களுக்கு தமது பங்களிப்பை வழங்கியிருந்தன. லிபியா சிறந்த தொரு உதாரணம். இங்கு இப்போது இரு போட்டி அரசாங்கங்கள் உள்ளன. இவற்றை விட போட்டி ஆயுதக்குழுக்கள் நாட்டின் பல்வேறு இடங்களைத் தமதாக்கி ஆயுதமுனையில் ஆட்சி செய்கின்றன.

புவியியல் ரீதியில் அயல்நாடாக உள்ள இத்தாலி இந்த யுத்தங்களினால் இடம் பெயரும் மக்களின் பிரச்சினையால் அழுந்துகிறது. இத்தாலி தனது சுமையை பிறரோடு பகிர்ந்து கொள்ளும் எண்ணத்துடன் ஐரோப்பிய யூனியனின் உதவியை நாடியது. ஒரு உச்சி மகாநாடு கூட நடைபெற்றது. இத்தாலிக்கு அகதிகள் பராமரிப்புக்கான நிதியை மூன்று மடங்காக உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. இத்தாலி தன் பிரச்சினையை தானே சமாளிக்க வேண்டும். இங்கு தான் இதன் முரண்நகை வெளிப்படுகிறது. செல்வந்த நாடுகள் நிதியைக் கொடுக்கத்தயார். விமானங்களையும் ஹெலிகொப்டர்களையும் அகதி நிவாரணப் பணிக்கு வழங்கவும் முன் ஒவருகின்றன. ஆனால், அகதிகளைத் தங்கள் நாட்டுக்குள் ஏற்க அவை தயாரில்லை. இந்த நாடுகளின் உள்நாட்டு நிலைமையும் இப்போது மாறிவிட்டது. பிரித்தானியாவிலும் பிரான்ஸிலும் தீவிர வலதுசாரிக் கட்சிகள் எழுச்சி பெற்றுள்ளன. இக்கட்சிகள் நெதர்லாந்து, ஆஸ்திரியா, ஜேர்மனி ஆகியவற்றிலும் மீள்எழுச்சி பெற்றுள்ளன. இந்நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கநிலை காரணமாக மையநீரோட்டக் கட்சிகளின் பலம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் உதிரியான வலதுசாரிக்கட்சிகள் புது எழுச்சி பெறுகின்றன. பிரித்தானியாவில் ஒரு விஷேட பிரச்சினை உள்ளது. அந்நாட்டவர்களில் பலர் ஐரோப்பிய யூனியன் உறவை முறித்துக்கொள்ள வேண்டும் என்று சிந்திக்கிறார்கள்.

ஜேர்மனியில் தீவிர வலதுசாரிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்ட போதிலும், அந்நாடு மட்டும் அகதிகளை ஓரளவு ஏற்றுக்கொண்டு தாராளமாக நடந்துள்ளது. பிரித்தானியா வெறுமனே முடியாது என்று மட்டும் கூறி அகதிகளை ஏற்பதை மறுத்துவிட்டது. ஏனைய பல நாடுகள் தெளிவான பதிலைக் கூறாமல் மழுப்பிக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பா செல்லும் அகதிகளில் பெரும்பான்மையினர் ஜேர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கே செல்ல விரும்புகின்றனர். சுவீடன் நாடும் அகதியில் ஒரு பகுதிகளில் ஏற்க முன்வந்துள்ளது.

ஐரோப்பிய யூனியன் சரிந்து விழப் போகிறது. தள்ளாடிக் கொண்டிருக்கிறது என்ற கருத்தில் உண்மையில்லை. பிரித்தானியா தனக்கு விசேட சலுகைகளைக் கேட்கிறது. யூனியன் அங்கத்துவ நாடுகளில் பலவற்றில் யூனியனுக்கு எதிர்ப்புணர்வுள்ளது என்றால் அதற்கான காரணம் உள்ளது. யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் ஒவ்வொரு தனித்தனி நாடும் பொருளாதாரச்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செழிப்பை நோக்கிச் சென்றன. இப்போது பொருளாதார விடயங்களை யூனியனிடம் ஒப்படைப்பதில் தயக்கம் உள்ளது. மக்களிடையே அதிருப்தி உள்ளது. தேசியவாதக் கட்சிகள் இந்த அதிருப்தியைப் பயன்படுத்திப் பிரசாரம் செய்கின்றன.

அரபு நாடுகளில் இருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் அகதிகள் வருவதைத் தடுத்து நிறுத்துதல் கடினம். காரணம் அந்நாடுகளில் விரைவில் சமாதானம் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் குறைவு. அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள முயற்சித்தன. இருள் சூழ்ந்த





எதிர்காலம் ஒன்றில் தோன்றி மறைந்த நம்பிக்கை ஒளிக்கீற்று இது. இம்முயற்சி வெற்றியளித்தால் சவூதி அரேபியா, ஈரான் என்ற இரு பிராந்திய வல்லரசுகளின் போட்டியில் புதிய பரிமாணங்களை இது தோற்றுவிக்கும். இன்றைய குழப்ப நிலையை விட புதியதொரு சூழல் உருவாக்கப்படுதல் நன்மை தருவதே.

இஸ்லாமிய அரசு (IS) தோற்றம் பெற்றதும் அதன் மறுவடிவங்களான ISIS, ISIL தோன்றியதும் அமெரிக்க இராணுவம் மத்திய கிழக்கு களத்திற்கு மீண்டு வரும் தேவையை உண்டாக்கியது. அண்மைக்காலச் சண்டைகள் காரணமாக ஷியா-சுன்னி பிரிவுகளுக்கிடையிலான மோதல் தீவிரவடிவம் பெற்றுள்ளது. அமெரிக்கா ஈராக்கில் தலையீடு செய்தமை ஈரானுக்கு ஒரு வகையில் நன்மையாகப் போய்விட்டது. ஏனெனில், ஈராக்கில் சுன்னிகளின் ஆதிக்கம் ஒழிந்து அரசு அதிகாரம் ஈரானுக்கு சார்பான ஷியா பிரிவினர் கைக்குப் போய்ச் சேர்ந்தது. இதனால் இன்னும் சுன்னிப் பிரிவினரில் பலர் இஸ்லாமிய அரசுப்படைகளுடன் இணைந்து கொண்டனர். ஷியா ஆயுதக்குழுக்கள் சுன்னிகளை வேட்டையாடும் நிலை ஏற்பட்டது.

நாட்டை விட்டு நீங்கும் அகதிகள் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் உள்ளனர். உள்நாட்டில் ஏற்பட்ட அதிகாரப் போட்டி அந்நிய சக்திகளை ஊடுருவச் செய்து நிலைமையை மோசமாக்கியுள்ளது. ஐரோப்பாவில் வலதுசாரிச் சக்திகள் பலம் பெறுகின்றன. அங்கு பொருளாதார மந்தம் நீங்கிச் செழிப்பு நிலை ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டாலும் இதற்குக் காலம் பிடிக்கும்.

அகதிகளின் எதிர்காலம் என்ன? அகதிகளைப் பணத்திற்காக ஏற்றி இறக்கும் தரகர்களைக் கண்காணிப்பது ஒரு வழி. ஆனால், இதனைச் செய்வதற்கு லிபியா போன்ற நாடுகளில் அரசாங்கமே இல்லை. எல்லைப் பகுதிகளைக் காவல் காக்கும் வழிகள் இல்லை. ஈராக், சிரியா போன்ற நாடுகளில் உள்ள கொந்தளிப்பு நிலை கடத்தல்காரர்களுக்கு மிகவும் வாய்ப்பானது. ஐ.நா.சபை எட்ட நின்று பார்த்துக் கொண்டிருக்கிறது. எல்லா முக்கிய உலகப் பிரச்சினைகளிலும் நடந்தது போல் வல்லரசுகள் தமது இலக்குகளை அடையும்வரை ஓய்வதில்லை. பின்னர் களைத்துப் போன நிலை ஏற்பட்டால் ஐ.நா. புகுந்து கொள்ளலாம். ■

***(நிஹால் சிங் -இந்தியாவின் சிரேஷ்ட பத்திரிகையாளர்)***

---

***(66ஆம் பக்கத் தொடர்ச்சி...)***

களவு செய்யவும் துணிந்து விட்ட மாணவர் சமூகம் உருவாகியுள்ளது. போதை வஸ்துக்களை பாவிக்கும் கலாசாரமும் பரவி வருகிறது.

இந்தநிலைவரங்கள் எல்லாம் சமகாலக் கல்வியின் தேவை, பயன்பாடு பற்றிய மீள்சிந்தனையை வேண்டி நிற்கின்றன. நமது ஆசிரியப் பணியின் செயல்முறை பற்றிய சுயவிசாரணையும் தவிர்க்க முடியாமல் உருவாகின்றது. எவ்வாறாயினும் நாம் இலக்கு நோக்கிப் பயணிக்கக்கூடிய வாழ்க்கை பற்றிய தரிசனத்தைப் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அப்படியானால் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் மாற்றம் வேண்டும். இதற்குத் துணை செய்யும் வகையில் 'எம்மை வாழ வைத்தவர்கள்' எனும் நூல் இனங்காணப்பட வேண்டும். அந்த நூல் தரும் வாசிப்பு நமக்கான, மாணவர்களுக்கான எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைக் கட்டி வளர்க்க உதவட்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்



மிச்சேல் ஜான்சென்

# பாலஸ்தீனம் எதிர்நோக்கும் கடுமையான சவால்



பாலஸ்தீனர்கள் ஒரு மக்கள் சமூகம் என்ற வகையிலும் ஒரு தேசம் என்ற வகையிலும் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பாரிய சவாலை எதிர்நோக்குகிறார்கள். ஆனால், 1967ஆம் ஆண்டு கிழக்கு ஜெருசலேத்தையும் மேற்கு ஆற்றங் கரை மற்றும் காசா பள்ளத்தாக்கையும் இஸ்ரேல் ஆக்கிரமித்த பிறகு அவர்கள் கடைப்பிடித்த மூன்று மார்க்கங்களில் ஒன்று மாத்திரமே இப்போது அவர்களின் தெரிவுக்குரியதாக விட்டுவைக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச ஆதரவைத் திரட்டிக்கொண்டு அமைதியான எதிர்ப்பியக்கத்தை முன்னெடுப்பதே அத்தெரிவாகும்.

ஆக்கிரமிப்புக்கு எதிராக பாலஸ்தீனர்கள் (அரபு மொழியில் 'இன்ரிபாடா' என்று அழைக்கப்படும்) இரு கிளர்ச்சிகளை நடத்தினார்கள். 1987-93 காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட முதலாவது கிளர்ச்சியின்போது (Intifada of the stone) அவர்கள் கற்களையே ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள். பிறகு இடம்பெற்ற இரண்டாவது கிளர்ச்சியின்போது துப்பாக்கிகளும் குண்டுகளும் (Intifada of the gun and bomb) பயன்படுத்தப்பட்டன. முதலாவது கிளர்ச்சி இரு அரசுகளைக் கொண்ட தீர்வு (Two-state solution) குறித்து பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேலை நிர்ப்பந்தித்தது. இஸ்ரேலுக்கு அருகாக பாலஸ்தீன அரசொன்றைத் தோற்றுவிப்பதே அந்தத் தீர்வாகும். அத்தகைய பாலஸ்தீன அரசு உருவாகத் தவறியதையடுத்து அதற்குப் பதிலடியாகவே இரண்டாவது கிளர்ச்சி இடம்பெற்றது.

பரந்தளவிலான மூன்றாவது ஒரு 'இன்ரிபாடா' முன்னெடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. பாலஸ்தீனர்கள் பாரிய ஆர்ப்பாட்டங்களை அல்லது எதிர்ப்பியக்கங்களை ஏற்பாடு செய்வதைத் தடுக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக கடுமையான கண்காணிப் புடன் கூடிய நிலப்பகுதிகளாக (ஆக் கிரமிக்கப்பட்ட) பாலஸ்தீன பிராந்தி யங்களை இஸ்ரேல் பிரித்து வைத்திருக்கிறது என்று இஸ்ரேலிய சமாதான செயற்பாட்டாளரான ஜெவ் ஹால்பர் கூறினார். 'சகல இடங்க ளிலும் இஸ்ரேலிய இராணுவம் நிற்கி றது. இஸ்ரேலின் உள்நாட்டு புலனா ய்வுச் சேவையான 'ஷின் பெற்'றுடன் ஒத்துழைத்துச் செயற்படுகின்ற பல பாலஸ்தீனர்களும் இருக்கிறார்கள். 8-20 பிரிவு (unit 8-20) என்று அழைக்கப்படுகின்ற இஸ்ரேலிய புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய 43 உயர்மட்ட புலனாய்வு அதிகாரி கள் அதிலிருந்து விலகிவிட்டார்கள். ஏனென்றால், தங்களது பணி பாலஸ் தீனர்களின் தனிப்பட்ட வாழ்வில் ஊடுருவல் செய்வதாக அமைவதை அவர்கள் விரும்பவில்லை என்றும் ஹால்பர் சுட்டிக்காட்டுகிறார்.

தலைமைத்துவமின்றி 'இன்ரி பாடா' இடம்பெறமுடியாது. பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படு வதற்கான வாய்ப்பு இல்லையென்ற போதிலும் கூட, கிளர்ச்சியொன்றை தற்போதைய பாலஸ்தீன தலைமைத் துவம் விரும்புவதாக இல்லை என்று பாலஸ்தீன வட்டாரங்கள் கூறுகின்ற ன.



போராட்டம் 'Lone wolf Intifada' அதாவது மற்றவர்களின் உதவி யின்றி அல்லது மற்றவர்களுடன் சேராமல் தனியாக நடத்துகின்ற கிளர்ச்சி என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சம்பவங்களின்போது பலியாவோரினதும் காயமடைவோ ரினதும் எண்ணிக்கை அதிகரித்திருக் கிறது. 2007 ஆம் ஆண்டுக்குப் பிறகு பெரும் எண்ணிக்கையான பாலஸ் தீனியர்கள் கடந்த வருடம் இறந்தி ருக்கிறார்கள். 2005 ஆம் ஆண்டுக் குப் பிறகு பெருமளவு பாலஸ்தீனர் கள் கடந்த வருடம் காயமடைந்திருக்கிறார்கள். கடந்த வருடம் ஜூனில் மூன்று இஸ்ரேலிய இளைஞர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக பாலஸ்தீன பையன் ஒரு வனை இஸ்ரேலியர்கள் எரித்துக் கொன்றதையடுத்து வன்முறை உச்சத் துக்கு வந்தது. 'பாலஸ்தீனர்கள் சுட்டுக்கொல்லப்பட வேண்டிய எதிரி களாகவே இஸ்ரேலியர்கள் நோக்குகி றார்கள். பாலஸ் தீனர்களைக் கொலை செய்தால் எந்த விதமான தண்டனைக்கும் ஆளாகப் போவதில்லை. எவருக்கும் பொறுப் புக் கூறவேண்டியதில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். பாலஸ்தீன இளைஞர்கள் தங்கள் எண்ணப்படி

பாலஸ்தீனர்கள் போன்று பாவனை செய்துகொண்டு இஸ்ரேலிய படை வீரர் குழுக்கள் பாலஸ்தீன நகர்களுக் குள்ளும் கிராமங்களுக்குள்ளும் பிர வேசித்து பாலஸ்தீனர்களை கைது செய்கின்றன. அத்துடன் சுட்டுக் கொல்கின்றன. பெரிய கொந்தளிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன அதி காரசபையின் புலனாய்வுப் பிரிவின ரும் பொலிஸ் படைகளும் ஒத்துழை த்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கின் றன.

'செய்மதிகள், ஆளில்லா விமானங் கள் மற்றும் பலூன்கள் மூலமாக கண் காணிப்பு மேற்கொள்ளப்படுவதால் எதுவுமே தெரியாமல் இருப்ப தில்லை' என்று ஹால்பர் கூறினார்.

இந்த இரு தெரிவுகளுமே இல்லாத நிலையில், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பி னாலும் திறமையற்ற தங்களது தலை மைத்துவத்தாலும் விரக்திக்கும் அவ மதிப்புக்குமுள்ளாகியிருக்கும் பாலஸ்தீன இளைஞர்கள் கத்திக ளையும் துப்பாக்கிக் குண்டுகளையும் வாகனங்களையும் பயன்படுத்தி இஸ் ரேலிய படைவீரர்களையும் குடிமக்க ளையும் தாக்கிக் காயப்படுத்துகிறார் கள், கொலைசெய்கிறார்கள். இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயற்பட்டு மனிதத் தன்மையிழந்து பதிலடி கொடுக்கிறார்கள்' என்று ஜெரூசலேம் சிந்தனைக் குழாமின் (Jerusalem Think Tank) பணிப் பாளரான மஹ்தி அப்துல் ஹாடி கூறு கிறார்.

காசா பள்ளத்தாக்கிற்கு வெளியே 2013ஆம் ஆண்டு 39 இஸ்ரேலியர் களும் 92 பாலஸ்தீனர்களும் கொல லப்பட்ட அதேவேளை, 2014 ஆம் ஆண்டு 105 பாலஸ்தீனர்களும் 87 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டார் கள். பலியாகும் இஸ்ரேலியர்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற திடீர் அதிகரிப்பு கவனத்தை ஈர்ப்பதாக இருக்கிறது. இஸ்ரேலியர்கள் துப் பாக்கிப்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதை இதற்குக் காரணமாகக் கூறமுடியும்.

'இஸ்ரேலிய அரசாங்கத்துக்கு பெஞ்சமின் நெதான்யாகு தலைமை தாங்கும்வரை முன்னேற்றமெதுவும் ஏற்படப்போவதில்லை. அரசியல் சமாதானமும் பொருளாதாரச் சமாதா னமும் தோன்றப்போவதில்லை. அமெரிக்கர்களின் துணையுடனான பேச்சுக்கள் செத்துப்போய்விட்டன. 1993 ஒஸ்லோ சமாதான முயற்சிகள் மேற்கு ஆற்றங்கரையில் 62 சதவீத மான நிலத்தையும் 92 சதவீதமான நீரையும் 100 சதவீதமான கனிமங்க ளையும் இஸ்ரேல் கைப்பற்றுவதற்கு வழிவகுத்த ஏமாற்று நாடகம் போல் அமைந்துவிட்டன. சகல நுழைவுவழி களையும் நடமாட்டத்தையும் இஸ்ரே லியர்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத் திருக்கிறார்கள்' என்று முன்னாள் பாலஸ்தீன வெளியுறவு அமைச்சர் நபில்ஷாத் கூறினார்.

'தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவினால் முன்னெடுக்கப் பட்டதைப் போன்ற அகிம்சை எதிர்ப் பியக்கம் மாத்திரமே பாலஸ்தீனர்க ளுக்கு இப்போது இருக்கக்கூடிய தெரிவாகும். தங்களது கொள்கை களை மாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கக் கூடியதும் ஆக்கிரமிப்பைவிடச் சிறந் தது சமாதானம் என்று அவர்களைச் சிந்திக்க வைக்கக்கூடியதுமான இன ஒதுக்கலுக்கு எதிரான போராட்டமே பாலஸ்தீனர்களின் நோக்காக இருக்க வேண்டும்' என்று மண்டேலாவின் ஒரு உருவப்படத்தைச் சுட்டிக்காட்டி யவாறு ஷாத் வலியுறுத்தினார்.

## பகிஷ்கரிப்பு இயக்கம்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மிகப்பெரிய பிரிவான பதாஹ்வின் வெளியுறவு விவகார ஆணைக்குழு வின் தலைவர் என்ற வகையில் ஷாத் தின் இப்போதைய பணி ஐரோப்பா வின் பாராளுமன்றங்களில் அங்கம் வகிக்கும் அரசியல்கட்சிகளுடன் உறவை வளர்ப்பதற்கான முயற்சி களை முன்னெடுப்பதாகவே இருக் கின்றது. இஸ்ரேலை பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் அந்த நாட்டில் செய்யப்படும் முதலீடுகளைக் குறை த்து தடைகளையும் விதிக்கவேண்டு மென்றும் கோரிக்கையை முன் வைத்து மேற்கொள்ளப்படுகின்ற பிரசார இயக்கத்தை ஆதரிக்குமாறும் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கு மாறும் ஐரோப்பிய அரசாங்கங்களை அந்தக் கட்சிகளைக் கொண்டு நிர்ப் பந்திக்கச் செய்வதற்காகவே இந்த முயற்சிகளை ஷாத் மேற்கொள்கி றார்.

பாலஸ்தீனர்கள் இதுவரை ஆயுதப் போராட்டம், இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் என்ற இரு கட்டங்க ளைக் கடந்திருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள், சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் மற்றும் சர்வதேச சட்டங்கள் ஊடாக தங்கள் பிரச்சினையைச் சர்வ தேச மயமாக்குவதிலேயே அவர்கள் இப்போது கவனத்தைச் செலுத்துகி றார்கள். எங்களுக்கு எந்தத் தெரிவை யும் விட்டுவைக்கிறார்கள் இல்லை. அவரவர் நிலைப்பாடுகளின்படி செயற்பட அனுமதித்தால் இஸ்ரேலி யர்களும் பாலஸ்தீனர்களும் முன் னோக்கி நகரப் போவதில்லை. ஒரு தலைப்பட்சமாகத் திணிப்புகளைச் செய்வதற்கே இஸ்ரேல் அதன் பலத் தைப் பயன்படுத்தும். சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்திற்கும் பாதுகாப் புச் சபைக்கும் செல்வது மாத்திரமே எம்மால் செய்யக்கூடிய காரியமாகும் என்று மேற்கு ஆற்றங்கரையின் பிர் செய்ற் பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர் ஹசன் கதிப் கூறினார்.

பாலஸ்தீனர்கள் பயன்படுத்த வேண்டிய இன்னொரு ஆயுதம் இருக்கிறது. அவர்களின் இலட்சியத் துக்கு உலகில் இருக்கின்ற பாரிய அனுதாபமே அந்த ஆயுதமாகும் என்று ஹால்பர் சுட்டிக்காட்டினார். உலகளாவிய பொது மக்கள் அபிப் பிராயத்தைப் பயன்படுத்துவதற்கு முழுமையான முயற்சிகளைப் பாலஸ்தீனர்கள் முன்னெடுப்பார்க ளேயானால், தங்களுடன் இணக்கப் பாட்டுக்கு வருவதற்கு இஸ்ரேல் மீது கடுமையான நெருக்குதல்களை அவர்களால் கொண்டுவரமுடியும். வெற்றியடைந்துவிட்டதாகவும் பிரச் சினை முடிந்துவிட்டதாகவும் இஸ் ரேல் நினைக்கிறது.


பாலஸ்தீனத்திற்கான போராட்டம் முடிவடைந்து விடவில்லை என்பதை யும் இந்தப் பிரமாண்டமான பணியை 'இன்றிபாடா' இல்லாமல் சாதிக்க முடியுமென்பதையும் நிச்சயப்படுத் திக் கொள்ள வேண்டியது பாலஸ்தீ னர்களின் பொறுப்பாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்

# ருத்ரய்யா; ஓய்ந்த அலை

இராகவன்



தனது வாழ்நாளில் என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய படைப்பொன்றினையாவது தந்திருப்பவன்தான் மெய்யான கலைஞன். ருத்ரய்யாவும் அந்த வகையில் மெய்க்கலைஞன்தான். அவர் இயக்கிய முதல் திரைப்படமான 'அவள் அப்படித்தான்' வெளிவந்து முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்றும் அத்திரைப்படத்தைப் போன்று இன்னொரு திரைப்படத்தை எடுக்க தமிழ்த்திரைப்பட இயக்குநர்கள் துணியவில்லை. எதிர்காலத்திலும் அது நிகழச் சாத்தியமில்லை. இந்த வகையில் 'அவள் அப்படித்தான்' என்றென்றும் நிலைத்திருக்குமொரு படைப்புத்தான் என்பதில் சந்தேகமில்லை.

பெரும்பாலான திரைப்பட இயக்குனர்கள் வாசிப்பில் நாட்டம் கொள்வதில்லை. ஆனால் ருத்ரய்யா ஒரு தீவிர இலக்கிய வாசகராய் இருந்தார். ஜெயகாந்தன், வண்ணநிலவன், தி.ஜானகிராமன் என ருத்ரய்யாவின் வாசிப்புப் பரந்துபட்டிருந்தது. மேலும் எழுத்தாளர் வண்ணநிலவனோடு ருத்ரய்யா, நல்லுசாமி போன்றோருக்கு நேரடிப்பழக்கமுமிருந்தது. படமெடுக்கத் தீர்மானித்த போது ருத்ரய்யா தி.ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' என்ற புதினத்தைக் கமலஹாசனைக் கதாநாயகனாக நடிக்கவைத்துத் திரைப்படமாக்க விரும்பினார். தி.ஜானகிராமன் அக்காலப்பகுதியில் டில்லியில் அகில இந்திய வானொலியில் பணிபுரிந்து கொண்டிருந்தார். திரைப்படமாக்குவதற்கான அனுமதியைப் பெற ருத்ரய்யா சார்பில் வண்ணநிலவன் டில்லிக்குப்போய் தி.ஜானகிராமனைச் சந்தித்தார்.

தி.ஜானகிராமன் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளுக்குமான 'அம்மா வந்தாள்' புதினத்தைத் திரைப்படமாக்கும் அனுமதியை 20000 ரூபாவிற்குத் தரச்சம்மதித்ததின் பேரில் வண்ணநிலவன் அவருக்கு முற்பணமாக 5000 ரூபாவினைக் கொடுத்துவிட்டு வந்தார். 'அம்மா வந்தாளை'த்திரைப்படமாக்கும் போது கமலஹாசனை நாயகனாக்கியதால் (நாயகனாகியதால்) படப்பிடிப்பில் ஒரு சிக்கல் தோன்றியது. புதினத்தில் இடம்பெறும் மறைப்பள்ளி தொடர்பான காட்சிகளைப் படமாக்குவதற்குக் கர்நாடகாவிலுள்ள சிருங்கேரி மடத்திற்குச்செல்ல வேண்டியிருந்தது. கமலஹாசன் அப்போது பல திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருந்ததால் அம்மா வந்தாளின் படப்பிடிப்பிற்குத் திகதி ஒதுக்க அவரால் முடியவில்லை. இதனால் ருத்ரய்யா படப்பிடிப்பை நிறுத்திவைத்தார். உள்ளூரிலேயே அதாவது சென்னையிலேயே படப்பிடி ப்பைச் செய்யக்கூடிய கதை ஏதாவது இருந்தால் அதைப்படமாக்கும் போது தனக்கு நடித்துக்கொடுக்க வசதியாக இருக்குமெனக் கமலஹாசன் ருத்ரய்யாவிடம் சொல்லியிருந்தார். இதனடிப்படையில் நல்லுசாமி, சோமசுந்தரேஸ்வர், ருத்ரய்யா மூவரும் ருத்ரய்யாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையிலேயே கூடி விவாதித்தனர். அந்த விவாதத்தின் போதுதான் 'அவள் அப்படித்தான்' உருவானது. விளம்பரப்படமெடுக்கும் நிறுவனத்தின் பின்புலத்தின் பெண்ணியச் சிந்தனை கொண்ட ஒரு பெண். முற்போக்கான சிந்தனை கொண்ட ஓர் ஆண். அவ்விருவருக்குமிடையே எதையுமே வியாபாரமாகப் பார்க்கும் இன்னோர் ஆண் என்ற ஒரு வரிக்கதையை ருத்ரய்யா உருவாக்கினார்.

இவ்வொரு வரிக்கதைக்கான திரைக்கதையை எழுதும்படி ருத்ரய்யா சோமசுந்தரேஸ்வரைக் கேட்டுக் கொண்டார். அவரோ திரைக்கதையோடு வசனத்தையும் எழுதிவிட்டார். ருத்ரய்யா எதிர்பார்த்திருந்ததைப் போலவே திரைக்கதை மற்றும் வசனம் அமைந்திருந்ததால் நல்லுசாமியை ஒளிப்பதிவாளராகக் கொண்டு படமெடுப்பதெனத் தீர்மானித்து செயலில் இறங்கினார். மஞ்சுவாகப் படாபட் ஜெயலட்சுமியை நடிக்க வைக்கவே ருத்ரய்யா விரும்பியிருந்தார். ஆனால் அவர் அக்காலப்பகுதியில் வேறுபடங்களில் நடித்துக் கொண்டிருந்ததால் இத்திரைப்படத்தில் நடிக்கவைக்க முடியவில்லை. ருத்ரய்யா இது குறித்துக் கமலஹாசனிடம் பேசியபோது அவர்தான் ஸ்ரீப்ரியாவுடன் தொலைபேசியில் கதைத்து இத்திரைப்படத்தில் மஞ்சுவாக நடிக்க சம்மதம் வாங்கினார். அக்காலப்பகுதியில் 'இளமை ஊஞ்சலாடுகிறது' 'ஆட்டுக்கார அலமேலு' போன்ற படங்களில் நடித்து புகழ் பெற்று ஒரு இலட்சம் ரூபாவரை சம்பளம் பெறும் நடிகையாக இருந்த ஸ்ரீபிரியா 'அவள் அப்படித்தான்' கதையைக் கேட்டு இத்திரைப்படத்தில் மிக விரும்பி நடித்ததுடன் சம்பளமாக 18000 ரூபா மட்டுமே பெற்றிருந்தார்.

இத்திரைப்படத்திற்கு முதலில் பிரபல பெண் எழுத்தாளர் அம்பையின் சிறுகதையொன்றின் தலைப்பான 'சிறகுகள் முறியும்' என்பதையே பெயராக வைத்தனர். படத்துக்கு பூஜை போடும் தருணத்தில் அனந்து (எஸ்.பாலசுப்பிரமணியம் இசையமைத்த சிகரம் திரைப்படத்தின் இயக்குநர்) தான். 'அவள் அப்படித்தான்' என்ற தலைப்பை முன்மொழிந்தார். இத்திரைப்படத்திற்கான வசனத்தை சோமசுந்தரேஸ்வர் எழுதியிருந்தாலும் சிற்சில பகுதிகளை எழுத்தாளர் வண்ணநிலவனும், நடிகர் கமலஹாசனும் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத்தில் தியாகு என்ற கதாபாத்திரத்தில் நடிக்க ரஜினிகாந்தைப் பரிந்துரைத்தவர் அனந்துதான். பின்னர் கமலஹாசனும் அனந்துவும் தான் ரஜினியுடன் கதைத்து நடிப்பதற்குச் சம்மதம் வாங்கினர். இப்படத்தில் நடித்ததற்கு ரஜினி சம்பளம் வாங்க மறுத்துவிட்டார். திரைப்படக்கல்லூரி மாணவர்கள் எடுக்கும் படம் என்பதற்காகவே நடிக்க முன்வந்ததாகவும் தெரிவித்திருந்தார். இத்திரைப்படத்திற்கு வசனம் எழுதியதிலிருந்து ஸ்ரீபிரியா, ரஜினி ஆகியோரை நடிக்கவைத்தது, இசையமைக்க இளையராஜாவை ஒழுங்கு செய்தது, பாடல் பாடியது (பன்னீர் புஷ்பங்களே..) எனக் கமலஹாசனின் பங்களிப்பு அளப்பெரியது. ஒருவகையில் கமலஹாசனின் பங்களிப்பு இல்லையென்றால் இத்திரைப்படம் வெளிவந்திருக்காது.

படப்பிடிப்பிற்கென ருத்ரய்யாவிடம் எந்தவொரு திட்டமும் இருக்கவில்லையென்பதால் கமலஹாசன், ரஜினிகாந்த், ஸ்ரீப்ரியா ஆகியோருக்கு நேரங்கிடைக்கும் வேளைகளிலெல்லாம் இவர்களின் வீடுகளிலும் ருத்ரய்யாவின் அலுவலகத்திலும், வீதிகளிலும், புகையிரத நிலையத்திலும் படப்பிடிப்பை நடத்தி முடித்தார். இதுதவிர லைட்போய் இல்லாத போது படப்பிடிப்பை நடத்த சந்தர்ப்பங் கிடைத்தால் ருத்ரய்யாவே லைட்போயாக வேலை செய்வார். அவரிடம் தாழ்வுச் சிக்கலேதும் இருந்ததில்லை.ஒரு நல்ல திரைப்படத்தை வெளிக்கொண்டு வரவேண்டுமென்ற எண்ணமும் அதற்கான தீவிரமான முனைப்புமே அவரிடம் மேலோங்கியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக ஒருவாறு படப்பிடிப்பை முடித்து தணிக்கைச் சான்றிதழ் பெறுவதற்காகப் படத்தை அனுப்பிய வேளை படம் ஆரம்பிக்கும் போது வரும் நடனக்காட்சியை முற்றாக நீக்க வேண்டுமென தணிக்கைக் குழு வலியுறுத்தியது. அந்தக் காட்சியை நீக்கிவிட்டால் படத்தின் கலைத்துவம் முழுமையாகக் கெட்டுப்போய்விடுமென ருத்ரய்யா அக்காட்சியை நீக்க மறுத்து மீள்பார்வைக் கொமிட்டிக்கு அனுப்பினார். அதன் தலைவராக இருந்தவர்

'அந்தநாள்' திரைப்பட இயக்குனரும் மாற்றுத் தமிழ்சினிமாவின் முன்னோடியுமான எஸ்.பாலசந்தர். இத்திரைப்படத்தைப் பார்வையிட எஸ்.பாலசந்தர் வெகுவாகப் பாராட்டியதுடன் படத்தின் தொடக்கத்தில் வரும் நடனக்காட்சியில் சில காட்சிக் கூறுகளை நீக்கும்படி கூறி 'A' சான்றிதழ் வழங்கி வெளியிட அனுமதித்தார். படம் திரைக்கு வந்தபோது மசாலா வகைப்படங்களுக்கு மட்டுமே பரிச்சயமாகியிருந்த தமிழ்த் திரைப்பட ரசிகர் இத்திரைப்படத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் முதல் வெளியீட்டு 'அவள் அப்படித் தான்' தோல்வியடைந்தது. இந்நிலையில் ஹிந்தித்திரைப்பட இயக்குநர் மிருணாள் சென் இத்திரைப்படத்தைப் பார்த்துவிட்டு விதந்தும் புகழ்ந்தும் கூறிய கருத்துக்கள் ஊடகங்களில் வெளியாகியது. இப்போது ருத்ரய்யாவுடன் கூடப்படித்து இதயம் பேசுகிறது மாத இதழில் பணிபுரிந்து கொண்டிருந்த பொன்னுச்சாமி மூலம் இத்திரைப்படத்தைப் பார்த்திருந்த தமிழ்த்திரைப்பட இயக்குனர் பாரதிராஜாவும் சாதகமாக விமர்சித்திருந்திருந்தார். இதனைத் தொடர்ந்து 'அவள் அப்படித்தான்' மீள்வெளியீடு செய்யப்பட்டபோது வெற்றி பெற்றது. இன்றுவரை எந்தவொரு தமிழ்த் திரைப்பட இயக்குனரும் 'அவள் அப்படித் தான்' என்ற திரைப்படத்தின் சாயலில் கூட இன்னொரு திரைப்படத்தை உருவாக்கத் துணிந்ததில்லை. புதிய அலை தமிழ்த்திரைப் படங்களுக்கு ஒரு தொடக்கமாகவும் தமிழ்த்திரைப்பட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகவும் என்றென்றும்

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இராகவன்

## பனுவல் பார்வை

# அவணம்; நவீன கவிதைக்கோர் அகராதி

மென்தூரலுக்குக் கிளம்பி வருகின்ற புற்றீசல்கள் போலக் கவிதைத்தொகுப்புக்கள் மலிந்துவரும் சமகாலத்தில் தான் சோலைக்கிளியின் அவணம் 271 கவிதைகளுடன் தொகை நூலாக முகம்காட்டியுள்ளது. பொருத்தமான தருணத்தில்தான் அவணம் முகம் காட்டியுள்ளது எனத் தோன்றுகிறது. வெளிச்சங்கண்டால் போதும் புற்றீசல்கள் சூழ்ந்து கொண்டு செய்யும் ஆரவாரத்தைத் தாங்கமுடியாது. ஈசல்களை வறுத்துத்தின்னுவோர் நிறைந்த ஊர் என்றால் ஈசல்களின் படையெடுப்புக்காக குதூகலிக்கலாம். இது ஈசல்களை வறுத்துத்தின்போர் நிறைந்திருக்கும் ஊருமல்ல அதனால் குதூகலிக்க முடியாது. கலவரப்படத்தான் முடியும். இங்கே பல்லியும் தவளையும் வௌவாலும் காகமும் குதூகலிக்கலாம். ஈசல்கள் இரவிலேயே பெரும்பாலும் படையெடுப்பதால் காகம் பகலில்தான் குதூகலிக்கலாம். பல்லியும் தவளையும் வௌவாலும் இரவில் குதூகலிக்கத்தடையில்லையென்றாலும் அவையும் தனியனாய் எவ்வளவு ஈசல்களைத் தான் தின்னமுடியும்? அதற்காகத்தான் பெருந்தொகை நூலாக இந்த அவணம் வந்துள்ளது.

கவிதைப்புத்தகங்களைச் சுடுகாட்டிலும் நடுக்காட்டிலும் கடல்நடுவிலும் வெளியிடுகின்ற பரபரப்பான காலமிது. புற்றீசல் படைகளை விழுங்கி வாசகனை இந்த ஆபத்தான தருணத்திலிருந்து மீட்க பல்லி, தவளை, பூனை, வௌவால், காகம் எனப்படை கொண்டு வந்துள்ளது இந்த அவணம். சிறுமியாய் இருந்த ஈழத்து நவீன கவிதையைப் பூப்படைய வைத்து இளங்கன்னியாக்கியது இந்தச்சோலைக்கிளிதான். ஈழத்தின் நவீன கவிதை பற்றிக் கரையத் தொடங்கும் எந்தக் காகமும் சோலைக்கிளியையும் நட்சத்திரன் செவ்விந்தியனையும் சேர்த்துக் கொண்டுதான் கரைய வேண்டியிருக்கும். இல்லையென்றால் என்ன இழவுக்கு இந்த அண்டங்காகங் கரைகிறது? என எரிச்சலுற்று எவராவது சுண்டுவில்லையெடுக்கக் கூடும் அல்லது கண்ணாடியைக்காட்டக்கூடும். இப்போது செவ்விந்தியன் ஓய்ந்துவிட்டான். சோலைக்கிளி ஓயாமல் கனிகளைக் கோதிக் கோதிச்சுவைத்துக்கொண்டிருக்கிறது. சோலைக்கிளி கீச்சிட்டுப்பாய்வது எப்போதுமே செவிக்குணவுதான். அதுவுமிது யுத்தத்தின் துயரத்தை இழைத்து இழைத்துக் கீச்சிட்டுக்கொண்டேயிருக்கிறது. சலிக்கவுமில்லை, அலுக்கவுமில்லை.




### கிள்ளை மொழியழகைச் சொல்லாக்க இயலுமா?

அவணம் சோலைக்கிளியின் 'நானும் ஒரு பூனை'; 'எட்டாவது நரகம்'; 'காகம் கலைத்த கனவு'; 'ஆணிவேர் அறுந்த நான்' ; 'பாம்பு நரம்பு மனிதன்'; 'பனியின் மொழி எழுதி'; 'என்ன செப்பங்கா நீ'; 'வாத்து' ஆகிய முன்னைய தொகுப்புக்களில் இடம்பெற்ற 245 கவிதைகளையும் தொகுப்பில் இடம்பெறாத 26 கவிதைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கிய தொகை நூலாக வந்திருக்கிறது. 1983 தொடங்கி 2008 வரையிலான 25 வருடகால ஈழத்தமிழினத்தின் ஊடுபாவாக யுத்தம் கலந்திருக்கும் வாழ்வியலை எளிமையும் செறிவும் கொண்ட வட்டார வழக்கு மொழியில் சோலைக்கிளி முழுமைப்படுத்தித் தந்திருக்கிறார். இந்தக்கவிதைகளில் எவ்விதமான பாசாங்குமில்லை. போலித்தனமுமில்லை. யுத்தத்தால் வாழ்வு நிலை உருக்குலைந்து திசைதோறும் சிதறிப்போன மக்களது துயருறும் ஆத்மாவின் உயிர்த்துடிப்பை மட்டுமே கேட்க முடியும்.

சோலைக்கிளியின் கவிதைகள் வாசகனைச் சடுதியாக உள்ளீர்த்துவிடும் வசீகரங்கொண்டவை. வேறெந்த கவிஞரும் முதல் வாசிப்பில் பொதுவாக உள்ளீர்த்துவிடுவதில்லை; இதில் மாயமொன்றுமில்லை. சோலைக்கிளி வாசகனின் மொழியில் எழுதிவிடுகின்றார் அவ்வளவுதான். இந்த மொழியாளுகைதான் நெருங்கிய நண்பர் இருவர் தனித்திருந்து இரகசியம் பேசுவதைப்போன்ற நெருக்கத்தை வாசகனுக்கும் கவிதைக்குமிடையில் ஏற்படுத்தி விடுகிறது. இவரது கவிதை வெளிக்குள் மனிதர்கள் வெகு அரிதாகவே உள்நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். மற்றும் படி விலங்குகளுக்கோ, தாவரங்களுக்கோ பிற அஃறிணைகளுக்கோ சோலைக்கிளி கடவுச்சீட்டுக் கேட்பதில்லை என்பதால் இந்தக் கவிதை வெளி விந்தையிலும் விந்தையானது. ஈழத்து நவீனகவிதையின் போக்கினை முழுமையாக புதியதொரு திசைக்கு மாற்றியதும் இந்தக்கவிதை வெளிதான். ஒருகாலத்தில் சேரனையும் ஜெயபாலனையும் தற்புதுமைக்க விஞர்களென கொண்டாட முடிந்தது. இப்போது சேரன் வேறொரு கட்டத்திற்கு தனதுகவிதைகளை நகர்த்திவிட்டார். முன்னர் கணிகை என்று சொன்னதை இப்போது நடிகை என்று சொல்வதைப்போல. அவ்வளவுதான் வேறொன்றுமில்லை. ஜெயபாலனுக்கு நடந்ததுமிதுதான். ஆனால் அடுத்தகட்ட நகர்தலல்ல. இயங்க முடியாதநிலை ஒருகட்டத்திற்குப்பின் ஜெயபாலன் - கவிதைகள் போலி என்ற நிலைக்கு வந்துசேர்ந்திருந்த தேர்ந்த வாசகன் அவர் பீடிகைகளிலிருந்து அதை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டான். இப்போது அவர் நடிகராகிவிட்டதால் விளக்கந்தேவையில்லை. ஆனால் சோலைக்கிளிக்கு எதுவும் நேரவில்லை. எல்லையற்ற குறியீடுகளையும் படிமங்களையும் உருவகங்களையும் கொண்டு ஓயாத கவிதைப்போர் நிகழ்த்தும் வல்லரசாகிவிட்டார். அவணம் இதை மிகைப்படுத்துதல் ஏதுமின்றி நன்குணர்த்துகிறது.

நடந்துமுடிந்த ஒவ்வொரு ஒடுக்குமுறைக்கும், கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கும், சிந்தப்பட்டகுருதிக்கும், தொடர்ந்து நடந்த யுத்தத்தால் சிதைந்த வாழ்வுக்கும், நிலமிழந்து திரிந்த அலைவுக்கும் உலைவுக்கும் இந்த மண்ணின் மனச்சாட்சியாய் சோலைக்கிளியின் இக்கவிதைகள் தோற்றங்கொள்கின்றன. பேசத்துணியாத கருவையெல்லாம் தன் விந்தையான கவிதைவெளியில் உருவாக்கி ஒரு சர்க்கரவர்த்தியாய் வாள்வீசியவரின் துணிச்சல் சொல்லில் சிக்காத ஆயகலைகளுக்கும் மேலான தனிக்கலை. கவிதை எழுதலாமென பேனாவைக் கையிலெடுப்போர்க்கெல்லாம் ஒரு பணிவான வேண்டுகோள் - அவணத்தை ஒருமுறை சோர்வுக்குட்படாமல் வாசியுங்கள். ஏனென்றால் அவணம் நவீன கவிதைகளுக்கோர் அகராதி. இவ்வகராதியை வாசித்து முடித்தபின்னால் உங்கள் கவிதைப்புத்தகத்தைப் பேருந்தினுள்ளேயோ, நடுக்கடலிலோ, நெடுங்காட்டிலோ, மலசலகூடத்திலோ வெளியிடுவதற்குத் தோன்றாது. ■

---

*(63ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

நிலைத்திருக்கக் கூடியதொரு படைப்பாக இத்திரைப்படத்தை உருவாக்கிய ருத்ரய்யா நமக்குப் பிரமிப்பை தருகிறார். இந்த வகையில் தமிழ்த்திரையுலகம் போற்றிக் கொண்டாடியிருக்க வேண்டிய ஒரு மாபெரும் கலைஞனைக் கவனிக்காமலேயே விட்டதுதான் பெருஞ்சோகம்.

ருத்ரய்யா இரண்டாவதாகக் 'கிராமத்து அத்தியாயம்' என்ற படத்தை இயக்கினார். முற்றிலும் மாறுபட்ட கதைக்களங்கொண்ட அத்திரைப்படம் பேசப்படவில்லை. 'ஆத்து மேட்டுல...', 'வாடாத ரோசா பூ..', என்ற இருபாடல்கள் மட்டும் அத்திரைப்படத்தை இன்றளவும் நினைவுபடுத்துகின்றன. அவ்வளவுதான். இதைத்தவிர ருத்ரய்யா சுஜாதாவின் புனைகதையான '24 ரூபாய் தீவு' என்பதைத் திரைப்படமாகக் கமலஹாசனை வைத்து எடுத்துக்கொண்டிருந்தார். ராஜா என்னை மன்னித்துவிடு என்றொரு திரைப்படத்தையும் இயக்கினார். இருபடங்களுமே பாதியில் நின்று விட்டன.

ருத்ரய்யா தனது ரசிகையென அறிமுகமான ஸ்ரீதேவி என்ற பெண்ணை மணந்து கொண்டார். அவருக்கு கங்கா என்ற மகளும், திலீபன் என்ற மகனும் இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் அகிம்சைப் போராளி திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த போது பிறந்த தன் மகனுக்கு ருத்ரய்யா திலீபன் எனப்பெயரிட்டுத் தன்னையொரு தமிழினப் பற்றாளராக வெளிக்காட்டினார். அவர் இறுதிவரை காலச்சுவடு, உயிர்மை, தீராநதி, உயிர் எழுத்து, காட்சிப்பிழை, நிழல், கணையாழி, அம்ருதா, நவீன விருட்சம் என எல்லா இலக்கியச் சிற்றிதழ்களினதும் தீவிர வாசகராக இருந்தார். ஆரண்ய காண்டம், பீட்சா, நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம், சூதுகவ்வும், இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா போன்ற திரைப்படங்களின் தொடர்வருகையினால் ருத்ரய்யா மிகவும் மகிழ்ந்து போயிருந்தார். இத்திரைப்படங்களின் வெற்றியைத் தனக்கு கிடைத்த வெற்றியாகவே கருதினார். விவாகரத்துப் பெற்றுத் தனிமையில் வாழ்ந்து மறைந்த ருத்ரய்யாவுடன் தமிழ் சினிமாவில் புதிய அலையை உருவாக்கும் கனவு மறைந்துவிட்டது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

காலஞ்சென்ற கல்வியாளர் பொ.கனகசபாபதி எழுதிய 'எம்மை வாழவைத்தவர்கள்' எனும் நூலைச் சமீபத்தில் வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்நூல் நமது ஆசிரியப்பணிக்கும் கல்விச் சிந்தனைக்கும் வளமூட்டும் நூலாக அமை ந்திருந்தது. நம்மத்தியில் வாழ்ந்த 23 அதிபர்களின் - ஆளுமைகளின் கல்வித்தடங்களை ஆழமாக வெளிப்படுத்துகிறது. தமிழ்ச்சமூகம் எப்போதும் கல்வி மீது தாகம் கொண்டது. கல்வியே தமது சொத்து என்று மந்திர உச்சாடனம் செய்துவந்துள்ளது.

மேற்குறித்த அதிபர்களின் சிந்தனையும் செயற்பாடுகளும் தான் நமக்கு கல்வியை சொத்தாகக் கருதிக் கொண்டாடக்கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கித்தந்துள்ளது. உண்மையில் இதற்குப் பின்னால் உள்ள கல்விப்புலமையும் அர்ப்பணிப்பும் தலைமைத்துவமும் மதிக்கத்தக்கது. இதன் மூலம் வெளிப்படும் தர்க்க நியாயமும் புரிந்துகொள்ளத் தக்கது. ஆனால் இன்று அப்படியான ஆளுமைகள் கல்விப் புலத்தில் இருக்கிறார்களா என்று தேடித்தான் பார்க்க வேண்டும். அப்படித் தேடினாலும் நாம் ஒருவரையும் காண முடியாது.


ம.கிருபா

## கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மாற்றம் தேவை

கடந்த சில தசாப்தங்களாக நமது கல்வி சார் விழுமியங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இவை மனித சிந்தனையிலும் மனப்பாங்கிலும் நடத்தைகளிலும் நெருக்குதல்களை உருவாக்கியுள்ளன. நமக்கும் கல்விக்கு மிடையேயான தொடர்புகள் குறித்து பல்வேறு கேள்விகளும் பல விசாரணைகளும் உருவாகியுள்ளன. இதைவிட பல்வேறு சிக்கல்களையும் பிரச்சினைகளையும் வீழ்ச்சிகளையும் அடையாளம் காட்டியுள்ளன. தற்போதைய நமது கல்வி ஏற்பாடுகள் மனிதனை பண்படுத்தும் பகுத்தறிவு ரீதியாக சிந்திக்கும் ஆற்றல்களை வழங்கத் தவறிவிடுகின்றது. குறிப்பாக சுயநலமிகளாகவும் மண்ணை விட்டு விதேசிகளாக வாழ்வதைத் தூண்டுவதாகவும் உள்ளது.

திறந்த பொருளாதாரக் கொள்கைகாரணமாக ஏற்பட்ட வெளிநாட்டு வாய்ப்புக்களும் மற்றும் மேற்கு நோக்கிய கவர்ச்சிகளும் பெரும் சவால்களை உருவாக்கியுள்ளன. தொடர்ந்து பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக ஏராளமானோர் புலம்பெயர்ந்து போனமையால் சமூகத் தளத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் நெருக்கடிகளும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். மேற்குறித்த சமூக நிலைவரங்கள் கல்விச்சிந்தனை சார்ந்த விழுமிய மனப்பான்மை நடத்தைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இவை நமது மாணவர்களிடையே ஏற்படுத்தி வரும் பிரச்சினைகள் மீது அதிக கவனம் குவிக்கத் தூண்டுகின்றன. அதாவது சமூக நீதி, சமூக ஜனநாயகம், சமூக சமத்துவம் பற்றிய விழுமியங்களைக் கடத்த முடியாத ஜனநாயக மறுப்புச் சூழல், ஆதிக்க நச்சுச் சூழல் ஆக்கிரமித்து விட்டது. இன்றைய பாடசாலை நிர்வாக முகாமைத்துவமும் கூட இவற்றுக்கு மறைமுகமாகத் துணைபோகின்றன. தற்போது ஊழல் மோசடிகள் ஊற்றெடுக்கும் நிறுவனமாக பாடசாலைகள் மாறிவிட்டன. சில அதிபர்கள் மீது விசாரணைகள் நடைபெற்றுத் தண்டனைகள் வழங்கப் படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஒருவகையில் பாடசாலைகள் தனது நோக்கில் இருந்து தோல்வி அடைந்து வருகின்றன. அதாவது பாரம்பரியமான கல்வி தொடர்பான எதிர்பார்ப்புக்கள் வலுவிழந்து போகின்றன. பரீட்சைக்காகவும் தொழிலுக்காகவும் கற்பதுதான் கல்வி என்ற நிலை உருவாகிவிட்டது. இதைவிட கல்வி பொருளாதார ஈட்டத்திற்கு வழிசமைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வலுப்பெற்றுள்ளது.

'ஒரு முறை பரீட்சை எடுப்போம் பின்னர் எப்படியும் வெளிநாடு போவோம்' என்ற இலட்சியம் மாணவர்களை வழிநடத்துகிறது. மேலும் அபரிமிதமாக வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் உதவிகள் மூலம் 'பகட்டான வாழ்வு' வாழ்வதற்கான ஆடம்பர நுகர்வுக் கலாசாரப் பிடியின் ஆளுகைக் குட்பட்டு வரும் போக்கு தோன்றியுள்ளது. தொடர்பாடல் கருவிகளின் பாவனை ஆதிக்கம் புதிய சமூக அடையாளங்களைத் திணிக்கிறது. இந்தக் கருவிகளைப் பெறுவதற்காக பொய் சொல்லவும்,

**(58ஆம் பக்கம் பார்க்க...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS




**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org